Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

රු 14/00

දිනමුරසු වාරමලර්

ஆக.04-10, 2002

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY பக்: 471

அமெரிக்க விஜயத்தில் ரணில்

எம்.பி.க்களின் அடுத்த பெற்றது என்ன?

ஆன்மீகம்

விரதத்தின் மகிமை



இந்து மதத்தின் சிறப்பம்சங்களுள் விரதம் மிகவும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. நாம் விரதம் மேற்கொள்ளும் நாளில் எமது புலன்களை அடக்கி இறைவனை மனதில் நிலை நிறுத்தி இறைவனுக்காகப் பல விசேட உணவுகளைத் தயார் செய்து படையல் செய்து விரதத்தை முடிப்பது வழக்கம்.

விரதம் இருப்பதன் முக்கிய நோக்கம் "பிற ருடைய பசியை அறிதல்" ஆகும். விரதம் இருக் கும் பொழுது நாம் எப்படிப் பசியை உணர் கிறோமோ அது போலப் பிற உயிர்களும் உணவின்றி வாழும் போது சிரமப்படும் என்பதை ஒவ்வொரு இந்துவும் உணர வேண்டும் என்ப தற்காக எம் முன்னோர் கையாண்ட வழிமுறை இது. விரதத்தின் மகிமை இத்தகைய பெரியது என்பதை உணர்ந்து நாம் ஏனைய உயிர் களுக்கும் உதவ வேண்டும்.

கிருஷ்ணன், சிவா, கெலனிய எஸ்டேட், மஸ்கெலியா.

அஞ்சாதீர்கள்! அவர் உங்களை என்றும் கைவிடார்!

உன் வலதுகையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, "அஞ்சாதே! உனக்குத் துணையாய் இருப்பேன்" என்று உன்னிடம் சொல்பவரும் நானே" **(ஏசாயா 41-13)**

மிகச் சமீபத்தில் திடீரெனத் தன் கணவனை இழந்து போன ஒரு விதவையின் உடைமைகள் அனைத்தையும் பறித்துக்கொண்டு அவளையும் அவளின் பத்து வயது மகனையும் நடுத் தெருவில் விடத் தீவிர முயற்சியிலீடுபட்டனர் கணவனின் நெருங்கிய உறவினர்கள். அவளோ பைத்தியம் பிடித்தவள் போன்று செய்வதறியாது துடி துடித்தாள். என்னிடம் விடயத்தைக் கூறவே, "ஒரு விதவையின் சொத்தை அபகரிக்க நினைப்பவர்களின் பரம்பரையையே இயேசு அழித்தொழிப் பார்! கவலைப்படாதே! இயேசுவின் பாதங்களை உன் கரங்களால் பற்றி, உன் கண்ணீ ரால் அவர் பாதங்களைக் கழுவு, உன் பிரச்சனைகள் நொடிப் பொழுதில் தீரும்" என்று சட்ட நடவடிக்கையெடுக்க வழக்கறிஞரை நாடினேன். வழக்கறிஞரோ, இவளது பரிதாபகரமான கதையையும், நிலைமையையும் உணர்ந்து, "நீ எனக்குப் பணம் தர வேண்டாம்" எனக் கூறிச் சட்ட நடவடிக்கையெடுத்து வாதாடுகின்றார்.

பார்த்தீர்களா! நாம் நேர்மையாக நடக்கும் போது நம் பரம தந்தை இயேசு எப் படி தன் பிரதிநிதிகளையனுப்பி எம் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறாரென்று!

பிரச்சனையுள்ள உள்ளங்களே! அவர் பாதங்களை அணைத்துக் கண்ணீரால் கழுவுங்கள், தவறாது உங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பார். பிரச்சனை உண்மை யானதாக வேண்டும்.

ஜோசப் அருள்சாமி, இராணி மகால், இரஜவெல.

தாயின் புகழ்

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு ஒரு தாய் எந்தளவு கஷ்டப்பட்டிருப்பாள் என்பதை மனித ஜீவன்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தப் புனித தாய்க்கு நாம் எதைப் பரிசாகக் கொடுத்தாலும் நிகரேது?

சம்பூரண இஸ்லாத்தில் தாய்க்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் பற்றி நிறைய வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

மனிதர்களைப் புனிதர்களாய் மாற்றிய, புவி எங் கும் புனித இஸ்லாத்தைப் பரப்ப வந்த அண்ணல் நபி முதல் அவனியிலே தோன்றிய அத்தனை அறி ஞர்களும் தாயின் புகழைக் கூறியே உள்ளனர்.

தாய் என்ற பொன்னான நாமத்தின் சிறப் பினை அறியாத சிலர் தகாத வார்த்தைகளால் தன் தாயின் இதயத்தைச் சுட்டெரிக்கின்றனர்.

இறை தூதர் அவர்கள் கூறுகிறார்கள், "எவன் ஒருவன் தாய், தந்தையர்களின் மனதை நோவினை செய்கிறானோ அவன் நாளை மறுமையில் சுவ னத்தின் வாசனையைக் கூட நுகர முடியாது" என்று. **ஆதாரம்: நூருல் அப்ஸார்.**

மனிதர்களாகப் பிறந்தவர்கள் தாய், தந்தை யர்களின் மனதை நோவினை செய்யாது, என்றும் அவர்களுடன் சந்தோஷமாக வாழ்வார்களானால் அல்லாஹ்வின் ரஹ்மத் அவர்களுக்குக் கிடைக்கும்.

எம்.சி.கலீல், கல்முனை.

கவிதைப் போட்டி இல.468

பரிசுக்குரிய கவிதை

பு(தை)கைத்தல்

உன் உதட்டை கறுப்பாக்கி
உனை உன் பெற்றோருடன்
எதிர்ப்பாக்கி
உறிஞ்ச உறிஞ்ச
இன்பம் தருவான்.
பின்பு வலிக்க வலிக்க
மரணம் தருவான்.
நீ தீ மூட்டுவது
புகைப்பதற்கு அல்ல;
உனைப் புதைப்பதற்கு!

நா. நிரோஸ்-அக்கரைப்பற்று-07.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

தன் வினையோ...!?

பிறர்
கொள்ளியிட்டு எரிக்கும் நிலை
வழமையிலே இருக்கையிலே...
இவர்
குச்சியிட்டுத் தன்னைத்தானே
எரிக்கும் நிலை
ஏன்தானோ...!?

அமானுல்லாஹ். ஏ. மஜீத் - மருதமுனை.

ஈனப் பழக்கம்

தற்கொலைக்கு ஒப்பான
தரங்கெட்ட செயலுக்கு
பிணைபோகும் பாவி மனிதா
வீதியிலே போகும் சனியனை
விலை கொடுத்து வாங்குவது போல்
ஏனடா உனக்கு இந்த ஈனப் பழக்கம்

க. அல் ஆஸாத் - ஏறாவூர்-03.

சிகரட்

வீட்டின் இருட்டொழிக்க
இல்லை ஒரு விளக்கு
உன்னை நீயே அழித்துக் கொள்ள
உதட்டில் நெருப்பிருக்கு
சமாதான தீர்வில் வெளிச்சமடிக்கும் போது
உனக்கு உலகம் இருண்டு விடும்.

பெ. விக்னேஸ்வரன் - ஹட்டன்.

உதடுகளின் உறவு!

நீ உள்ளிழுக்கிறாய் புகையை
வெளியாவது புகையோடு
சேர்ந்து பணம் மட்டுமல்ல,
உயிரும் தான்!
மனிதப் படைப்பே
இறைவன் படைப்பை
அழிக்கப் போட்டி போடுகிறது!

ஏ. எப். எம். றியாட் -
முள்ளிப்பொத்தானை.



சிந்தனை செய் மனமே

"புகையினால் வான்
பரப்பின் ஒசோன்
படையே அழிந்து
போகின்றதே...
அப்போது கூடவா
புரியவில்லை நீ
பிடிக்கும் சிகரெட்டால்
நீயும் அழிந்து
போவாய் என்பது"

வெஸ்ட்ஹோல் -
புவிந்தன்.

த(ற்)கொலை

பேனா முனையால்
எதிரியை வீழ்த்திய
அந்தக் காலம் சென்று...
துப்பாக்கி முனையில்
துரத்திக் கொன்ற
காலமும் சென்று...
இன்று
பகைவனை பக்கத்திலமர்த்தி
"உன்னாலேயே உன் உயிர்
உறிஞ்சப்படட்டும்"
என்ற நவீன காலம்
பிறந்து விட்டதே!
இது கொலையா?
இல்லை தற்கொலையா?
புரியவில்லை

கலையரசி - அனுராதபுரம்.

ஒரு கணம்

பொறு...!
தீ வைக்கப் போகிறாயா...?
எரியப் போவது
சிகரட் மட்டுமல்ல- உன்
சின்ன இதயமும் தான்
பற்றுதலோடு நீ
பற்றவைத்தாலும் பலன்
என்னவோ சாம்பல்தான்
புகைக்கிறாயே
புத்துணர்ச்சிக்கா...?
புற்று நோய்க்கா...?
சிந்தி...!

வை. சித்திகிருஷ்ணா -
பாண்டியிருப்பு-01.

வழியனுப்பல்

விலை கொடுத்து அனுமதிப்
பத்திரம் பெற்று
உயிர் குடிக்க எமனை
கொள்ளி கொடுத்து
வழியனுப்பி வைக்கும்
மரணத்திற்கான
இன்முக வழியனுப்பல் இது.

எம். ஐ. எப். ஜஹான் -
மருதமுனை-03.

கவிதைப் போட்டி இல.471

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.08.2002

கவிதைப் போட்டி இல.471
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

அவதானமாயிரு

பற்றற்ற மானிடா!
பற்றுகின்றாய் சிகரெட்டை
பற்ற வைப்பது யாரவரோ
அவதானமாயிரு
பற்ற வைத்து உன்னை
பைத்தியமாய் அலையவிட்டு
சுருட்டுவார்கள் உன்
திரண்ட சொத்தினை

ஆர். சிநீதரன் - அராலி.

பகைவனே!

நினைத்துக் கொள்
அதைத் தட்டி சாம்பலை
"ஆஸ்ரே"யில் போடுகையில்
நீயும் கொஞ்சமாய்
சாம்பலாகிறாய் என்று
எனவே நான் தீ தந்து
உன்னைக் கொஞ்சமாய்
தீர்க்கப் போகிறேன்.

ஜெ. அபிராமி - கல்முனை.

புரியவில்லையா?

மது அருந்திய மப்பால்
நினைவிழந்து நிற்கும்
உனக்கு நாட்டியக்காரி
ஏற்றுவது சுகத்தை அல்ல
மாரடைப்பு எனும் கொடிய
நோய் என்பதை உணர்வாயா?

எல். ஜெயராணி - ஹப்புத்தளையூர்.

ஆயுதம்

தன்னுயிரை உறிஞ்சப்
போகும்
எமனுக்கு இரு கரம்
நீட்டி
இன்முக வரவேற்பு
எடுத்தவர் தன்
தலையெழுத்தைக்
கிறுக்கச்
சொல்லி, இறைவன்
கொடுத்த பெரு மாயுதம்

மு. ப. நிஸ்வி - மருதமுனை-03.

வாசகர் சாலை

தமிழ்த் தாயின் திகட்டான முரசே! வணக்கம்.

நீ தினமும் காவியமாகப் படைத்துவரும் அம்சங்கள் அனைத்தும் தமிழ் மண்ணில் ஓர் முதன்மைக் காலடி. அதிலும் கவிதைப் போட்டி ஒரு தில் சினி விசிட், ஓர் பாபா, இப்படிப்பட்ட பல காவியங்களினூடாகத் தமிழனின் வாழ்க்கை வழிகாட்டியாக நீ வழிகாட்டிச் செல்வதோடு உன் வழிகாட்டலிலே பல முகம் தெரியாத நண்பர்களையும் ஒன்று சேர்க்கின்றாய். இவை அனைத்தும் சிற்பங்களாகத் தமிழ் மண்ணில் நிலைக்க வேண்டும் என எண்ணி நீ வாஞ்சியுடன் நாதனாய் பூப்பறிக்க வருவதோடு உன்னை நினைக்காத நாளில்லை. என்னைக் கொடுத்து உன்னை வாங்குகிறேன், ஹலோ! நீ வருவாயென!

கோ. வினேஸ்வரன், வவுனியா.

மரியாதைக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

'தினமுரசு' வாரமலர் என்றும் தமிழ் பேசும் மக்களுக்கு அறிவுக்களஞ்சியம் என்பதை என்னால் ஆணித்தரமாகக் கூறமுடிகின்றது. 'காற்றுவாக்கில்', 'நெட்டிலிருந்து', புதிய அம்சங்கள். உலகளாவிய ரீதியில் தமிழ் பேசும் சமூகத்தினரிடையே தனித்துவமாக 'ராஜநடை' போடுவது தினமுரசே. இதை எந்த தமிழ் பேசும் குடிமகனும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. 10வது ஆண்டில் காலடி வைத்துள்ள முரசுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

திருமதி பி.கே. சங்கரலஷ்மி, நெல்லியடி, கரவெட்டி.

அன்பின் முரசே!

உன் அபிமான வாசகர்களில் நானுமொருத்தி. வாரம் தவறாமல் உனைப் படித்து வருகிறேன். நீ சுமந்து வருகின்ற அனைத்து அம்சங்களுமே என்னைக் கவர்ந்துள்ளன. அதிலும் "நெட்டிலிருந்து" பக்கத்தில் பிரசுரமாகின்ற புகைப்படங்களும் தகவல்களும் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. அதே போல் "தகவல் பெட்டி" நாம் அறிந்திராத பல அரிய தகவல்களை அறிந்து கொள்ள வழி வகுக்கின்றது. இவை மட்டுமல்ல உன்னுள் அடங்கிய அனைத்து அம்சங்களுமே எமக்குப் பய னுள்ளதாகவே உள்ளது. உன்னை எம் தனிமையைப் போக்கி, பொழுதைக் கழிப்பதற்காகப் பயன்படுகின்ற ஒரு சாதனமாய் எண்ணாது நம் வளர்ச்சியில் பங்கேற்கும் ஓர் உற்ற நண்பனாகவே கருகின்றேன். எனவே நீ என்றும் எமக்குத் துணையாய் புதிய பல அம்சங்களைச் சுமந்து எம் கரங்களில் தவழ வேண்டுமென உன்னை என் உளமார வாழ்த்துகின்றேன்.

ஷர்மிளா பரீட், கலேவெல.

பத்து வயதாகும் தினமுரசு!

10ஆவது ஆண்டைத் தினமுரசு எட்டிப் பிடிக்கிறது என்று தினமுரசு பத்திரிகை மூலம்தான் அறிந்தேன். அதற்கு எனது வாழ்த்துக்கள். நானும் இங்கிலாந்து நாட்டுக்குக் காலடி வைத்து 10ஆவது ஆண்டு ஆரம்பம். அன்று தொட்டு இன்று வரை எனக்கும் இலங்கைச் செய்திகளைச் சுடச்சுட அறியத் தந்தது இந்தத் தினமுரசே. கடவுள் ஆசீர்வாதமும் மக்கள் ஆசீர்வாதமும் என்றும் உனக்கு உண்டு.

ஆனந்தஜோதி, லண்டன்.

தினமுரசே வாழ்க
வண்ணத் தமிழோடு
வான வீதியோடு
வாரமொரு முறை
வந்தெம் கண்களுக்கு
விருந்தளிக்கும்
தினமுரசு
வாரமலரே நீ வாழ்க

தேன் தமிழோடு
தேசம் பல கடந்து
வீசும் தென்றல்
காற்றாய்
வீறுநடை போட்டெழும்
வாரமலரே நீ வாழ்க

இணுவையூர் சக்திதாசன்,
டென்மார்க்.

உங்கள் பக்கம்

இது என்ன சபை?

பனை அபிவிருத்திச் சபைக்கு சம்பந்தப் பட்ட அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பனையுடன் எவ்வித தொடர்பும் அற்றவர்கள், துறைசார் நிபுணத்துவம் இல்லாதவர்கள் என்ற குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இது குறித்து வாச கர் ஒருவரின் கருத்து இது.

பனை அபிவிருத்திச் சபையில் பனைசார் அறிவும் ஆற்றலும் அனுபவமும் மிக்கவர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதே இதுவரை இருந்து வந்த நடைமுறை. அது மட்டுமின்றி வடக்கு- கிழக் கிலேயே பனை அதிகமாகக் காணப்படுகின் றது. இதுகால வரை இச் சபைக்கு அங்கத்த வர்களை அரசு வடக்கு கிழக்கிலிருந்தே தெரிவு செய்து வந்தது. ஆனால் இம்முறை அமைச்சர், பனை அபிவிருத்தசபைக்குப் பொறுப்பாக இதுவரை இருந்த அமைச்சர்கள் கையாண்டு வந்த நடைமுறையையும், இச் சபையின் அடிப்படை நோக்கத்தையும் முற்றாகத் தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு அமைச் சின் செயலாளர்- மேலதிக செயலாளர்- ஆலோசகர்-தொடர்புச் செயலாளர் போன்ற வர்கள் உறுப்பினராக நியமிக்கப்பட்டது பனைத் தொழிலோடு சம்பந்தப்பட்ட சமூகத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நியமனங்கள் மூலம் பனை அபிவிருத் திச் சபையின் பணிக்கு ஊக்கம் கிடைக்குமா? என பனையோடு தொடர்புடைய தொழிலா ளர்களே கேள்வி எழுப்புகின்றனர்.

நியமிக்கப்பட வேண்டியது பனை அபி விருத்திச் சபையின் பணிப்பாளர் சபையே தவிர இந்து கலாசார அமைச்சின் ஆலோ சனை சபை அல்ல.

அமைச்சு நியமித்துள்ள பனை அபிவிருத் திச் சபை உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

உயர்திரு பரமேஸ்வரன்-அமைச்சின் செயலாளர்
உயர்திரு பரமலிங்கம் -
அமைச்சின் மேலதிக செயலாளர்
உயர்திரு பேரின்பநாயகம் -
அமைச்சின் ஆலோசகர்
உயர்திரு கபூர் - அமைச்சின் ஊடக
ஆலோசகர்
உயர்திரு சம்பந்தர்-
அமைச்சின் இணைப்புச் செயலாளர்
உயர்திரு பொன். பாலசுந்தரம் -
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

எஸ். வரதன், சாவகச்சேரி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

ஜனாதிபதி – பிரதமர் விரிசல்! சமாதான முயற்சிகளைப் பாதிக்குமா?

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும் இடையிலான கருத்து மோதல்களும், முரண்பாடுகளும் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

ஜனாதிபதியின் கைப்பையில் இரகசிய கெமரா இருப்பதாகவும் அதன் மூலம் அவர் அமைச்சரவைக் கூட்டங்களைப் படம் பிடிப்பதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதி மீது குற்றஞ்சாட்டியிருந்தார். ஜனாதிபதி தனது கைப்பையில் குண்டைப் பொருத்தி வந்து பிரதமரைக் கொலை செய்யத் திட்டமிடுவதாக ரவி கருணாநாயக்க கூறினாரென ஜனாதிபதி குமாரதுங்க அமைச்சர் கருணாநாயக்க மீது பாரதூரமான குற்றச்சாட்டொன்றைச் சுமத்தியிருந்தார்.

இந்தப் பரஸ்பர குற்றச்சாட்டுக்களையடுத்து நாளுக்கு நாள் மோசமாகி வந்த அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான உறவு ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கிவிட்டு கருஜயசூரியாவைப் பிரதமராக நியமிக்கவும், பாராளுமன்றச் செயற்பாடுகளை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கவும் ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரவி கருணாநாயக்கவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியினால் பிரதமருக்கு வழங்கப்பட்ட பணிப்புரையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புறக்கணித்திருந்தார். இதனையடுத்து அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்ய அரசியலமைப்பு ரீதியாகத் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் குறித்து விலாவாரியாக விளக்கி ஜனாதிபதி குமாரதுங்க பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

டிசம்பர் 5 ஆம் திகதி ஐ.தே.மு அரசு பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இத் திகதியின் பின்னர் எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஆதலால் டிசம்பர் 5 க்கு முன்னர் பாராளுமன்றத்தில் குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்து விட வேண்டும் என ஐ.தே.க. எம்.பி.க்கள் கட்சித் தலைமையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான இந்த கயிறிழுப்பு இனிமேல் இவர்களால் கருத்தொருமிப்புடன் செயற்பட முடியாதபடி இரு தரப்பையும் பகைமைக்குள் தள்ளிவிட்டுள்ளது. ஆதலால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் இடைக்கால நிர்வாகம் போன்ற முக்கியமான தீர்மானங்களின்போது அரசாங்கம் ஜனாதிபதியின் அங்கீகாரத்தை எவ்வாறு பெறப்போகிறது என விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மடு யாத்திரீகர் மூவர் கொலை புலிகளால் இருவர் கைது

மடுவுக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த சமயம் கொலை செய்யப்பட்டு மன்னார் தட்சணாமருதமடு பகுதியில் சடலங்களாக மீட்கப்பட்ட மூன்று பேரின் கொலை தொடர்பான விசாரணைகளில் வவுனியா பொலிஸாரும் புலிகளின் காவல் துறையினரும் கூட்டாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் வான் ஒன்றில் மடுப் பகுதிக்கு யாத்திரை மேற்கொண்ட 17 பேரில் 5 பேர் காணாமல் போயினர். ஏனையவர்கள் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர்.

காணாமற் போனவர்களுள் 3 பேரின் சடலங்கள் கடந்த வாரம் தட்சணாமருதமடுவில் நீர்நிலை ஒன்றுக்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

கண்டி அரங்கவிலையைச் சேர்ந்த, டபிள்யு.ஆர்.எம்.குலதுங்க, திகன ரஜவெல்லையைச் சேர்ந்த டி.எஸ்.ரத்னசிங்க, மாத்தளையைச் சேர்ந்த ஆர்.மகேஷ் குமார ஆகியோரது சடலங்களே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இடம்பெற்ற இந்த மர்மக் கொலைகள் தொடர்பாக விசாரணை செய்யவெனப் பொலிஸார் விசேட குழுவொன்றினை நியமித்துள்ளனர்.

இது போர் நிறுத்த மீறலுடன் தொடர்புபட்ட செயலாக இருக்க முடியாது எனவும் திட்டமிட்ட குற்றச் செயல் என்றே தாங்கள் இதனைக் கருதுவதாகவும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைகள் தொடர்பாக 2 பேரைக் கைது செய்த புலிகள், அவர்களை மேலதிக விசாரணைக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வோதயத்தின் சமாதான தியானம்

சர்வோதய அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இளைஞர் முகாமும், சமாதான தியான நிகழ்வும் எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடெங்கிலும் உள்ள சமாதான கிராமங்களில் இருந்து 500 இளைஞர், யுவதிகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளும் கலந்து கொள்வர்.

கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன தலைமையிலான சர்வோதய அமைப்பு நாடெங்கிலும் 14 கிராமங்களில் செயற்படும் பாரிய அளவிலான அரச சார்பற்ற சமூக சேவை அமைப்பாகும்.

மீதி வெடியில் சிக்கிய இளைஞர்கள் படுகாயம்

கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு பொலனறுவை எல்லையிலுள்ள ரிதீதென்ன கிராமத்தில் பொறி வெடியில் அகப்பட்டு இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

எச்.எம்.சுபைர் (27) என்பவர் தனது வலது காலை இழந்துள்ளார். எம். எப். அமீர் (27) என்பவர் வயிற்றில் படுகாயமடைந்துள்ளார். வாழைச்சேனை மத்தி புதிய பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது இந்த ரிதீதென்ன கிராமம். இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள காட்டுப் புறங்களில் பொறி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாமென அப் பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

கிராமத்தை அண்டியுள்ள காட்டுப் பகுதியில் வழமையான பாதையூடாக விறகு சேகரிக்கச் சென்றபோதே இந்த இளைஞர்கள் மிதிவெடியில் சிக்கியுள்ளனர்.

'வற்'வரி அழுல்

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் 'வற்' எனப்படும் பெறுமதி கூட்டப்பட்ட வரி அமுலுக்கு வருகின்றது.

இந்த வரி சகல பொருட்கள், சேவைகள் மீதும் 10-20 சதவீதத்தில் அறவிடப்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால்,28 அத்தியாவசியப் பொருட்களுக்கும் 14 சேவைகளுக்கும் 'வற்' வரியில் இருந்து விலக்களிக்கப்படுவதாகத் தற்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்ற விடுமுறையின் போது கவனம் செலுத்தப்படும்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகிகளுத்துறை உட்பட நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த விவகாரங்களில் நீதிமன்ற விடுமுறைக் காலத்தில் கவனம் செலுத்தப்படுமென்று சட்டமா அதிபர் கமலசபேசன் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாத முதல் வாரத்தின் பின்னர் நீதிமன்ற விடுமுறை தொடங்குகின்றது. அந்த இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை குறித்துக் கவனம் செலுத்தப்படும் என்று அவர் கூறினார். எவ்வாறெனினும் கொழும்பு மாநகரசபை குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட பாரதூரமான நாசகார செயல்களுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடயத்தில் தம்மால் முடிவெதனையும் மேற்கொள்ள இயலாதென்றும் கமலசபேசன் தெரிவித்தார்.

முஷாரப் விஜயத்தில் பொருளாதார ஒத்துழைப்புக்கே முன்னுரிமை

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப் 31ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு வரவிருக்கிறார். ஜெனரல் முஷாரப் இலங்கையில் தங்கியிருக்கும் சமயம் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து அவர் முக்கியமாகக் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் முஷாரப் இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும். 1999ஆம் ஆண்டு அக்டோபரில், அப்போது இராணுவத் தளபதியாக இருந்த இவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுவிட்டுப் பாகிஸ்தான் திரும்பிய தினத்திலேயே இராணுவ சதிப்புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தீர்க்க அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு நாடுகள் பலத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தருணத்தில் ஜனாதிபதி முஷாரப்பின் இலங்கை விஜயம் இடம் பெறுகிறது.

இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளிக்கும் நாடுகளில் ஆசியாவில் முக்கியமான நாடு பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும் முஷாரப்பின் இலங்கை விஜயத்தின்போது பொருளாதார ஒத்துழைப்புக் குறித்த விடயங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பங்களின் விபரம் சேகரிப்பு

கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் பகுதிகள் சிலவற்றில் புலிகள் இயக்கத்தினர் படிவங்களைக் கையளித்துக் குடும்ப விபரங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளார்கள். குடும்பத்தவர்களின் விபரம், அவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கு உள்ளார்கள், உள்நாட்டிலா வெளிநாட்டிலா, புலிகளுடன் எவரும் இணைந்துள்ளார்களா? சொத்துக்கள், வசதிகள், வருமானம் போன்ற இன்னும் பல விபரங்கள் அந்தப் படிவங்களில் கேட்கப்பட்டுள்ளன. இது போன்று வர்த்தக நிலையங்களின் விபரங்களும் புலிகளால் திரட்டப்படுகின்றன.

காலையில் வீட்டுக்கு வீடு கையளிக்கப்படும் விபரக் கொத்துப் படிவங்கள் மாலையில் திருப்பித் தரப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

மட்டு. அரச சார்பற்ற அமைப்புகள் ரி.ஆர்.ஓ.வின் கீழ் செயற்பட உத்தரவு?

வடக்கு கிழக்கில் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் இனிமேல் புலிகளால் நடத்தப்படும் ரீ.ஆர்.ஓ. எனப்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வரும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து அந்தந்த மாவட்டங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், அல்லது இணையம் என்ற பெயரில் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றன.

எனினும் மட்டக்களப்பில் நிறுவப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகமும் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் உள்ளூர் வெளிநாட்டு உதவி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், சர்வதேச நிறுவனங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் சர்வதேச உதவி நிறுவனங்கள் அதிருப்தி கொண்டுள்ளதோடு தம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் உள்ளூரில் எவருக்கும் இல்லையென்றும் கூறுகின்றன.

தேசியக் கொடி சர்ச்சையில் சிக்கிய தமிழ் எம்.பி.

படையதிகாரிகள் முன்னிலையில் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததினால் சர்ச்சையில் சிக்கிக் கொண்டிருக்கிறார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரி.தங்கவடிவேல்.

மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை விட்டுக் கடந்த திங்களன்று படையினர் வெளியேறினர். வடக்கு கிழக்கில் பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் ஒகஸ்ட் 02ஆம் திகதிக்கிடையில் வெளியேறி விட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கமைய கடந்த 12 வருட காலமாக மேற்படி பாடசாலையில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வின் போது தங்கவடிவேல் எம்.பி. இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இது புலிகளுக்குப் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து தங்கவடிவேல் புலிகளின் உள்ளூர் தலைவர்களால் எச்சரிக்கப்பட்டிருக்கிறார். இதேவேளை இவரது வீட்டின் மீது கடந்த திங்களன்று இரண்டாவது முறையாகவும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

முரசம்

புரிந்துணர்வு ஒப்பந்தக் காலக்கெடு முற்றுப்பெற்றுவிட்ட நிலையில்...

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும்
இடையிலான யுத்த நிறுத்தத்துக்கான
புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலக்கெடு
ஆகஸ்ட் 2 ம் திகதியுடன் முற்றுப்
பெற்றுவிடுகிறது. இப் புரிந்துணர்வு
ஒப்பந்தத்தில் இரு தரப்பும்
கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்
காலக்கெடுக்களுடன்
வரையறுக்கப்பட்டிருந்தன.
புரிந்துணர்வு ஒப்பந்தப்படி பல்வேறு
விடயங்கள் நிறைவேற்றப்பட்டு
வந்தாலும் அக் கால அட்டவணை
இங்கு முறையாகப் பின்பற்றப்
படவில்லையென்ற குறைபாடுகள்
இருக்கவே செய்தன. இக் குறைபாடுகளை
சகித்துக்கொண்டே இரு தரப்பும்
விட்டுக் கொடுப்புகளுடன் நடந்து
கொண்டதால் யுத்த நிறுத்தம்
இன்றுவரை காப்பாற்றப்பட்டு வருகிறது.
யுத்த நிறுத்தத்துக்கு ஊறு விளைவிக்கும்
பல்வேறு சம்பவங்களும் இக் காலப்
பகுதிக்குள் நிகழ்ந்துள்ளது. குறிப்பாக
புலிகளின் காரியாலயங்கள்
மற்றும் புலி உறுப்பினர்கள் மீதான
தாக்குதல்கள், வாகரைக் கடலில்
மேற்கொள்ளப்பட்ட படகுத் தாக்குதல்,
கிழக்கில் ஏற்பட்ட முஸ்லிம் கலவரம்,
யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள்
கடத்திச் செல்லப்பட்ட நிகழ்வு
போன்றவற்றைக் கூறலாம். ஆயினும்
இவை எவையும் மீண்டும் ஒரு
யுத்தமாக வெடிக்காதவாறு
பார்த்துக்கொள்வதில் இருதரப்பும்
அக்கறையுடன் செயற்பட்டுள்ளன.
எனினும் இதன் அடுத்த கட்டமான
பேச்சுவார்த்தையை நோக்கிய நகர்வுகள்
தேக்கமடைந்திருந்தன. புரிந்துணர்வு
ஒப்பந்தத்தில் நிறைவேற்றி முடிக்கப்படாத
விடயங்களே இதற்குப் பிரதான காரணமாகச்
சொல்லப்பட்டது. எவ்வாறாயினும்
புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலக்கெடு
ஆகஸ்ட் 2 ம் திகதியுடன் முடிகிறது.
எனினும் அதற்கிடையில் நிறைவேற்றி
முடிக்கப்படவேண்டிய விடயங்கள்
சில இன்னும் முடிக்கப்படவில்லை.
குறிப்பாக ஆலயங்கள், பாடசாலைகள்
போன்றவற்றிலிருந்து படைகளை
விலக்கிக்கொள்ள வேண்டுமென்ற
உடன்பாட்டைக் காலக் கெடுவுக்குள்
நிறைவேற்றி முடிக்க முடியவில்லை. இவ்
இடங்களிலிருந்து படைகளை
அகற்றுவதுபற்றிப் பெரும்
இழுபறிநிலைதான் இறுதிக்
காலம்வரை நீடித்து வந்தது.
இறுதிக் கட்டத்தில்தான் அரசாங்கம்
அதை அமுலாக்க முன்வந்தது.
ஆயினும் காலம் பிந்திவிட்டதால்
காலக்கெடுவுக்குள் அவற்றைப்
பூரணமாக நிறைவேற்றிக் கொள்ள
அதனால் முடியவில்லை. அதனால்
பூரணப்படுத்தப்படாத நிலையிலேயே
இக் காலக்கெடு கடக்கப்படுகிறது.
யுத்த நிறுத்தத்துக்கு
ஊறு விளையாவிட்டாலும்
பேச்சுவார்த்தைகளை அது மிகவும்
பாதித்துவிட்டது. எனினும்
பேச்சுவார்த்தைகள் குறித்த
புதிய முயற்சிகள் தற்போது
நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
காலக்கெடு கடந்துவிட்ட நிலையிலாவது
புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
நிறைவுசெய்து பேச்சுவார்த்தையென்ற
பிரதானமான விடயத்தை
அரங்கேற்ற வேண்டுமென்பதுதான்
சமாதான விரும்பிகள் யாவரதும் அவா.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

அமெரிக்க விஜயத்தில் ரணில் பெற்றது என்ன?

ரணில் அமெரிக்கா போய்த் திரும்பி வந்துள்ளார்.

வெறுமனே அமெரிக்காவுக்குப் போகவில்லை, அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யு. புஷ்ஷையும் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியொருவரை இலங்கை அரசுத் தலைவர் ஒருவர் சந்திப்பது சாதாரணமான விடயமல்ல.

இரு தசாப்தங்களுக்கு முன்னர் ஜே.ஆர் - ரொனால்ட் ரீகன் சந்திப்பு நிகழ்ந்ததன் பின் அடுத்த சந்திப்பு இதுவாகத்தான் உள்ளது.

பதினைந்து நிமிடங்கள்தான் இச் சந்திப்பு நிகழ்ந்தது. ஆனால் அது ஒரு சம்பிரதாய பூர்வமான உச்ச நிகழ்ச்சிதான். சம்பந்தப்பட்ட விடயங்கள் பலவும் முன்னரே பேசி முற்றாக்கப்பட்ட பின் நடக்கும் சந்திப்பாகவே இது அமைகிறது.

எனவே 15 நிமிடங்கள்தான் பேசினார்கள் என்றவாறு இதைக் குறைத்து எடைபோட முடியாது.

இதேவேளை கடந்த ஆட்சிக் காலத்தின்போது அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி கிளின்டன் தென்னாசிய வீஜயமொன்றை மேற்கொண்டு, அயல்நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கெல்லாம் வீஜயம் செய்தபோதும் அருகிலிருந்த இலங்கையை எட்டிப் பார்க்கக்கூட நினைக்கவில்லை.

அதைப்பற்றி மனவருத்தப்படக்கூட இலங்கை தன்னை அருகதையற்றதாகக் கருதியிருந்திருக்கக் கூடும்.

அந் நிலையிலிருந்து இப்போது இலங்கைப் பிரதமர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திக்கக் கூடிய நிலை ஏற்பட்டது ஒரு பாரிய மாற்றம்தான்.

இதில் சர்ச்சைக்குரிய விடயம் ஒன்று மறைபொருளாகிக் கிடக்கிறது.

அதாவது அமெரிக்காவின் அதி உயர்ந்த அரசுத் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி.

இலங்கையின் அதியுயர்ந்த அரசுத் தலைவர் இலங்கை ஜனாதிபதியென்றே அரசியல் யாப்புக் கூறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி இலங்கையின் அதியுயர் அரசுத் தலைவரையே சந்திப்பது ராஜதந்திர நடைமுறை.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பதாக அல்லாமல் பிரதமரையே சந்தித்துள்ளார்.

இது இலங்கை ஜனாதிபதிக்குச் சங்கடத்தைக் கொடுக்கக்கூடிய விடயம்.

ஏனெனில் இலங்கையின் அதியுயர் அரசுத் தலைவர் பிரதமர் ரணிலே என்ற ஒருவகை அங்கீகாரத்தை அமெரிக்கா வழங்குவதுபோலாகிவிட்டது.

இதன் மூலம் ரணில் மீக ராஜதந்திரமாக ஈட்டிக் கொண்ட இலாபம் என்னவென்றால், நாட்டு மக்களுக்கு நடைமுறையில் தான்தான் அரசுத் தலைவரென்றும் அதையே அமெரிக்கா முதற்கொண்டு சர்வதேச நாடுகள் அங்கீகரித்துள்ளனவென்றும் வெளிக்காட்டியுள்ளதுதான்.

இத்தகைய ஒரு மறைமுக அங்கீகாரத்தை அமெரிக்கா பிரதமர் ரணிலுக்கு வழங்கியதனால் ஆத்திரமுற்ற தன் வெளிப்பாடாகவே ஜனாதிபதியின் ஆலோசகராகப் பணியாற்றும் அவரது தம்பியாரான அனுரா பண்டார நாயக்கா வீசனித்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் யுத்தம் வெடித்தால் அமெரிக்கா இலங்கைப் படைகளுக்கு உதவுமென ரணில் கனவு காண்கிறாரென்றும், தான் அத்தனகல தொகுதியில் மட்டும் பத்தாயிரத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க ஜனாதிபதி புஷ் வெறும் 800 வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றியீட்டியிருக்கிறாரென்றும், கள்ள வாக்கில் வென்ற புஷ்ஷு டன்தான் ரணில் கூட்டுச் சேர்ந்துள்ளாரெனவும் அவர் பொருமியுள்ளார்.

ஒருவேளை தான்தான் அமெரிக்க ஜனாதிபதியாகத் தகுதியானவரென்று சொல்லியிருந்தால் இன்னும் வேடிக்கையாக இருந்திருக்கும்.

மேலும் ஒஸாமா பின்லேடனைப் பிடிக்க ஆப்கானிஸ்தானைத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்தியும்கூட பின்லேடனைப் பிடிக்க இயலாதிருக்கும் புஷ்ஷு டன் சேர்ந்து படமெடுத்துப் பிரசாரம் செய்கிறாரென புஷ்ஷையும் ரணிலையும் சேர்த்துக் கிண்டலடித்துள்ளார்.

ஒருவேளை புஷ் இலங்கைக்கு வந்தால் அல்லது ஜனாதிபதியும் இவரும் அமெரிக்கா சென்றால் புஷ்ஷைச் சந்திக்க முயல மாட்டார்களா, அப்படிச் சந்திக்க நேர்ந்தால் படமெடுத்துக் கொள்ள மாட்டார்களா?

இதெல்லாம் விழுந்தாலும் மீசையில் மண் படவில்லையென்ற கதைதான்.

எவ்வாறிருந்தபோதும் ரணிலின் அமெரிக்க வீஜயத்துக்குரிய முக்கியத்துவத்தை மறுக்க முடியாது.

எனினும் இதிலுள்ள கேள்வி என்னவென்றால் இவ் வீஜயத்தால் ரணில் உண்மையில் பெற்றுக் கொண்டதென்ன என்பதுதான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தில் வெளிக் காட்டும் விடயங்கள் அமெரிக்க உறவால் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள வர்த்தகத் துறையிலான வாய்ப்புகள்பற்றித்தான்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தகத்தில் இரட்டை வரித் தவிர்ப்பு ஒப்பந்தம், இலங்கைத் தொடர்பூடகத் துறையில் அமெரிக்கா வழங்கவுள்ள ஒத்துழைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கடனுதவிகளுக்கான உத்தரவாதங்கள்பற்றியே அதிகம் பெருமை பேசிக்கொள்ளப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவுடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுக்கள் பற்றியும் பேசப்பட்டது.

சமாதானப் பேச்சுக்கள் என்ற அடுத்த காலை எடுத்து வைப்பதற்கு முன்னர் அதுகுறித்த ஒரு வகையான பாதுகாப்பு ஏற்பாடாகவே இதுகுறித்துப் பேசப்பட்டுள்ளது.

எனினும் மேலெழுந்தவாரியாக சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்காவுக்கு விளக்க மளித்துள்ளதாகவே வெளியில் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னணியில்தான் அமெரிக்கா இலங்கைப் பாதுகாப்புப் படையையும், புலனாய்வுத் துறையையும் பலப்படுத்துவதற்கு வழங்க இணங்கியுள்ள ஒத்துழைப்புகள்பற்றியும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதற்கு அமெரிக்கா இலங்கைக்கு உதவிகரமாகச் செயற் படுவதற்கான உத்தரவாதத்தையே தேட முற்பட்டதை உணர முடிகிறது.

அதில் எத்தனை வெற்றியீட்டினார்கள், எவ்வகை உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற தகவல்கள் எவையும் வெளிவரவில்லை.

இராணுவத்துக்கும் புலனாய்வுத் துறைக்கும் ஒத்துழைப்பு வழங்க இணங்கியிருப்பதான ஒரு பொதுப்படையான செய்தி மட்டுமே வெளிவந்துள்ளது.

எவ்வாறாயினும் ரணில் அமெரிக்கா சென்ற போது அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டிகளில் அவரது உளக்கிடைகள் சற்று வெளித் தெரிவதைத் தவிர்க்க முடியவில்லை.

அமெரிக்காவில் கடந்த செப்டம்பரில் பின் லேடனால் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னரே புலிகள் வழிக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டார்களென்ற பொருளில் அவர் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்குப் பேட்டியளித்திருந்தார்.

இதன் விளைவாகவே உலகளாவிய அளவில் பயங்கரவாதம்பற்றிய பாரிய விழிப்புணர்வு ஏற்பட்ட தென்றும் இந் நிலைமையாலேயே புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளார்களென்றும் கூற விழைந்துள்ளார்.

இதன்மூலம் புலிகளை வழிக்குக் கொண்டு வந்ததற்கு அமெரிக்கா ஒரு மறைமுகக் காரணி என்ற புகழை நன்றியறிதலுடன் அமெரிக்காவுக்குச் செலுத்தி அமெரிக்காவைக் குளிர்விக்க விழைந்துள்ளார்.

இதேவேளை புலிகள் தலைவர் பிரபாகரன் வன்னியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்கத் தாக்குதலால் தாம் பேச்சுவார்த்தைக்கு வரவில்லையென்றும் அதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே தாம் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்ததாகவும் கூறி இக் கூற்றை மறுத்திருந்தார்.

அம் மறுப்பை நன்கறிந்திருந்தும் ரணில் அமெரிக்காவில் இக் கூற்றைத் திரும்பவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இப் பேட்டியில் அவர் கூறியிருந்த கவனத்துக்குரிய மற்றொரு விடயம் என்னவென்றால், எதிர்வரும் பேச்சுவார்த்தையில் புலிகள் வலியுறுத்தும் இடைக்கால நிர்வாகம் மற்றும் சர்ச்சைக்குரியதாக விளங்கும் நீதித் துறை பற்றிய விடயங்கள்தான்.

அதாவது இடைக்கால நிர்வாகமானது கட்டாயமாக மனித உரிமைகளைப் பேணக்கூடிய வகையில் ஜனநாயகக் கட்டமைப்புக்குள்தான் செயற்படுத்தப்படுமெனவும், இலங்கை அரசின் நீதித்துறையே செயற்படுமெனவும் இவை இல்லாமல் இடைக்கால நிர்வாகத்தைச் செயற்படுத்துவது கடினமெனவும் கூறியுள்ளார்.

இதன் உள்ளார்ந்த அர்த்தம் புலிகளின் ஏக கட்டுப்பாட்டில் இடைக்கால நிர்வாகம் இயங்க மாட்டாதென்பதாகவே புலப்படுகிறது.

குறிப்பாக ரணில் கூறியுள்ளதுபோன்று இலங்கை அரசின் நீதித்துறை இடைக்கால நிர்வாகத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மற்றும் கிழக்கின் சில பகுதிகளில் எவ்வாறு செயற்பட முடியுமென்பது கேள்வியாகியுள்ளது.

அவ்வாறு நீதித்துறை செயற்பட வேண்டுமானால் பொலிஸ் நிலையங்களும் அங்கு செயற்பட்டாக வேண்டியுள்ளது.

இவை சாத்தியமானவையாகப் புலப்பட வில்லை.

ரணில் கூறியுள்ள இக் கூற்றை உண்மையாகவே கடைப்பிடிக்க வேண்டுமென ரணில் விழைவாராயின் இடைக்கால நிர்வாகம் அவர் கூறியது போலவே சிரமமானதாகிவிடும்.

எவ்வாறாயினும் அமெரிக்க வீஜயத்தின் பின் ரணில் தொய்ந்துபோய் இருந்த பேச்சுவார்த்தை முயற்சிகளை உற்சாகத்துடன் தொடர விழைந்துள்ளார்.

இதற்கு அவருக்கு அமெரிக்கா வழங்கிய உற்சாக ஊசி என்ன என்பது மர்மமாக உள்ளது.

அமெரிக்க வீஜயத்தின் பின் உடனடியாக தனது வலது கரமாகச் செயற்படும் அமைச்சர் மிலிந்த மொறகொடவை லண்டனுக்கு அனுப்பி புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளார்.

இலங்கையின் உயர் அமைச்சரொருவர் புலிகளின் உயர்மட்டமொன்றுடன் நடத்திய முதலாவது பேச்சுவார்த்தை இதுவாகும்.

அப் பேச்சுவார்த்தையில் முக்கியமாக மூன்று விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அமுலாக்கப் படவேண்டிய விடயங்கள், இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் ஆகியவையே இதில் ஆராயப்பட்ட விடயங்களாகும்.

இச் சந்திப்பின் முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு தேக்க நிலையில் இருந்ததுடன் அதுகுறித்த நம்பிக்கையீனமான கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன.

பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயின் பங்கை விலத்திக் கொள்வது பற்றிப் பேசப்படும் நிலைக்குக்கூட அது சென்றிருந்தது.

கண்காணிப்பாளர்கள் இருவர் புலிகளால் கடத்தப்பட்டதென்ற சம்பவத்தின் பின் இந் நிலை உருவாகி வந்தது.

மட்டக்களப்பில் ஏ-9 போக்குவரத்துப் பாதை திறந்துவிடப்பட்ட நிகழ்வின்போதும் கண்காணிப் பாளர்களோ, நோர்வே ஏற்பாட்டாளர்களோ பங்குபற்றவில்லை.

தற்போது அமெரிக்க வீஜயத்தின் பின் இவ் விரும்பத்தகாத நிலைமை மாறி பேச்சுவார்த்தை குறித்த விடயங்கள் மீண்டும் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன.

எவ்வாறாயினும் இவற்றின் பின்னணியில் அமெரிக்காவின் ஈடுபாடு எவ்விதமானதாக உள்ளதென்பது இன்னும் புரியாத நிலையிலேயே உள்ளது.

எனவே நாம் முன்னேற்றங்களையிட்டு அளவுக் கதிகமாக எதிர்பாராது அவதானத்துடன் இருக்க வேண்டியவர்களாகவே உள்ளோம். ■

'பொடா'ச் சட்டம் புலி ஆதரவாளர்களை ஒடுக்குமா?

'பொடா'ச் சட்டம் புலி ஆதரவாளர்களை ஒடுக்குமா?

பயங்கரவாதத் தடைச் சட்டமான 'பொடா' தீவிரவாதத்தினை முற்றாக ஒடுக்கிவிடும் ஒரு அற்புதமான ஆயுதமா? அல்லது அரசியலில் எதிரிகளைப் பழிவாங்க உதவும் ஒரு கருவியா?

இப்படித்தான் முதலில் இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் விவாதம் நடந்துகொண்டிருந்தது.

ஆனால், தற்போது அச் சட்டத்தைப் பயன்படுத்துவது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும் என்ற கருத்துத்தான் மேலோங்கத் துவங்கியிருக்கிறது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கைது செய்யப்பட்டபோது ஏற்பட்ட பரபரப்பும், கிலியும் இப்போது சிறிதாக அடங்கிக்கொண்டிருக்கிறது.

'குளிர் விட்டுப் போய்விட்டது' என்ற சொல்லடை தமிழ்நாட்டில் உண்டு. முதலில் ஏற்படும் அச்ச உணர்வு மெல்ல மெல்ல மறைகிறது என்பதே அதற்குப் பொருள்.

அப்படிப்பட்டதொரு நிலை தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறதோ என்று பலரும் நினைக்கின்றனர்.

'புலிகள் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகவே போராடுகின்றனர். அவர்களின் அந்தப் போராட்டத்தினை ஆதரித்தால் தவறென்ன' என்ற ரீதியில் தொடங்கிய பிரசாரம், இப்போது புலிகள் பயங்கரவாதிகளல்ல, போராளிகள். இதை மக்களுக்குப் புரியவைப்பதே எங்கள் குறிக்கோள், உரிமையுங்கூட என்ற முழக்கத்தில் வந்து நிற்கிறது.

பிரபாகரனின் விசிறிகளில் முன்னோடிகள் கூடத் தயங்கிக் கொண்டிருக்கும்போது, தலித் தலைவரான இளைஞர் திருமாவளவன் தான் இப்போது ஆக்ரோஷமாகப் பேசத் தொடங்கியிருக்கிறார்.

அவர், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ், மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

ஆனால், முன்னர் இந்திய உள்துறை அமைச்சர் அத்வானிக்கு வைகோ குறித்துக் கடிதம் எழுதிய போது ஏற்பட்ட பரபரப்பு இப்போது இல்லை. காரணம் குளவிக் கூட்டினைக் கலைத்த கதையாகத் தமிழக அரசு விழித்துக்கொண்டிருக்கிறது என்ற கருத்து பரவலாக உருவாகியிருப்பதுதான்.

கடந்த ஜூன் 29 ம் திகதி மதுரையை அடுத்த திருமங்கலத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் வைகோவும் அவரது ஆதரவாளர்களும் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காகத்தான் முதலில் பொடாவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது.

அது தவறு, கண்டிக்கத்தக்கது என்ற ரீதியில்தான் முதலில் கருத்துக்கள் வெளிவந்தன. பிரபாகரனின் தமிழகப் பிரதிநிதியாகத் தன்னைச் சித்தரித்துக்கொள்ளும் பழ.நெடுமாறன் உட்பட எவரும், 'ஆம், நாங்கள் புலி ஆதரவாளர்கள்தாம். உங்களால் என்ன செய்யமுடியும்?' என்று சவால் விட முன்வரவில்லை.

தரக்குறைவாக எதிரிகளைத் தாக்கும் நந்தன் வார இதழ்கூட 'கைவிட்டு விட்டார் வாஜ்பேய்!'என்றுதான் புலம்பியதே தவிர, 'பொடா என்ன செய்யும்?' என்று வசனம் பேச முடியவில்லை.

மத்திய அரசு, இது மாநில அரசு சம்பந்தப்பட்ட விஷயம் என ஒதுங்கிக் கொண்டது. ம.தி.மு.க. தடை செய்யப்படலாம் என ஜெயலலிதா அறிவித்த போது, அதையும் பரிசீலிக்கலாம் என அத்வானி கூறினார்.

சரி, ஜெயலலிதாவின் மிரட்டல் பலனளிக்கத் தொடங்கிவிட்டது. இனி, பிரபாகரனின் துதி பாடலும், வெற்று முழக்கங்களும் ஓய்ந்துவிடுமெனப் பலரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் உலகத் தமிழர் பேரவை தொடக்க விழா மாநாடு என்று அறிவிப்பு வந்தது.

நெடுமாறன் போன்றோர் ஏற்பாடு செய்திருந்த அம் மாநாட்டில் நிச்சயமாகப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் எழும் என அஞ்சி, சென்னை மாநகரக் காவல்துறை அனுமதி மறுத்தது. ஆனால், அமைப்பாளர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றனர். புலிகளுக்கு ஆதரவாகப் பேசக் கூடாது, பிரசுரங்கள் எதனையும் சுற்றுக்கு விடக்கூடாது போன்ற நிபந்தனைகள் விதித்து, நீதிமன்றம் மாநாடு நடத்த அனுமதி அளித்தது.

ஆனால், நடந்ததே வேறு. இலங்கை அமைச்சர் சந்திரசேகரன்தான் பிள்ளையார் கழிபோட்டார். சிங்களவர்களே மாறிவிட்டார்கள், சிங்கள அரசே மாறிவிட்டது, களத்தில் மோதிக் கொண்டிருந்தவர்கள் பேச்சு வார்த்தையில் இறங்கிவிட்டார்கள், தமிழ் நாட்டுத் தமிழர்களின் ஆதரவும் புலிகளுக்குத்தான், ஏன் அரசியல் தலைவர்கள் மட்டும் அஞ்ச வேண்டும் எனக் கொம்பு சீவிவிட்டார்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பு, அதை ஆதரித்துப் பேசிய தற்காக மத்தியில் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியின் தலைவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையில், தமிழ்நாட்டுத் தலைநகரில் விடுதலைப் புலி புகழ் பாடுவது அரசியல் நாகரிகமா என்று சந்திரசேகரனோ மாநாட்டில் பேசிய மற்ற இலங்கை எம்.பி.க்களோ சிந்திக்கவில்லை.மேடை கிடைத்ததெனத் தங்கள் விசுவாசத்தைக் காட்டிக்கொண்டுவிட்டார்கள். மாநாட்டில் பங்கேற்ற கவிஞர் இன்குலாப், சுப.வீரபாண்டியன் போன்றோர் கூட அடக்கித்தான் வாசித்தார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்துப் பேசும் போது, புலிகளைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது என்ற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள்.

பழ. நெடுமாறனே, "எனது புலிகள் பற்றிய நிலைப்பாடு அனைவரும் அறிந்ததே, மீண்டும் மீண்டும் அது பற்றிப் பேச வேண்டிய அவசிய மில்லை. அதற்கு வேறு மேடையிருக்கிறது. மாநாடு தமிழர் ஒற்றுமைக்காக மட்டுமே!" என்று நழுவிக்கொண்டார். ஆனால், இறுதியாகப் பேசிய திருமாவளவன் பிளந்து கட்டிவிட்டார். புலிகளே இலங்கைத் தமிழர்களின் விடிவெள்ளி என்று பிரகடனம் செய்தார். இத்தனைக்கும் தலித் தலைவரான திருமாவளவன் புலிகளின் ஆதரவாளர் என்றாலுங்கூட, நெடுமாறன் முகாமில் அதிகம் காணப்படுவது கிடையாது. இன்னுஞ் சொல்லப்போனால் புலிகள் இயக்கமே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானது, அல்லது அவர்கள் நிலை பற்றி அதற்கு அக்கறை இல்லை, போரில் மடிய மட்டுமே அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதே பொதுவான புரிதல். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்திற்குள்ளேயே நமது நோக்கங்கள் வேறு, புலிகள் விவகாரத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்றுதான் திருமாவளவனிடம் சிலர் வலியுறுத்தி வந்தார்கள்.

(விடுதலைச் சிறுத்தைகளுக்கும் புலி அமைப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மும்பாய் நகரில் தலித் மக்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டித் தோற்றுவிக்கப்பட்ட 'தலித் பாந்தர்ஸ் ஒஃப் இன்டியா' என்ற அமைப்பை அடியொற்றியே தமிழகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் தோன்றியது)

திருமாவளவனோ மேடை கிடைத்த வுடன் குரலெழுப்பிவிட்டார்.இது தேவையில்லாத வேலை என்று அவருக்கு நெருக்கமானவர்கள் சிலர் வருத்தப்படுகிறார்கள். எப்படியோ பேசிவிட்டார். அடுத்ததென்ன என்பதுதான் கேள்வி.

ஏறத்தாழ ஒரு வாரமாகிவிட்டது. இன்னமும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. வழக்குப் பதிவு செய்வதற்கான அறிகுறிகள் இல்லை. வைகோவை விட சற்றுத் தீவிரமாகப் பேசியும் ஏன் அ.இ.அ.தி.மு.க அரசு தயங்குகிறது? திருமாவளவன் ஒரு தலித் தலைவர் என்பதாலா? அவர் மீது கை வைத்தால் வன்முறை நிகழலாம் என்ற அச்சமா? அதே போல வைகோ மீது 'பொடா' என்றவுடன், நான் கூடத்தான் புலிகளை ஆதரிக்கின்றேன் எனக் கூறிய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மீதும் இன்னும் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அவருடைய தொண்டர்களும் வன்முறையில் இறங்கக்கூடும் என்ற அச்சம் இருக்கலாம். சரி நெடுமாறனை ஏன் கைது செய்யக் கூடாது? அவர்தானே பிரபாகரனின் பிரதம தளபதி. அவரைக் கைது செய்தால் எவருமே அலட்டிக் கொள்ளப் போவதில்லையே! பிரச்சனை என்ன வெனில், வைகோவைக் கைது செய்து, மக்கள் கவனத்தினை ஸ்டாலினின் பதவி நீக்கத்திலிருந்து அரசு திருப்ப முயன்றிருக்கிறது. மேலும் அவரைக் கைது செய்வதன் மூலமாக மற்றப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு ஒர் எச்சரிக்கை விடுக்கவும் அது திட்டமிட்டது. ஆனால், கைது அரசியல் உள்நோக்கமுடையது என்ற பொதுவான கருத்தெழ, உச்ச நீதிமன்றம் வரை இப்போது விஷயம் சென்றிருக்கிறது. இந் நிலையில் மேலும் சில அரசியல் கைதுகளை மேற்கொள்ளத் தமிழக அரசு விரும்பவில்லை. ஒன்று தடாலடியாக, தடை செய்யப்பட்ட அமைப்பான புலிகள் இயக்கத்தினை ஆதரிக்கிறார்கள் எனக்கூறி, ஒரு கை பார்த்து விடுவோம் எனக் களத்தில் இறங்கவேண்டும். அந்த முகாமின் முன்னணித் தலைவர்கள் அனைவரையும் கைது செய்து வழக்கு தொடர வேண்டும்.

அல்லது வெறும் மேடைப்பேச்சுக் குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருக்கலாம். பொருள் ரீதியாகவோ, வேறு எந்த வழியிலோ புலிகளுக்கு ஆதரவு தருவோர் மீது மட்டும் 'பொடா'வை ஏவலாம். இப்போது என்ன ஆயிற்று? ஒரு கட்டத்திற்கு மேல் அரசு செல்லத் தயங்கம் என உணர்ந்து கொண்ட புலிகள் அபிமானிகள் மீண்டும் தங்களது பிரபாகரன் தோத்திரங்களை தொடரத் தொடங்கிவிட்டனர். இது எங்கு போய்முடியும் எனத் தெரியவில்லை. ஆனால் இரும்புக் கரங்கொண்டு ஒடுக்குவேன் எனச் சூளுரைத்த ஜெயலலிதாவிற்கு சமீபத்திய நிகழ்ச்சிகள் ஒரு பின்னடைவு என்பதில் ஐயமில்லை. வைகோவைக் கைது செய்து சிறையிலடைத்ததில் பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அவற்றின் விளைவாகவே ம.தி.மு.க நிர்வாகிகள் அனைவரும், மற்றும் பாவாணர் என்ற புலி ஆதரவுப் பேச்சாளரும் விடுதலையாகிவிட்டதால், அவர்களுக்கெல்லாம் முற்றிலுமாகக் குளிர்விட்டுப் போய்விடும். தெருவுக்குத் தெரு புலி ஆதரவு முழக்கங்கள் கேட்கும். அது மாநிலத்தின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. □

இந்தியாவுக்கோர் பாலம்

இலங்கை, இந்திய சந்தைக்கான நுழைவாயில் என்று அமெரிக்க அரசுத் தலைவர்களிடமும், அதிகாரிகளிடமும், இலங்கையின் பிரதம மந்திரி, அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சிங்கப்பூராக மாற்றும் நீண்டகாலக் கனவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதில் இந்தியாவுக்கான நுழைவாயில் என்பது முக்கியமாகிவிட்டது.

தமிழகத்தின் தென்பகுதிக் கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றைக் கருத்தில் கொண்ட சேது சமுத்திரத் திட்டம் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த விடயம். அதற்கான சாத்தியங்கள் பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

சேது சமுத்திரத் திட்டம் இலங்கையின் நலன்களுக்குச் சாதகமானதல்ல. இத் திட்டம் அமுலுக்கு வந்தால் கொழும்புத் துறைமுகம் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடும்.

மேற்கிலும், கிழக்கிலும் இருந்து வரும் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துச் செல்லும் அவசியமற்றுப் போய்விடலாம்.

இலங்கையின் நலன்களையும் இந்திய நலன்களையும் இணைத்து, இலங்கை அரசுத் தலைவர்கள் பேசுகிறார்கள்.

கிட்டத்தட்ட 28 கி.மீ நீளத்திற்கு மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே இப் பாலம் அமைக்கப்படுவது பற்றிப் பேசப்படுகிறது.

சேது சமுத்திரத் திட்டமாயினும் சரி, இந்தியாவிற்கான பாலம் அமைக்கும் திட்டமாயினும் சரி, இலங்கையின் வட பகுதிக் கரையோரப் பகுதிகள், தீவுப் பகுதிகள், பெருமளவிலான பொருளாதார முக்கியத்துவத்தைப் பெறுவதற்கு வழி வகுக்கும்.

மன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையே சிறிய பெரிய திட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் மீனவர்கள் தங்கி இளைப்பாறுவது, சமைப்பது, வழமையானது.

இராமாயண இதிகாசத்தில் கூறப்பட்ட வானரங்களால் அமைக்கப்பட்ட பாலம், இதுதான் என்பது ஐதீகம். திட்டுக்களுக்கு இடையேயான நீர் மட்டம் 4 - 7 அடிவரையில்தான் இருக்கும்.

இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் ஈழத் தமிழரின் சமூக, பொருளாதார வாழ்வில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

குறிப்பாகப் பொருளாதார ரீதியில் இந்த நாட்டில் மிகவும் பின்தங்கி, யுத்தத்தின் அழிவுகளால் கோரச் சுவடுகளைக் கொண்டிருக்கும் மன்னார்ப் பகுதி, அதனை உள்ளடக்கிய வன்னிப் பகுதி மற்றும் புத்தளம், அனுராதபுரம் போன்ற பகுதிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற வாய்ப்புண்டு. இலங்கையின் இன்னொரு வர்த்தக மையமாக (மற்று மொரு கட்டுநாயக்கா) மன்னார் மாறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஈழத் தமிழர்கள் மாத்திரமல்ல இந்த நாட்டின் சகல இன மக்களும் இன்னொரு பரந்த தளத்தில் செயற்பட முடியும்.

இந்தத் தீவின் பௌதீக ரீதியான தனிமைப்பட்ட தன்மை மனோரீதியான குறுகிய எண்ணங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. அது உடைவதற்கு இந்தப் பரந்த தளத்தில் செயற்படுவது அவசியம்.

வசதியான்வர்கள் ஐரோப்பாவிற்கும், வசதி குறைந்தவர்கள் மத்திய கிழக்கிற்கும் செல்ல, எதுவுமற்றவர்கள் இந்த மண்ணில் கிடந்து உழல வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. மற்றும் தொழில் சார்ந்த காரணங்களும் அபாயம் நிறைந்த பிரதேசங்களில் வாழ நிர்ப்பந்திக்கின்றன.

ஆனால், பாலம் அமைக்கப்படுவது, முடங்கிப் போயிருக்கும் வடக்கு - கிழக்கு சமூகத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கலாம்.

20 வருட யுத்தத்தில், கடந்த 15 வருட நிலைமைகள், இங்கு உருவாகிவிட்ட வன்முறை இந்தியாவிற்குப் பரவியது, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீதான தற்கொலைத் தாக்குதல் என்பன தமிழக-இலங்கைத் தமிழர் உறவில் பாரதூரமான ஒரு நெருக்கடியை ஏற்படுத்தின. இந்தியாவிற்கு விசா பெறுவதில் பல சிக்கல்கள் எதிர் நோக்கப்படுகின்றன. படகுகள் மூலம் இந்தியாவில் தஞ்சம் அடைபவர்களும் பல சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள்.

இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் ஊடாகக் கப்பலில் இராமேஸ்வரம் செல்வதும் பலாலி விமான நிலையத்தில் இருந்து திருச்சிராப்பள்ளிக்குப் பயணம் செய்வதும் இயலக்கூடியதாக இருந்தது.

ஆனால் தமிழகத்தில் ஏற்பட்ட வன்முறைகளின் அதிகரிப்பு ஈழத்தமிழர் பற்றிய ஒரு கசப்பான உணர்வை ஏற்படுத்தியது.

தற்போது அதனைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பது "திரைகடலோடியும் திரவியந் தேடுவது" எமது சமூகத்தின் பாரம்பரியத்தில் காணப்படுகிறது.

பாலம் அமைப்பது இந்திய-இலங்கை உறவில் மாத்திரமல்ல தமிழக-ஈழத் தமிழர் உறவில் கூட ஒரு குணாம்ச ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

தற்போது சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. மன்னார், யாழ்

தாகூர்

குடாநாட்டு மீனவர்கள், தமிழக மீனவர்களிடையே அவ்வப்போது சிற்சிறு சச்சரவுகள் ஏற்படுவது உண்மையென்றாலும், பாரியளவிலான சமூக, பொருளாதார முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்பது திண்ணம்.

இந்தியாவுக்குப் பாலம் அமைக்கப்படுவது என்பது வெறுமனே இலங்கை - இந்தியா என்பதல்ல. இந்தியா-இலங்கை-உலகு, ஈழத் தமிழர்-தென்னகத் தமிழர் என்ற நல்ல அம்சங்களும் அடங்குகின்றன.

சிங்கள மக்களுக்கும் தமது வேர்கள் பற்றிய தேடல் நெருக்கம் என்பன ஏற்படும்.பல இனங்களின் நாடான இலங்கை இந்த உறவில் புதிய ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவது சாலவும் சிறந்தது.

சீதையை இராவணன் சிறை வைத்திருந்தது இலங்கை என்று இதிகாச ஐதீகத்தின் அடிப்படையில் மலையக சீதாஎலிய, ரம்பொடை அனுமார் கோயில் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. சிங்களவர்கள் இந்தியாவின் சரணாத்துடனும், முஸ்லீம்கள் நாகூர் அஜ்மீர் உடனும் நெருக்கமாவர். கிறீஸ்தவர்கள் கேரள தேவாலயங்கள், தென்னிந்தியத் திருச்சபை உறவுகள் பலப்படும்.

ஐரோப்பிய நாடுகளிடையே கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, நெருங்கி வரும் போது நாம் ஏன் நெருங்கிவரக்கூடாது?

இலங்கையையும் இந்தியாவையும் பொறுத்தவரை ஏறத்தாழ ஒரே விதமான சமூக, பொருளாதார சவால்களை இரு நாடுகளும் எதிர் நோக்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீக, கலாசார, பொருளாதாரப் பிணைப்புக்களும் இரு நாடுகளுக்கும் உண்டு.

இந்தப் பிராந்தியத்தின், ஏன் ஆசியாவின் மீகப் பெரும் ஜனநாயக நாடு என்ற வகையில் இது எமக்கு ஒரு வரப்பிரசாதமும் கூட.

காலம் தாழ்த்தாமல் பல்வேறு தளங்களிலும் இந்திய-இலங்கை உறவுகளை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாலம் ஒரு சரியான முயற்சி.

எனினும், தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் மத்தியில் புலிகள் இதனை எவ்வளவு தூரம் கருத்திற் கெடுப்பார்கள் என்பது கேள்விக்குரியதே!

தமது பொருளாதாரக் கொள்கை, திறந்த பொருளாதாரக் கொள்கை எனப் புலிகள் தெரிவித்திருந்தாலும் நடைமுறையில் அவர்களை மையப்படுத்திய பொருளாதாரச் செயற்பாடே காணப்படுகிறது.

இதை மாற்றியமைத்துப் பன்முகப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு மடை திறக்கச் சம்மதிப்பார்களா? என்பதைப் பொறுத்தே இந்த வாய்ப்புக்கள் சரிவரக் கையாளப்படுவது தங்கியுள்ளது.

NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்

Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

LINGAM WEDDING SERVICE

10, Anson Road, # 15-14
International Plaza, Singapore

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அப்பு: 0065-975 14 941

e-mail: lingam_wedding@hotmail.com

தினமுரசு சந்தா விபரம்

சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

நாடுகள்	ஒரு வருடம்	6 மாதம்	3 மாதம்
ஐரோப்பிய நாடுகள்	ரூ. 3000	ரூ.1500	ரூ.750
அமெரிக்கா, கனடா	ரூ. 3650	ரூ.1800	ரூ.900
மத்திய கிழக்கு நாடுகள்	ரூ. 2600	ரூ.1300	ரூ.650
உள்ளூர்	ரூ. 850	ரூ.450	ரூ.250

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

விளம்பரப் பகுதி

Wedding PHOTOGRAPHER

27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933

Stills Vinoth

Your Satisfaction Is My Success

கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிறேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்

விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

அப்பலோ ஒப்ரிசியன்

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

APPOLO OPTICALS

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena,Colombo-13.
T.P: 074-610459

கருத்தினில் நிறைந்தவர்களை சிரத்தையாய் வாழ்த்திட பொருத்தமான மடல்களுக்கு நாடுங்கள்,

இலங்கையின் முன்னணி, வாழ்த்து மடல்கள் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களுமான

Ransca Greetings

No: 142,144
St.Antony's Mawatha
Colombo-13

T.P- 430125,332678,
074-617294
E-Mail- ransca@yahoo.com

எம்மிடம் வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அதிகப்படியான கட்டளைகளை **(Orders)** திரட்டி வரும் விற்பனைப் பிரதிநிதிகளுக்கு விசேட சலுகையுமுண்டு.

வி.பி.பி. ஓடர்களும் உடனுக்குடன் அனுப்பப்படும்.

மலையாள மாந்திரீகம்

பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின வெற்றியின பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடான கோடி நன்றிகள்."

ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்த என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்றிகள்!"

குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்த தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணந்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NI.JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 451137, 45[illegible] Fax: 344831
E-mail: drpksamy@sltnet.lk
www.imexpolanka.com/drpksami.

வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

Eric Rajapakse Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி: 01-592971

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

VHS to VCD

இப்போது உங்களது அதி முக்கியமான திருமணநாள், மற்றும் அதி விசேட நாட்களின் வீடியோ கசட்டுக்களை அதி நவீன உபகரணங்கள் மூலம் CD தட்டுகளாக நீண்ட நாட்கள் பாதுகாக்கக் கூடியவாறு மாற்றித் தரப்படும்.

BLANK CD

BLANK CD
(BRANDED- UNBRANDED)
JEWEL CASE,

விற்பனைக்கு உண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

(தெஹிவளை நகர சபைக்கு எதிரில்)

iT Mall
#10, Frazer Avenue, Dehiwala.
T.P: 01-725916

YOUR VICTORY IS OUR SUCCESS

STUDY IN...

LONDON, USA, CYPRUS, CANADA, SINGAPORE, IRELAND, AUSTRALIA, INDIA, MALAYSIA AND JAPAN

☆ NEW ZEALAND
(must have IELTS, G.C.E. (A/L) and one year tutions fees must be paid)

Basic Qualifications G.C.E. (O/L)

UK = only 500£ down Payment

All Courses Available in any Field

WORLDWIDE UNIVERCITY AGENT IN SRI LANKA.

- JULY / SEPTEMBER BATCH - ENROLMENT NOW ON PROCESS
- EASY PAYMENT METHOD TO ACCOMADATION
- 25% DISCOUNT ON AIR TICKET
- PART TIME JOBS GUARANTEED

M.S. Lanka
Recruitment & Travels (Pvt.) Ltd.
(L.Licence No.1745)

379 2/2, (2nd floor), Galle Road, Wellawatte, Colombo-06
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)
(OUR ALL ACTIVITIES ARE ONLY IN 2ND FLOOR)

(Office) Tel: 074-513442, 074-518928, 074-519157, Fax: 074-518928
Mobile: Mr. Mansoor 077-374314, Miss. Chathurika - 077-672084
Miss. Thushanthini - 077-480943
E-Mail: mslanka@wow.lk web: http/www.mslanka.com

VIDEO PALACE

புதிய தமிழ், ஹிந்தி, ஆங்கிலப் படங்கள் (VCD, VHS) வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.

H.L.G.4, DIAS PLACE, GUNASINGHAPURA, COLOMBO-12.

விதுஜா ஏசியன் சொப்

VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267,
079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

விதுஜா ஏசியன் சொப்

அலசுவது-இராஜதந்திரி

இந்தியா தெரிவுசெய்த ஜனாதிபதி விஞ்ஞான மேதை அப்துல் கலாம்

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக அணுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாம் பதவியேற்றுள்ளார்.

இந்திய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மனமுவந்து இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு இடந்தராது விஞ்ஞானி அப்துல் கலாமைத் தமது ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாகவிருந்த ஆபிரஹாம் லிங்கனது வாழ்க்கை வரலாறு பற்றிப் பல கதைகள் உண்டு.

'மரக் குடிலிலிருந்து வெள்ளை மாளிகை வரை' என்ற தலைப்பில் ஆபிரஹாம் லிங்கனின் வாழ்க்கை வரலாறு பற்றியும் நூலொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறு பராயத்தில் படிப்பதற்குப் புத்தகமொன்றை வாங்குவதற்குக் கூட வழியின்றியிருந்த ஆபிரஹாம் லிங்கன் பின்னர் தன் விடாமுயற்சி, நேர்மை, தன்னம்பிக்கை என்பவற்றால் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்வடைந்திருந்தார்.

19 ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரே ஆபிரஹாம் லிங்கன்.

தற்போது 21 ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், ஆபிரஹாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றை ஒத்ததாகவே புதிய இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் வாழ்க்கைப் பின்னணியும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தமிழக மாநிலத்தின் தென்கோடியில் அமைந்துள்ள இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவரே ஜனாதிபதி அப்துல் கலாம். ஒரு படகோட்டியின் மகனாகப் பிறந்தவர். சிறுவயதில் கல்வி பயில்வதற்குரிய பண வசதிகளின்றிப் பெருங் கஷ்டங்களை எதிர்கொண்டார்.

இந்தியாவின் ஏனைய இடங்களைப் போல விரிவான வசதி, வாய்ப்புக்களைக் கொண்ட பிரதேசமல்ல இராமேஸ்வரம். இந்து மதத்தவர்களுக்கு ஒரு வணக்க ஸ்தலமாக மட்டும் இப்பகுதி பிரபலமானதாக இருக்கின்றது. ஏனைய துறைகளில் பின்தங்கியதாகவே இராமேஸ்வரம் விளங்குகின்றது.

இலங்கையின் கடந்த இரு தசாப்தகால வரலாற்றை எடுத்து நோக்குகையில் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு மிகவும் பரிச்சயமான பிரதேசமாகவே இராமேஸ்வரம் விளங்குகின்றது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் கெடுபிடிகளைத் தாங்கிக் கொள்ள முடியாது அகதிகளாகப் பாக்கு நீரிணையைக் கடந்து படகுகளில் சென்ற வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்குத் தஞ்சமளித்த பூமியாகவே இராமேஸ்வரம் விளங்குகின்றது. இன்றுங்கூட இங்கே பெருமளவிலான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் வடபகுதிக்கு அண்மித்ததாகவிருக்கும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தமது ஆரம்பக் கல்வியைத் தமது ஊரிலுள்ள சிறிய பள்ளிக்கூடமொன்றில் பயின்றார்.

இதன் பின்னர் தமது சகோதரியின் ஆபரணங்களை விற்று உயர்கல்வி பயின்று, முழு உலகையே வியக்கவைக்கும் விதத்தில் அணுசக்தி விஞ்ஞானியாகித் தற்போது இந்தியாவின் ஜனாதிபதியாக அப்துல் கலாம் பதவியேற்றுள்ளார்.

அண்மைக் காலங்களில் இந்தியா,

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தது.

இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பிரச்சனை வலுவடைந்திருந்த அதே சமயம், மகாத்மா காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் இந்து-முஸ்லிம் இனக்கலவரம் மூண்டு லட்சக் கணக்கானோர் இருதரப்பிலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு, இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு மிகுந்த அச்சுறுத்தல் உருவாகியுள்ள இத்தருணத்திலேயே அப்துல் கலாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1998 ம் ஆண்டின் பின்னரே அப்துல் கலாம் இந்தியாவில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியாகவும் பிர பலமடையலானார்.

இந்தியா 1998 ம் ஆண்டு அணுசக்தி பரிசோதனை ஒன்றை மேற்கொண்டிருந்தது.
அப் பரிசோதனையை வடிவமைத்து முன்னின்று நடாத்தியவர் இன்றைய ஜனாதிபதி அப்துல் கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் வல்லரசுப் பட்டத்தையும், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியையும் ஒருங்கே பிரதிபலிப்பதாகவே விஞ்ஞானி அப்துல் கலாம் மேற்கொண்ட அணுசக்திப் பரிசோதனை விளங்கியிருந்தது.

அணுசக்திப் பரிசோதனை மட்டுமல்ல, ஏவுகணைத் தொழில்நுட்பத்தையும் அப்துல் கலாம் இந்தியாவில் அறிமுகஞ் செய்திருந்தார். இந்திய இராணுவத்திற்குத் தேவையான நெடுந்தூர, குறுந்தூர ஏவுகணைகளைத் தயாரிப்பதில் இவரே முன்னோடியாகவும் இருந்தார்.

இஸ்லாமியத் தமிழரான அப்துல் கலாமை ஜனாதிபதியாக்கியிருப்பதன் மூலம் இந்தியாவின் சிறுபான்மை மக்களான முஸ்லிம்களையும் முதன்மைப்படுத்தியுள்ளதையும் காணமுடிகின்றது.

ஏற்கனவே, முஸ்லிம்களான இருவர் இந்தியாவின் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர்.
ஸாஹிர் ஹுசைன், பக்ருதீன் அலி அஹமட் ஆகியோரே அவ்விரு முஸ்லிம் ஜனாதிபதிகளுமாவர்.

தற்போது இந்தியாவின் முன்றாவது முஸ்லிம் ஜனாதிபதியாக விஞ்ஞானி அப்துல் கலாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமது பதவியேற்பு வைபவத்தின் போது தாம் எவ்வளவு தூரம் தமிழைப் போற்றுபவர் என்பதை ஜனாதிபதி அப்துல் கலாம் நிரூபித்திருந்தார்.

திருக்குறளில் பொருட்பாலில் வரும், "பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" என்ற குறளைத் தமது பதவியேற்பு வைபவ உரையில் ஜனாதிபதி அப்துல் கலாம் குறிப்பிட்டிருந்தார்.

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர் என்பதே அக் குறட்பாவின் அர்த்தமாகும்.

ஜனாதிபதி இக் குறட்பாவை இந்தியாவின் ஆட்சியாளர்களும், கல்விமான்களும், இராஜதந்திரிகளும் நிறைந்திருந்த சபையில் தமிழிலே கூறி, அதன் பொருளை ஆங்கிலத்தில் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் அவரது தமிழ்ப் பற்று மட்டுமல்ல. குறுகிய எல்லைகளைக் கடந்த அவரது உயர்ந்த சிந்தனையும் வெளிப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இன்று இந்தியாவில் மட்டுமல்ல. உலகில் பெரும்பாலான நாடுகள் அனைத்திலுமே நோய், பிணி, வறுமை, கலகம் போன்றன மலிந்திருக்கின்றன.
கோடிக்கணக்கான மக்கள் ஒருநேர உணவிற்குக் கூட வழியில்லாது அல்லற்படுகின்றனர்.

ஆயுதங்கள் மக்களைப் பாதுகாக்கத் தவறியவையாகவும், அழிவையும், அவலத்தையும் நாளாந்தம் உண்டு பண்ணுபவையாகவும் இருக்கின்றன.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றில்லாது இனம், நிறம், மொழி, மதம் என்ற பிரிவினைகளால் இரத்தவடுக்கள் உலகில் அதிகரித்து வருபவையாக இருக்கின்றன.

இயற்கை வளங்களை நாசமாக்க முற்பட்டு இன்று முழு உலகுமே

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.-குறள்

வெள்ளம், வறட்சி, பூமியதிர்ச்சி போன்ற பாரதூரமான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவல நிலையேற்பட்டுள்ளது.

இந் நிலையில் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் கூறிய குறட்பா இந்தியாவிற்கு மட்டுமல்ல. முழு உலகிற்குமே கூறப்பட்டதொன்றாகவே இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே இருக்கின்றன.

அந் நாட்டின் விரிவான அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய மாநிலங்களுக்கான சுயாட்சி, சுயமாகவே விவசாய, கைத்தொழில், விஞ்ஞானத் துறைகளில் ஈட்டியுள்ள வளர்ச்சிபோன்றவை தென்னாசியப் பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்கவையாகவே இருக்கின்றன.

புதிய ஜனாதிபதி அப்துல் கலாம் கூட இந்தியாவின் அனைத்துத்துறை வளர்ச்சி மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றை நன்கு பிரதிபலிக்கும் ஒரு தனிநபராக இருப்பதையே அவதானிக்க முடிகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று இனப்பிரச்சனையே ஒரு சாபக்கேடாக இருந்து வருகின்றது. இப்பிரச்சனையைத் தீர்த்து வைத்திருக்கவேண்டிய காலப்பகுதிகளையெல்லாம் தவற விட்டதன் விளைவாகவே இன்றைய சந்ததி இலங்கையர்கள் சமாதான சகவாழ்விற்காக நிறையவே விலைகொடுக்க வேண்டியோராக இருந்துவருகின்றனர்.

எனவே, இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இந்தியாவில் சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் அந்நாட்டின் ஜனாதிபதி அப்துல் கலாம் மூலமாக வெளிப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற ஆடிவேல் விழா கூட இன அன்னியோன்னியத்திற்கு நன்கு சான்று பகருவதாகவே விளங்கியிருந்தது.

1983 ம் ஆண்டு ஆடிக் கலவரம் மூண்டபோது கூட ஆடிவேல் விழா இடம்பெற்றிருந்தது. அப்போது கலகக்காரர்கள் வெறிகொண்டலைந்தபோது வீதிவலம் வந்த ஆடிவேல் ரதத்தினைக்கூட இராணுவ பாதுகாப்புடனேயே அதன் இருப்பிடத்திற்குக் கொண்டுவர வேண்டியிருந்தது.

ஆனால், எட்டு வருடங்களின் பின்னர் இத்தடவை இடம்பெற்ற ஆடிவேல்விழா சிங்கள, தமிழ் மக்களை மட்டுமல்ல, முஸ்லிம் மக்களைக்கூட ஒன்றிணைத்ததாகவே அமைந்திருந்தது.

ஆடிவேல் ரதத்தில் வீதி வலம் வந்த முருகப் பெருமானுக்கு நாதஸ்வர அஞ்சலி செலுத்துவதற்கு இந்தியாவிலிருந்து இரு வித்துவான்கள் வந்திருந்தனர்.

இந்த இரு நாதஸ்வர விற்பன்னர்களும் மறைந்த தமிழக நாதஸ்வர மேதை ஷேக் சின்ன மௌலானாவின் பேரப் பிள்ளைகளான எஸ்.காசிம், எஸ்.பாபு என்ற சகோதரர்களாவர்.

இந்த இரு இஸ்லாமிய நாதஸ்வர வித்துவான்களின் நாதஸ்வர இசையில் ஆடிவேல் முருகன் வீதியுலா வந்த காட்சி இன, மத, மொழி பேதங்களைக் கடந்த ஓர் உன்னதமான உணர்வை ஏற்படுத்துவதாகவே இருந்தது.

அதிரடி அய்யாத்துரை

தாங்கள்தான் புலிகளின்ர பிரதிநிதிகள் மாதிரி ஜம்பம் காட்டிறவை, ஜனாதிபதி கருத்தரங்குக்குக் கூப்பிட்ட உடன வழிஞ்சுகொண்டு போய் உறவாடினதோட நில்லாமல் உற்சாகக் கிறக்கத்தில உள்ளுக்கிருக்கிறத உளறிப்போட்டும் வந்திட்டினம். நடிகர் திலகத்தின்ர பேரில அரசியலீல நடிக்க வந்தவர் சொன்ன ஐடியாவக் கேட்டியளே. ஐ.தே.க.வும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமிழ் மக்களுமாச் சேந்து புலிகளுக்கு அழுத்தம் குடுக்க வேணுமாம். புலிகளின்ர பெயரைச் சொல்லி தோத்தலுக்கு வாக்குக் கேக்கக்க இதை அவர் சொல்லியிருக்கலாமெல்லே. அதுசரி எங்கட சம்பந்தமானவர் விட்டாரே. சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தூடக்கி வைச்சவர் சந்திரிகாதான், அவதான் இதை முடிச்சு வைக்கவும் வேணுமாமெண்டு குழைஞ்ச குழைவு, நாய்க்குட்டி தோத்துதுங்கோ. அவவக் கண்டவுடன இப்பிடி வாலாட்டிறவர் வெளியால என்ன மிடுக்காக் காலாட்டிக்கொண்டு கதைவீடு றாரெண்டதத்தான் நீங்களும் பாக்கிறியளே. அடேங்கப்பா! என்னா எம்டனுங்க!

பிரேமையில இருக்கிற அந்தப் புரட்சிகரக் கட்சித் தலைவர் தன்ர வரலாற்றுக் கடமையை ஒருபடியா ஒப்பேற்றி முடிச்சிட்டாருங்கோ. அதாவது தன்ர குடும்பத்த அமெரிக்க வீசாவில கனடாவுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திட்டார். அப்பாடா! தமிழ் மக்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்கக் கூடாதெண்டு இனி அவர் துணிவாய்ப் பேசலாம். மற்றப் பக்கத்தால, பாதுகாப்பு அமைச்சுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்ட எதிர்த்துக்கொண்டே, அரசாங்கத்தோட டில் போட்டு பாதுகாப்பு அமைச்சிட்டயிருந்து மாசாமாசம் பத்து லகரங்கள் வரை சுளையாக் கைமாறு பெற்றுக்கொள்ளுறாராம். இதுக்கு மிஞ்சி ஒரு தனி மனிசனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழிக்க என்ன வில்லங்கப் படுவாரெண்டியளே..? நோ, நெவர்!

தமிழாராய்ச்சி மாநாட்டில எங்கட மலையகத்துச் சந்திரனார் முழங்கின முழக்கத்திலை, தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு முதுகெலும்பில்லை யெண்டு மட்டந்தட்டி வைச்சது உலகத் தமிழர் தலைவரெண்டு உரிமை கோருற கலைஞருக்கு நல்லாச் சுட்டுப்போட்டுதுங்கோ. உவர் ஈழத்தமிழரெண்டு யாரைப்பற்றிக் கதைக்கிறாரெண்டு கொஞ்சம் கடுப்போட கேட்டிருக்கிறார். கலைஞர் முந்தி முந்தி தனக்கு முன்னால அரைக்குனியலீல நிக்கிற ஈழத் தமிழ்த் தலைவர்க ளெல்லாம் தன்ர முதுகெலும்பத் தட்டிப்பாக்கத் துணிஞ்சிட்டினமோ ரீண்ட கோபம்போல. வட் ரு டு? சீங்கம் கிழண்டிப்போனால் சீற்றெலியும் முதுகில் ஏறும். முதுகில நிண்டாச்செண்டிட்டு மூக்கில நிக்கப் போறவை வழுக்கி வாய்க்குள்ள விழுந்திடுவினம் கவனம்!

இருந்த இடம் தெரியாமல் ஸ்தம்பித்துப்போய் இருந்திட்டு வந்து இப்ப தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யாட்டால் வடக்கு கிழக்கை ஸ்தம்பித மாக்கப் போறாராமெண்டு சீறியிருக்கிறார் சீறிற காந்தர் எண்ட அந்த லோயர். ஆர்தான் அவரைத் தண்ணி தெளிச்சு எழுப்பிவிட்டதோ தெரியேல்லை. இப்பிடி ஆளாளுக்கு எங்கயேனும் படுத்திருந்திட்டு எழும்பி வந்து பேசிட்டுப் போறதக் கேட்டுக்கொண்டு நிக்க இங்க இருக்கிறவங்கள் ஒண்டும் மோட்டுக் கூட்டமில்லை. நல்லதச் சொன்னாலும் செய்யிறவன் சொல்லவேணும். வானத்தில இருந்து வீடு அசரீரி வார்த்தையெல்லாம் இங்க வேண்டாம். வெட்டிப்பேச்சுக் கேட்டுத்தான் கெட்டது தேசம். இனிப் போதும் இந்தப் பொய்வேஷம்.

தமிழ்நாட்டில பகையச் சம்பாதிச்சால் தன்ர அங்கத்திய நலன்களுக் கெல்லாம் பிசகாகிப் போயிடுமெண்டு தெரிஞ்சும் எம்பியப்பா எங்கட சம்பந்தமான எம்பி இந்தியத் தூதரகத்துக்குப் போய் வை.கோ.வைக் கைது செய்ததுக்கு எதிரா மகஜர் குடுத்தாரெண்டு எல்லாருக்கும் கொஞ்சம் ஆச்சரியமாத்தான் இருந்தது. ஆனால், தூதரகத்துக்குள்ள போய், தாங்கள் நிர்ப்பந்தத்தாலதான் இதுகளச் செய்யிறம் எண்டு சமாளிகேஷன் செய்த கதை வெளியில யாருக்குத் தெரியும்...? அரசியலில பழம் தின்டு கொட்டை போட்டவங்களப்பா! சின்னப் பெடியள் எம்மாத்திரம்?

தோட்டத் தொழிலாளிகளின்ர சம்பள உயர்வுக்கு உடன்படாட்டால் தான் ஒத்துழையாமை இயக்கம் நடத்தப் போறதாச் சொல்லுறார் முகத்தையே பெயராக்கொண்ட மலையக அமைச்சர். அவர் தொழிற்சங்கவாதியா நிண்டு ஒத்துழையாமை செய்யப்போறாரா, இல்லை அமைச்சரா நிண்டு செய்யப்போறாரா? எண்டு தெரியேல்லை. ஏற்கெனவே மேல் கொத்மலைத் திட்டத்த இவற்ற இந்த இரண்டு முகத்தாலயும் நிப்பாட்ட முடியாத மாதிரி அது மேல் மட்டத்தின்ர சம்மதத்தப் பெற்றிட்டுது. இது மலையக மக்களின்ர அடிவயித்துப் பிரச்சினை. எந்த முகத்தைக் கொண்டாவது தீர்த்து வைச்சால் சரி. பொறுப்பெடுத்திட்டார். ஒப்பேத்த வாழ்த்துவோம்.

மறுமொழிருந்தி

கடந்த நூற்றாண்டின் சிறந்த வீரரென கபில் தேவ்விற்கு விஸ்டன் புகழாரம்

கிரிக்கெட்டின் உலகில் கீர்த்தி மிக்க விஸ்டன் வழங்கும் அதி உயர் சர்வதேச விருது இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகல துறை ஆட்டக்காரர் கபில்தேவ் விற்கு கிடைத்துள்ளது. இதன் மூலம் கடந்த நூற்றாண்டின் சிறந்த வீரர் என்ற கௌரவத்தை 'விஸ்டன்' கபில் தேவ்விற்கு வழங்கியுள்ளது.

லண்டனில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் விருதைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பிய அவருக்கு இந்தியத் தலைநகரான புதுடில்லியில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அதன்போது செய்தியாளர்களிடம் பேசிய கபில்தேவ், தான் கிரிக்கெட் சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டதாகக் கடந்த ஆண்டு வெளியான குற்றச் சாட்டுக்கள் தன்னைக் கடும் வேதனைக்கு உள்ளாக்கியதாகவும், இந்த விருது தனக்கு மீண்டும் புத்துணர்ச்சியைத் தந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

"எனது தாய் நாட்டில் இவ் விருது வழங்கப்பட்டிருந்தால் என்னை விட மகிழ்ச்சியுடையவர் யாரும் இருக்க முடியாது. நண்பர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட கிரிக்கெட் உலகம் வழங்கிய மதிப்பு மிக்க இந்த விருது, எனக்கு மட்டுமல்ல எனது லட்சக் கணக்கான ஆதரவாளர்களுக்கும் பெரும் நம்பிக்கையை அளித்துள்ளது.

ஒரு சிறிய (சண்டிகர்) நகரில் இருந்து இம் மாதிரியான மிகப் பெரிய விருதைப் பெறும்போது உண்மையிலேயே எனக்குச் சந்தோஷம் அளிக்கிறது. இவ் விருதால் கிரிக்கெட் உலகம் என்னுடன் இன்னும் உள்ளது என்றுதான் உணர்கிறேன். இன்னும் சொல்லப்போனால் இவ் விருது எனக்குப் புத்துணர்ச்சியை அளித்துள்ளது.

2 ஆண்டுகளுக்கு முன்பு கிரிக்கெட் சூதாட்டக் குற்றத்துக்கு ஆளாகிய பின்னர் நிரபராதி என்பதை நிருபித்தேன். இன்னும் சிலர் நான் குற்றமுள்ளவன் என்றே இன்றும் நினைக்கின்றனர். அது எனது மனதைப் பாதிக்கிறது. விஸ்டன் வழங்கியுள்ள இக் கௌரவம் பழைய கசப் புணர்வுகளை மறக்கடித்துள்ளது" என்று கூறினார். 131 டெஸ்டுகளில் விளையாடியுள்ள கபில்தேவ், 434 விக்கெட்டுக்களையும், 5248 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். ■

கொக்கா கோலாவுக்குப் பதிலாக ஸம் ஸம் கோலா

கொக்கா கோலா, உள்ளிட்ட குடிபான வகைகள் அமெரிக்க நிறுவனங்களினால் தயாரிக்கப் படுகின்றன. எனவே அவற்றை உபயோகிப்பதை முஸ்லிம்கள் தவிர்க்க வேண்டும் என்ற அடிப் படையிலான பிரசாரங்கள் முஸ்லிம் உலகில் மேற்கொள்ளப் படுகின்றன. மத்திய கிழக்கு விவகாரத்தில் அமெரிக்கா கடைப் பிடித்து வரும் இஸ்ரேல் சார்புக் கொள்கையாலேயே அமெரிக்க உற்பத்திகளை முஸ்லிம்கள் புறக் கணிக்க வேண்டும் எனக் கோரப் படுகின்றது. ஆனால், கொக்கா கோலா, ஃபன்டா, ஸ்பிரைட் போன்றவற்றுடன் போட்டியிடும் சில நிறுவனங்களும் இந்தப் பிரசாரத்தின் பின்னணியில் இருப்பதை மறுப்பதற்கில்லை.

கொக்கா கோலாவுக்கு எதிரான முஸ்லிம் பகிஷ்கரிப்பைச் சாதகமாகப் பயன்படுத்தி ஈரானிய நிறுவனம் ஒன்றும் ஸம்ஸம் கோலா என்றொரு குளிர்ப்பான வகையைச் சந்தைக்கு விட்டுள்ளது.

அமெரிக்க எதிர்ப்புணர்வு மிகத் தீவிரமாக இருக்கும் ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இந்த ஸம்ஸம் கோலா முதலில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வியாபார உத்தி பலிக்குமென்றால் ஸம்ஸம் கோலாவுக்கு யோகம்தான்.

சர்வதேச இளைஞர் தின வைபவங்களுக்காக கனடா சென்ற் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கனடாவில் இருந்து விடைபெறும் சமயத்தில் மியுடி விமானத்தளத்தில் நடைபெற்ற திறந்த வெளி ஆராதனையின் போது பக்தர்களை நோக்கிக் கையசைக்கிறார்.

"பாஸ்ட் புட்" கடைகளை எதிர்த்து அமெரிக்கர் வழக்கு

நாக்குச் சப்புக் கொட்டிக் கொண்டு, 'பாஸ்ட் புட்' கடைகள் ஒன்று விடாமல் சாப்பிட்ட ஒரு அமெரிக்கர் இப்போது அவற்றுக்கு எதிராக வழக்குகள் தொடுத்திருக்கிறார்.

சீசர் பார்பர்(56) என்ற அந்த நபரின் கோபத்துக்குக் காரணம்? திடீரென்று ஏற்பட்ட மாரடைப்புத் தான்!

இது தொடர்பாக அவர் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்ட போது, அதற்குக் காரணம் துரித உணவுகளே என்பதைக் கண்டறிந்தார். ரத்த அழுத்தம், கொழுப்பு, நீரிழிவு ஆகிய வற்றால் அவதிப்படும் அவர்,

"பாஸ்ட் புட் நடத்துவோர் யாரும் உணவில் சோடியம், கொழுப்பு ஆகியவற்றைக் கலப்பதை அறிவிப்பதில்லை" என்கிறார். யாரும் இனிமேல் அந்த மாதிரி உணவைச் சாப்பிட வேண்டாம் எனவும் எச்சரிக்கிறார்.

மெக்டோனால்டு, பர்கர் கிங், கென்டகி என்று பெரிய கம்பெனிகளை ஒரு கை பார்த்து விடுவது என்று கச்சை கட்டிக் கொண்டு கோர்ட் படிகளில் ஏறியுள்ளார் பார்பர்.

'நெட்டிலிருந்து' பகுதிக்கான தகவல்களை கீழுள்ள ஈ-மெயில் முகவரி மூலமாக அனுப்பி வைக்கலாம்.
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

பார்த்த ஞாபகம் இல்லையோ...? 10

இளமைப் பருவத்தில் முதுமைப் பாத்திரங்களில் தோன்றி திரைப்படத்துறையில் பிரவேசித்த எம். என். நம்பியார், நகைச்சுவை நடிகராகவும் பின்னர் வில்லனாகவும் தோன்றி சக்கை போடு போட்டவர். இவருக்கு நகைச்சுவை ஜோடியாக எம். எஸ். பாக்கியம் என்ற நடிகை நடித்தார். ஒரு சில படங்களில் கதாநாயகனாகவும் தோன்றியுள்ளார். 'திகம்பரசாமியார்' படத்தில் கதாநாயகன், போலிச் சாமியாராக வருகிறார். 'பாகப்பிரிவினை'யில் கதாநாயகன் சிவாஜியின் தம்பியாக இவ்வாறு காட்சி தரும் நம்பியாரின் ஜோடியாகத் தோன்றுபவர் ஒரு சில படங்களில் கதாநாயகியாகவும் பல படங்களில் இரண்டாவது கதாநாயகியாகவும் தோன்றிய தாம்பரம் லலிதா.

ஜுபிட்டர் பிக்சர்ஸ் தயாரித்த 'அமுதவல்லி'யிலும் லலிதா கதாநாயகியாக வருகிறார். பின்னர் அனேகமாக அவரைக் காணமுடியவில்லை. நம்பிராஜன் என்ற நடிகரை மணம் முடித்து திரை வாழ்வினிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் மும்முரமாக நடைபெற்று அதன் இறுதிக் கட்டத்தை அடைந்த காலகட்டத்தில் 1945ல் 'காற்றினிலே வரும் கீதம்...' என்று தொடங்கும் இனிமையான பாடல் இரசிகர்களின் காதுகளில் புகுந்து தேனைச் சொரிந்தது. கோகிலகான இசைவாணி என்று போற்றப்பட்ட எம். எஸ். சுப்புலட்சுமி 'பக்த மீரா' படத்துக்காகப் பாடியது இப் பாடல். இப் படத்தில் கண்ணன் மீது தெய்வீகக் காதல் கொண்ட மீராவாகப் பல பாடல்களைப் பாடிக் கேட்போரைப் பரவசமூட்டினார்.

பிரபல கர்னாடக இசை விற்பன்னரான இவர் 'சகுந்தலை', 'சாவித்திரி' போன்ற படங்களிலும் நடித்துள்ளார். ஐ.நா. சபையிலும் எம். எஸ். ஸின் இசைக் கச்சேரி நடைபெற்றுள்ளது. பிலிப்பைன்ஸ் நாடு வழங்கும் மக்ஸஸே விருதும் இவருக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தியாவிலேயே ஆயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளை வைத்து நிதி சேர்த்துப் பல தர்ம கைங்கரியங்களுக்கு உதவியிருக்கிறார். கணவர் சதாசிவத்தை இழந்த இவர் வயதாகி விட்டமையினால் ஓய்வெடுத்து வருகிறார்.

பண்டரிபாய் சிறுவயதிலேயே தமிழ்த் திரை உலகில் புகுந்தவர். எம்.கே.தியாகராஜ பாகவதரின் உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்த 'ஹரிதாஸ்' படத்தில் அழகிய வெள்ளைக் குதிரையில் 'வாழ்விலோர் திருநாள்...' என்ற பாடலைப் பாடிய வண்ணம் ஒரு இளம் பெண்ணைத் துரத்திப் பிடிக்கிறார். அந்த இளம் சிட்டாகத் தோன்றியவர் பண்டரிபாய், 'பராசக்தி'யில் சிவாஜியின் ஜோடியாகத் தோன்றுகிறார். பின்னர் பலபடங்களில் தாய் வேடங்களில் நடித்து இரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். இப்பொழுது வட பழனியில் அவரே கட்டிய பாண்டுரங்கன் கோவிலில் ஓய்வெடுத்து, இறை பணியில் ஈடுபட்டுள்ளார்.

'அன்னையின் ஆணை' என்ற திரைப்படத்தில் பண்டரிபாய் இவ்வாறு தோன்றினார்.

குரும்பம்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைக் கடுமையான குற்றமாகக் கருத வேண்டுமென சமீபத்தில் ஐ.நா. சபையில் தீர்மானிக்கப்பட்டது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களுக்குக் கடும் தண்டனையை வழங்கக் கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன. எவ்வாறெனினும் உலகெங்கிலும் பல மில்லியன் சிறுவர்கள் அவர்களது வயதுக்கு ஒத்துவராத பணிகளில் அமர்த்தப்படுகின்றார்கள். இந்த நிலைமை மத்திய ஆபிரிக்க நாடுகளில் மிக மோசமாகக் காணப்படுகின்றது. மொசாம்பிக்கில் வெள்ளை இனத்தவருக்குச் சொந்தமான கருங்கல் உடைக்கும் இடமொன்றில் கல்லுடைக்கும் சிறுவர்களையே இங்கு காண்கிறீர்கள்.

தேடல்

செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க சுதந்திர வர்த்தக மையக் கட்டடங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்ட சிலரைப் பல நாட்களாகத் தேடிப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் உயிருடன் இருப்பதாக செல்ஃபோன் மூலம் சமிக்ஞைகள் கிடைத்தன. கெமராக்களை உட்செலுத்தி அவதானிக்க முடியாத இடிபாடுகளுக்குள் எலிகளின் முதுகில் அதி நவீன கெமராக்களைப் பொருத்தி அவற்றை ஊடுருவச் செய்து பலரது உயிரைக் காப்பாற்றினார்கள். அவ்வாறு முதுகில் கெமரா பொருத்தப்பட்ட எலியொன்றையே இங்கு காண்கிறீர்கள்.

தகவல் பெட்டி

கூடு

இந்தப் படத்தை உன்னிப்பாக அவதானியுங்கள். இந்தக் குருவி, கூடு கட்டியிருப்பது கூரையிலோ, மரக்கிளையிலோ அல்ல. வீட்டைச் சுத்தம் செய்து விட்டு தலை கீழாகச் சுவரில் சாய்த்து வைத்த துடைப்பானில் கூடு கட்டி தன் குஞ்சுகளுக்கு உணவூட்டுகிறது இந்தக் குருவி!

ஆபத்து

கனடாவில் நடைபெறவிருக்கும் போட்டி ஒன்றில் சாகசம் காட்ட பயிற்சி பெறும் ஜெர்மனியின் பேர்லின் நகர பொலிஸார்தான் இவர்கள். தலைகீழாக கால்களை விரித்து இரண்டடி இடைவெளியில் இருப்பவர்களைத் தாண்டி மோட்டார் சைக்கிளில் பாய்கிறார் ஒரு சாகச வீரர். இந்த நிலையில் நிற்கும் ஒருவர் மேல் தப்பித் தவறி மோட்டார் சைக்கிள் விழுமென்றால்...

சினிவிசிட்

ரவளியின் கவலை

தானுக்கு நாள் உடல் எடை விஷயத்தில் மும்தாஜுக்குப் போட்டியாக உப்பிக் கொண்டு போகிறார் ரவளி. 'அன்புத் தொல்லை' படப்பிடிப்பின் போது "உடல் விஷயத்தை கொஞ்சம் கவனிக்கக் கூடாதா" என்று கேட்டால், "எனக்கும் என்ன காரணம்னு புரியலை. வழக்கமா சாப்பிடற சாப்பாடுதான் சாப்பிடுறேன். தினமும் எக்சர்சைஸ் பண்றேன். ஆனாலும் உடம்பு குறைய மாட்டேங்குது"என்று சொன்னவர், "தான் ஹார்மோன் இன்ஜெக்ஷன் போட்டுக்கறதா யாரோ வேணும்னே செய்தி பரப்பி விடறாங்க. என் உடல்வாகு இப்படியிருந்தால் நான் என்ன பண்ண முடியும்?" என்று சோக கீதம் பாடுகிறார். சோகத்தை விரட்டினா கருகருப்பு தன்னால வரும்!

காயத்ரியின் 'கள்ளச் சிரிப்பு'

மஞ்சக்காட்டு மைனாவாகத் துள்ளிய காயத்ரி ஜெயராம் தீவிரமான காதல் வலையில் சிக்கியிருக்கிறாராம். 'ஜெயா' பட ஷூட்டிங்கில் இருந்த காயத்ரியிடம் குறிப்பிட்ட அந்த நபரைக் காதலிக்கிறீர்களாமே உண்மையா? என்றதும் வாயைப் பொத்திக் கொண்டு கள்ளச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். இந்தச் சிரிப்புக்கான அர்த்தம்? " இந்த வருஷத்துலயே சிறந்த ஜோக் இதுதான்" என்று சொன்னவர் வதந்திகளுக்குத்தான் கை, கால், மூக்கு, நாக்கு எதுவுமே கிடையாதே. பிறகு எப்படி நான் பதில் சொல்ல முடியும்? என மடக்கினார். காதலை மறைக்கலாம் காதலனை?

'புனிதன்'

நெல்லை மாவட்டத்தில் ஒரு வீர தீர இளைஞனின் வாழ்வில் நடந்த சம்பவத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் படம் 'புனிதன்'. இப்படத்தில் முன்னணி நடிக, நடிகைகள் நடிக்கிறார்கள்.

கஜாலாவின் தற்கொலை முய

நடிகைகள் தற்கொலை செய்து கொள்வதும் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதும் இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. இறுதியாக இந்த முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பியவர் கஜாலா. இவர் 'ஏழுமலை' படத்தில் அர்ஜூனுக்கு ஜோடியாக நடித்தவர். அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மயங்கி விழுந்த சமயம் உடனடியாக மருத்துவ உதவி கிடைத்ததால் காப்பாற்றப்பட்டார்.

கஜாலாவுக்கும் தெலுங்கு நடிகர் உதய்கிரணுக்கும் இடையிலான காதல் பலரும் அறிந்த சமாச்சாரம். இந்தக் காதல் முறிந்ததனாலேயே கஜாலா தற்கொலைக்கு முயன்றதாக முதலில் வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்று தெரிகிறது.

தமிழ் நடிகர் ஒருவர் கஜாலாவுக்குக் கொடுத்த அளவுக்கு அதிகமான தொந்தரவே அவரை இந்த நிலைக்கு தள்ளிச் சென்றதாக கஜாலாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. தனது படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுக்கும் முன்னரே இந்த நடிகர் கஜாலாவோடு செய்த குஜாலாக்கள் திரையுலக வட்டாரத்தில் பேசப்பட்டன.

படம் வெளிவந்த பின்னரும் இவர்களுக்கு இடையிலான நெருக்கம் தொடர்ந்தது.

காதோடு சொல்லுகிறோம்

மினி சினி

☆ ரோஜா கம்பைன்ஸ் தயாரிக்கும் 'திருடா' படத்தில் வித்தியாசமான கெட்டப்பில் நடிக்கிறார் அஜீத். அதற்காக மேக்கப் போட மட்டும் முன்று மணி நேரம் ஆகிறதாம்.

☆'நியூ' படத்தில் ஹீரோவாக நடிக்க முடிவு செய்திருக்கும் டைரக்டர் சூர்யா, தினமும் உடற்பயிற்சி செய்து உடம்பைத் தேற்றி வருகிறார். ஹீரோவாக நடிக்க உடம்பு மட்டும் போதுமா?

* 'துள்ளுவதோ இளமை' வெற்றியைத் தொடர்ந்து 'காதல் கொண்டேன்' என்ற படத்தை ஆரம்பித்திருக்கிறார் கஸ்தூரி ராஜா. அவரது மகன் செல்வராகவன் இயக்க, இன்னொரு மகன் ஹீரோ.

* 'பத்ரி' படத்தில் அறிமுகமாகி ரோஜாக் கூட்டம் படத்தைத் தவிர வேறு எந்தப் படத்திலும் நடிக்காத பூமிகா இப்போது ஏ.எம். ரத்னம் தயாரிப்பில் எஸ்.பி.ஹோசிமின் இயக்கும் படத்தில் உதய்கிரணுடன் ஜோடியாக நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

* டி.எஸ்.ஜானகிராமன் தயாரிக்கும் 'ஜங்ஷன்' படத்தை இருபத்தைந்து நாள்களில் ஒரே செட்யூலில் முடிக்க இருக்கிறார்கள். இதில் திரைக்கதையை நிஜக் கல்லூரி மாணவ மாணவிகளின் அனுபவங்களைக் கேட்டு அதன் அடிப்படையிலேயே அமைத்திருக்கிறார்கள்.

* 'தென்காசிப்பட்டணம்' வெளியான பிறகு சம்யுக்தாவர்மாவைத் தேடிப் பல தமிழ்ப்பட வாய்ப்புகள் குவிகின்றன. பிஸியாக இருப்பதால் வந்த வாய்ப்புக்களை மறுத்து வருகிறார் சம்யுக்தா வர்மா!

* நடிகர் சங்கக் கட்டிட அடைப்பதற்காக சிங்கப்பூர், மலேசியாவில் நடக்கும் ஸ்டார் நைட்டில் டான்ஸ் ஆட மறுத்து விட்டனர். அஜித்தும், விஜய்யும், பிரசாந்தும். அதனால் மூவர் மீதும் கோபத்தில் இருக்கிறார் விஜயகாந்த்.

* '12பி' படத்தைத் தயாரித்த ஃபிலிம் ஒர்க்ஸ் நிறுவனம் இப்போது ஷாம், த்ரிஷா நடிக்கும் 'லேசா லேசா' என்ற படத்தை ப்ரியதர்ஷன் இயக்கத்தில் தயாரித்து வருகிறது. இப்படத்துக்கு ஹாரீஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார். வாலி பாடல்களை எழுதியுள்ளார்.

* நடனத்தை நம்பிக் கதாநாயகனால தாடிக்கார ஹீரோவுக்குப் படங்கள் குறைந்து விட்டன. அதனால் பழைய தொழிலுக்கும் போக முடியாத இக்கட்டான சூழ்நிலை. எனவே, நம்பர் ஒன்னாக இருந்த போது முறைத்துக் கொண்ட படாதிபதிகளை வலிய நேரில் சென்று மன்னிப்புக் கேட்பதோடு, படவாய்ப்பும் கேட்கிறாராம். நேரத்தைப் பாருங்க!

* கணவருடன் பிரச்சனை ஏற்பட்டதால் பிரிந்து வாழும் ராமாயண நாயகி முழுமூச்சாக படங்களில் நடிக்க நினைத்து முயற்சி செய்தார். அவரது முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார் தாலி கட்டியவர், அதாவது தன் மனைவிக்கு சான்ஸ் தர வேண்டாம் என்று சகலருக்கும் அன்புக் கட்டளையிடுகிறாராம். அதனால் கணவர் மீது கடும் கோபத்தில் இருக்கிறார் நடிகை.

* மூன்று ரோஜாக்களோடு நடித்து வரும் நான்காவது ரோஜாவுக்கு முன்றில் ஒரு ரோஜாவின் சகோதரரும், படத்தின் தயாரிப்பாளருமானவரால் நிறைய டார்ச்சர் ஏற்படவே படத்தில் இருந்து விலக முடிவு எடுத்திருக்கிறார். தயாரிப்பு ரோஜா, அண்ணனுக்கு டோஸ் விட்டு இளம் நான்காவது ரோஜாவை சமாதானப்படுத்தி இருக்கிறார்.

* இளமைத் துள்ளலுடன் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படத்தில் தனது மகளை ஹீரோவாக்கினார் இயக்குநர். படத்தில் இளைகளின் நட்பைக் கொச்சைப்படுத்தும் பெரிசுகளுக்கு சாட்டையடி கொடுத்திருந்த இயக்குநர், தற்பொழுது தனது மகன் நிஜவாழ்வில் படத்தின் நாயகிகளில் ஒருவருடன் நட்பை வளர்த்துக் கொண்டு ஏகமாக செலவு செய்வதைத் தடுக்க முடியாமல் கையைப் பிசைந்து வருகிறார். தனக்குத் தானே சாட்டையடி கொடுக்க முடியுமா?

முகப்பில் | ஸ்ரீகாந்த்
ப்ரீத்தி ஜிந்தா

மோகன்லாலின் 'தந்தை வேடம்'

'பாப்கார்ன்' படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு அண்மையில் பொள்ளாச்சியில் நடைபெற்றது. படத்தில் மோகன்லாலுடன் நடிக்க ஒரு குழந்தை தேவைப்படவே ஊரில் சுற்றியலைந்து ஒரு கொழு கொழு குழந்தையைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்தார்கள். ஷூட்டிங் ஸ்பாட்டில் லைட், கேமராவைப் பார்த்த குழந்தை அழத் தொடங்கிவிட்டது. என்ன சமாதானம் செய்தும் அழுகையை நிறுத்த முடியவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மோகன்லால் ஒடிவந்து குழந்தையைத் தூக்கியதும் சட்டென குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது. "என்ன மேஜிக் பண்ணினீங்கள்" என்று நாசர் அவரிடம் கேட்க, "நானும் ஒரு குழந்தைதானே?" என்றார் மோகன்லால். ஆமாமாம், ரொம்ப வளர்ந்த கொழுகொழு குழந்தைதான்!

ஐஸ்வர்யா சல்

ஐஸ்வர்யா தன் சொந்த [illegible] ஷூட்டிங்குக்காக தென்னாபிரிக்கா சினி-ரிப்போர்ட்கள் எல்லோரும் ஊற்றித் தயாராளார்கள்.

சல்மான்-ஐஸ் ஜோடி எனச் சல்மான் ஐஸை பின் கவவித்தவர்களுக்கு ஒரு ஏறாததோடு, அடிக்கடி பெயர் சஷ்மிதா சென்னாவு தென்னாபிரிக்காவுக்கு தேடிக்கொள்ளுங்கள்.

வெல்கம்

நடிகர் எஸ்.எஸ். மகன் ரோஹித். அறிமுகமாகும் ஹீரோ' கதாநாயகிறார். இப்படத திரா தயாரிக்க இயக்குகிறார் இசை அமை படத்தின் விழா ஸ்டுடி நட

மயன்

...யற்சி

...முயற்சியில்
...தற்கொலை
...படத்தில்
...மாத்திரை
...சிகிச்சை

...ன காதல்
...லேயே
...தி

...ந்த
...ர்

நடிகரின் தொந்தரவை இனிமேலும் சகிக்க முடியாது என்ற நிலையிலேயே கஜாலா தூக்க மாத்திரை சாப்பிட்டிருக்கிறார்.

ஹைதராபாத் ஹோட்டல் ஒன்றில் வைத்தே இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். சம்பவம் நடக்கும் போது நடிகர் அர்ஜூன் உடனிருந்தார். அவரே கஜாலாவை மருத்துவமனையில் சேர்த்தார்.

மீண்டும் சம்யுக்தா வர்மா

'தென்காசிப்பட்டணம்' படத்தின் ஹீரோயின் சம்யுக்தா வர்மா அஜித்துடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார். 'தீனா' படத்தைத் தயாரித்த நிறுவனம்தான் படத்தைத் தயாரிக்கிறது. பெயரிடப்படாத இந்தப் படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க வுள்ளது.

மாறி வரும் பிரசாந்த்

மாதேஷ் இயக்கத்தில் 'ஜெய்' படத்தில் நடிக்கிறார் பிரசாந்த். இந்தப் படத்துக்காக இதுவரை ஏற்காத கெட்டப்பில் நடை உடை பாவனை என எல்லா அம்சங்களிலும் மாற்றம் செய்யப் போகிறார்களாம். அத்துடன் படத்தில் நாற்பத்தைந்து நிமிட கிராஃபிக்ஸ் காட்சியும் இடம் பெறுகிறதாம்.

இதற்காக ஒரு பெரிய டீம் களத்தில் இறங்கி வேலை செய்து வருகிறது. படத்துக் காக ஒட்டு மொத்த மாறுதல் செய்வது நல்லது தான். அப்படியே நடிப்பிலும் ஒரு மாற்றம் வேண்டுமே. முயற்சி செய்வாரா?

...ான் உடலா?

...ரிப்பில் வளரும் படத்தின்
...போகிறார் என்றதும் மும்பை
...ண்ணில் வினக்கெண்ணெய்

...சப்பட்டு வரும் நிலையில்
...டர் கிறாரா? என்று
...ஷாக், சல்மான் பிளைட்
...லில் பேசிய அழகியின்
...ராவது இந்த தகவலை
...யடித்து புண்ணியம்

...ஹீரோ

...திரன் எம்பியின்
...கதாநாயகனாக
...டம் 'வெல்கம்
...ாக ரீனா நடிக்
...தை விஜயேந்
...ர், ரவிராஜா
...பிரதீப்ரவி
...கிறார். இப்
...தொடக்க
...மோகன்
...ாவில்
...து

குடிபோதையில் சினேகா

சினிமா நடிகைகள் மது அருந்துவதொன்றும் பெரிய விஷய மில்லைதான். ஆனால், பெரும்பாலான நடிகைகள் அபூர்வமாக ஏதோ ஒரு பார்ட்டியில் தீர்த்தம் சாப்பிடுவதோடு சரி. ஒரு சிலர் போதைக்கு அடிமையாகி, ஷூட்டிங் முடிந்து தன் னுடைய ரூமுக்குள் என்டர் ஆனதும் இரண்டு பெக் போட்டால்தான் புத்துணர்ச்சி கிடைக்கும் என்ற நிலை யிலிருப்பார்கள். இவர்களையும் விடுங்கள். இன்னும் சிலர் திரையில் பெரிய அளவுக்கு வளர்ந்து வருவார்கள். வளரும் மார்க்கெட் சரியாம லிருக்க நாயகன், டைரக்டர், தயாரிப்பா ளர் எனப் பெரிய அட்ஜெஸ்மெண்ட் பண்ண வேண்டியிருக்கும். போதாததுக்கு கிசுகிசு பிரச்சனை என நொந்திருக்கும் இவர்கள் பிரச்சனையை மறக்கப் புதிதாய் தண்ணி யடித்து அதற்கு அடிமையாவார்கள். மலை யாளப் படங்களில், கொஞ்சம் எசகு, பிச கான காட்சியில் நடிப்பதற்கு கேமராக் கூச்சம் தெரியாமலிருக்க 'பெக்' சாப்பிட்டு, பின்னால் பாட்டிலையே விழுங்குகிற அள வுக்கு வளர்ந்து விடுவார்கள். பெரும்பா லும் பாத்ரூம், நீச்சல் குளம், ஆறுகளில் 'பிட்'டுக்களுக்கு ஜலக்கிரீடை நடத்தும் நடிகைகள் அனைவருமே இரவில் தாக சாந்தி செய்பவர்களே.

பெரிய ரேஞ்சில் மார்க்கெட்டை காப்பாற்றவும் கிசுகிசு சுழலின் புதிரிலிருந்து விடுபடவும் முடியாமல் புதிதாய் பிரிட்ஜில் பாட்டில்களை வாங்கி நிரப்பியிருப்பவர் சிம்ரன். கோர்ட் தொந்தரவால் அதில் ரோஜா ஏற் கனவே எக்ஸ்பீரியன்ஸாகி விட்டார். வெகு லேட்டஸ்ட்டாய் 'பெரிய மனதுடைய' நாயகி தயாரிப்பாளர்களிடம் சான்ஸ் கேட்டுப் போக, 'ராஜாவை'த் தவிர மற்ற இடங்களில் 'புல் நைட்' கால்ஷீட் மட்டும் கேட்டார்களாம். கடுப்பாகித் திரும்பின நாயகி, பாட்டிலை வயிற்றுக்குள் சரித்துவிட்டுப் பூட்டிய அறைக்குள் தகாத வார்த்தைகளால் சில பிரபலங்களைத் திட்டித் தீர்த்தாராம்.

லேட்டஸ்ட்டாக உதட்டுக்கடி நடிகை விபத்தில் சிக்கி பெரும் ஆபத்தாகிவிட்டது. கால் உட்பட பல இடங்களில் ஆழமான காயங்கள், உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலைமை. ஆனால் டாக்டர்கள் ஒரு மணிநேரம் கழித்தே ஆபரேஷன் தியேட்டருக்கு நடிகையைக் கொண்டு சென்றிருக்கிறார்கள். நடிகை ஃபுல் மப்பில் இருந்ததால் ஆபரேஷன் செய்வதா? கூடாதா? என்று ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தப்பட்டது என்கிறார்கள் மருத்துவமனை வாசிகள்.

கங்கேஸ்வரிக்கு வாய்ப்பு

நடித்தவர் கங்கேஸ்வரி. நேரில் பார்க்கும் போது அழகுக் குவியலாக மனதை அள்ளும் இவரைத் தேடி ஏகப்பட்ட வாய்ப்புகள் வந்த வண்ணம உள்ளன. தமிழுக்கு வரும் புதுமுக நடிகைகள் பலரும் இரவல் குரலுக்கு அலைபாய, இவர் மட்டும் அழகு தமிழில் டப்பிங்கும் பேசிவிடுகிறார்... கங்கேஸ்வரிக்கு எல்லாமே பளஸ்தான்!

ஆசை

நடிகர் பிரபுதேவாவின் எதிர்கால ஆசை டைரக்டராக வேண்டும் என்பது தானாம். இதற்கு ஒத்திகையாக 'ஒன் டு த்ரீ' படத்தின் டைரக்ட ருக்கு ஒரு அசிஸ் டெண்ட் டைரக்டர் போல அந்தப் படத்தில் பணிபுரிந் தாராம்.

லைலா புராணம்

'துள்ளுவதோ இளமை' படத்தில் போதை ஊசி போட்டுக் கொள்ளும் கேரக்டரில் பத்திரிகையாளர்கள் பக்கத்தி லிருக்கும் போது ஒரு சொல் தவறினால் கூட, பிரச்சனையாக்கி விடுவார்கள் என்ற பயத் தில், பேட்டியில் கூட சரிவரப் பேசவதே இல்லை லைலா. என்னதான் பேசவில்லையென்றாலும் நெருங்கிய நண்பர்களிடம் மனம் திறந்துதானே ஆக வேண்டும். 'கள்ள ழகர்' படத்தில் வாய்ப்புத் தந்தாலும் கூட, திரையுலகிலிருந்தே, தன்னை தொலைக்கப் பார்த்த படமென்பதால் விஜயகாந்த் மீது பெரிய மரியாதை கிடையாதாம் லைலாவுக்கு. ஆனாலும் பில்டில் பெரிய ஆள், முறைச்சுக்க முடியுமா? 'பார்த்தேன் ரசித்தே'னில் மறுவாழ்வு தந்த சரண் மீது பெரிய மதிப்பு உண்டாம். பிரசாந்த்தின் அமுல் பேபி தனத்தின் மீது பெரிதாய் பிரியமில்லையாம். 'தீனா'வுக்கு முன் வரை அஜித் மீது ஒரு க்ரேஸ் இருந்தாலும், 'தீனா'வில் அஜித்தின் டார்ச்சருக்கப்புறம் ம்ஹூம்.

சரி, டைரக்டர் பாலா? தமிழ்நாடு முழுக்க பாலா-லைலா காதல் என்று வதந்தி பரவிய பிற கும் இந்த விஷயத்தில் கமுக்கமாகவே இருக்கிறார் லைலா. படங்கள் சரியாக அமையாததால் வாய்ப் பின்றி இருந்தவர் 'நந்தா' மறுவாழ்வு அளிக்கும் என்று நம்பினார். பாதி ஷூட்டிங் முடிந்த நிலையிலும் ஹீரோயின்களை மாற்றுவது சினிமா உலகில் சகஜம். அப்படியொரு நிலைமை சுமாராக நடிக்கத் தெரிந்த தனக்கு நேர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே 'நந்தா' ஷூட்டிங்கின் போது பாலாவுடன் நெருக்கத்தை ஏற் படுத்தியிருக்கிறார். மற்றப்படி பாலா விஷயத்தில் ஷோலோவாக இருக்கவே விரும்புகிறார். இரண்டு படங்கள் சேர்ந்த நடித்த சூர்யா மீதும், அவருடைய ஜென்டில்மேன் நடத்தையிலும் லைலாவுக்கு ஒரு கண். ஆனால், சிவகுமார் பையனோ, அப்பா காட்டுகிற பெண் மீதுதான் இரண்டு கண்ணையும் வைப்பேன் என்று உறுதியாய் இருக்கிறார். ஆக மொத்தம் தமிழ் பீல்டில் லைக் பண்ற மாதிரி, பசங்களே இல்லை என்று தோழிகளிடம் அலுத்துக் கொள்கிறாராம் லைலா.

'அக்னி'யில் அரவிந்த்சாமி

மணிரத்னம் அறிமுகப்படுத்திய நடிகர் அரவிந்த்சாமி இப்போது ஒரு மலையாளப் படத்தில் நடிக்கவிருக்கிறார். படத்தின் பெயர் 'அக்னி'. நீண்ட நாட்களாக சினிமாவே வேண்டாம் என ஒதுங்கியிருந்த அரவிந்த்சாமிக்கு எப்படி இந்தத் திடீர் ஆர்வம் வந்தது? படத்தின் கதையும், அவருக்கான கேரக்டரும் ரொம்பப் பிடித்துப் போய்விட்டதாம். 'அக்னி' படத்தை ராஜேஷ் நாராயணன் டைரக்ட் செய்ய, அரவிந்த்சாமிக்கு ஜோடியாக நடிப்பவர் சௌந்தர்யா. அடுத்ததாக தமிழுக்கு எப்போ வரப் போறீங்க?

தாயாக நடிக்கும் சிம்ரன்

'ரமணா' படத்தில் விஜயகாந்துக்கு ஜோடி இல்லை என்ற தகவல் ரசிகர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டதாம். அதனால் கதையில் சிலபல மாறுதல்களைச் செய்து சிம்ரனை ஜோடியாக்கி விட்டார்கள். இதில் ஒரு குழந்தைக்குத் தாயாக நடிக்கிறார். இப்போதெல்லாம் சிம்ஸ் தன் இமேஜைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் கேரக்டர்களைத் தேர்வு செய்வதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்து விட்டார். 'யுத்' படத்தில் ஒரு பாட்டுக்குப் படு கவர்ச்சியாக டான்ஸ் ஆடியிருக்கும் சிம்ரன், 'கோவில்பட்டி வீரலட்சுமி' படம் வெளியான பிறகு சிறந்த நடிகைக்கான விருது நிச்சயம் என் கிறார். லட்சங்களை மட்டுமே விரும்பிய சிம்ரன் இப்போது இலட்சியத்துக்காகவும் நடிக்க ஆரம் பித்தது ஏனோ?

நானோர் ஆவி

"சுழத்தியே- நீ
குடித்த
குருதி போதுமம்மா!"
பெற்றன்னையென்னை
நிலாக்காட்டி - சோறு
ஊட்டியது- ஞாபகமில்லை- மாறாக
போர் விமானத்தைக் கண்டு
பயந்த நடுங்கி- அழுதது
ஞாபகமுண்டெனக்கு...
"அப்போது என் வயது மூன்று"

யாழ் குடா மண்ணிலே
கடற்கரையோரத்திலே
மணல் வீடுகட்டி- மகிழ்ந்தது
ஞாபகமில்லையெனக்கு- பதிலாக
போர்க்கப்பலைக் கண்டு
பனைமரத்திற்கடியிலே- பயந்து
பதுங்கியது- ஞாபகமுண்டெனக்கு...
"அப்போது என் வயது எட்டு"

பள்ளி நண்பர்களோடு- கூடி
பட்டம் விட்டு- மகிழ்ந்தது
ஞாபகமில்லையெனக்கு...
பள்ளி சென்றிடவோ!
பட்டம் பெற்றிடவோ!
வழியில்லை யெனக்கு...
பத்து மாதம் சுமந்தவளை
பாதியிலே- மிதித்துக் கொன்றது
யுத்தம்- இப்போது நானோர் - அனாதை
இப்போது என் வயது- பத்து
நேற்று வந்த- நண்பர்
கூறினார்- யுத்த நிறுத்தமாம்.

எஸ்.ஏ.ராஜேந்திரன், அபுதாபி.

இரசாயனம்...

பருவங்கள்
முளைத்து பழக்கப்பட்டு
சிலாகரித்த
காதல் ஸ்நேகமா...?
வெறுமை கோட்பாடாக
திரிபுபடுகிறது...?

பல்லாயிரம் நிமிஷங்களில்
நிசப்தப்பட்ட
பொழுதுத் தொழுவல்களால்
பிரபஞ்ச வெளியை
உன் ஞாபகங்களால்
தாண்டிப் போனேன்...

யுகங்களின் வளர்ச்சிக்குள்ளே
உன் குரல்
மட்டும் தொலைபேசி
ஒலிபரப்பாய் தொடுகை
பட- என்னாத்மா
ஆகர்ஷனமாக மோகிக்கிறது.

தாயின் பாலில்
ஆரோக்கியப்பட்ட தேகம்
உன் நிலவரத்தின்
எக்கங்களால் நிலையான
கவலைகள் கண்ணீரில்
சமுத்திரமாயின...!

பூக்களின் மீது
மகரந்த தேன்
வழிந்த உன்
விழிகள் இரசாயனப்
பார்வைகளை படர
விடுகின்றதே...!

துப்பாக்கி ரவைகள்
என் மார்பைக் கிழித்து
இதயத்தை அழித்தாலும்
உன் நாவழுத்தம் தான்
மாற்றமாகி விடுமா...?

ஏழிசை ராகங்களாய்
உன் ஒரு வாய்ச்சொல்
வடிகாலாய்- என்
இளமை இழையோடுகிறது...

நீ...
பிரிவை பிய்ந்து...
போனதும் மறுபடியும்
உன் சிரிப்பையும்,
நாணத்தையும் மழை
பூமியோடு சங்கமித்த
போது ஞாபக
நாழியாகிறது...

உன்
மௌனங்கள்
அமர்த்த விஷம்
அதனால் மரணிக்க
மாட்டேன். மரணத்தின்
அழகு உன் இதயமல்லவா...?

கோ.நாதன், பொத்துவில்.

தேன் கிண்ணம்

புனிதமில்லா மனிதம்

சமூகத்தின்
சாக்கடை விரல்களால்
கிள்ளப்பட்ட
இதயத்திலிருந்து
கொட்டுகிறது
குருதி!

மூச்சுத்தொடர்
முற்றுப் பெறப்போகும்
மரணமணி
நிச்சயிக்கப்பட்ட
யதார்த்தங்கள்
அலட்சியப்படுத்தப்பட்ட
போதும்
தளரவில்லை
மன உறுதி!

எதிர்பார்ப்பை
எதிர்க்கும்
வசை அம்புகள்
எய்தவனைச்
சென்று சேரும்
நாட்கள் - வெகு
தூரத்திலில்லை!

இவர்களின்
செயற்பாடுகளில்
மனிதாபிமானமில்லை!
புனிதம்
புரையோடிப்
போனது!

இப்போதெல்லாம்
வீர விருட்ஷத்தில்
பூகம்பம்
மலர்கிறது!

எங்கள் பாதங்களை
மட்டுமல்ல
சுவடுகளைச்
சுட்டாலும்
நேசங்களை
நசுக்கமுடியாது!

கரீம், கந்தளாய்.

முதல் காதல்

அவள்...
புன்னகைத் துளியில் கசிந்தது
முதல் காதல்
***
மௌனத்தில் அவஸ்தை,
கண்ணசைவில்
நொருங்கியது இதயம்
கூந்தலில் சிக்கியது வாலிபம்
இது முதல் காதல்
***
காணத் துடிப்பதும்
காணாத போது தவிப்பதும்
தூக்கம் பறிப்பதும்
கனவுகள் நிறைவதும்
முதல் காதல்
***
அவள்...
பெயர் சொல்வது ஒரு சுகம்,
வேறொருத்தர் சொல்வதை
விரும்பா மனசு...
வேறொருத்தியின் பெயரையும்
சொல்லாது; ஏன் ஏற்காது
அது முதல் காதல்.
***
சுவாசத்தில் கலந்திட்டவள்
இதயத் துடிப்பை அதிகரிப்பதும்,
மௌனத்தைக் கொடுப்பதும் ஏன்
பேச்சைப் பறிப்பதும்
முதல் காதல்.
***
உறவென்றால்...
அவள் உறவென்றே-
முதலும் முடிவும் என்று
பிடிவாதம் கொள்ளச் செய்வதும்
பெற்றோர் எதிரியாவதும்
உற்றார் விசாரணை தொடங்குவதும்
நண்பர்கள் நீதிபதியாவதும்
முதல் காதல்.
***
ஓரவிழிப்பார்வையில் உள்ளம்
பறி கொண்டவள்
தலை குனிந்து நடக்கையில்
தாங்காத காளை
பித்தனாய் அலைவதும்
முதல் காதல்
***
அவள்...
நினைவுகள் சுகம்
கனவுகள் சுகம்
காத்திருப்புகள் சுகம்
என்றிருந்த இதயத்திற்கு
கண்கள் கலங்கவைப்பதும்
முதல் காதல்
***
உனக்காக...
எல்லாம் உனக்காக
எனப் புலம்புவதும் முதற்காதல்
அவள்...
வெறுக்கையில்
உயிருள்ளவரை உனக்காகக்
காத்திருக்கும் இந்த இதயம்
என விளம்புவதும்
முதற் காதல்.
***
சுடிதார் காற்றில் குடிகொண்ட
காதல் மறப்பது சுலபமா?
அவளிட்ட சூடு அவளின்றி ஆறிடுமா?
கொள்ளை கொண்டவள்
திரும்பித் தராமல்
திரும்புவதில்லை இதயம்
அமைதி பெறா மனசு.
என ஏங்குவதும் முதல் காதல்.

அப்துல் பரீத், பள்ளிக்குடியிருப்பு.

உலகம் உன்மீது உமிழும்

விழிகள் விழும் பாதையிலே
விரையும் மனிதா நில்
குழிகள் நிறைந்த வழியில்
குருதி உறைந்து வீழ்வாய்
பழிகள் விரைந்து படரும்
பகல் உன் மீது உமிழும்
இழிவு சேர்க்க வேண்டாம்
இனிய வாழ்க்கை வாழு!

தழுவி மகிழ, மனைவி
தடைகள் உண்டோ உனக்கு
நழுவிச் சென்று ஏனோ
நடை பாதை நாட்டம்?
புழுதி படிந்த புனல்
புரிந்தும் ஏன் தாகம்?
கழுவி ஊற்றிய நீரிலனை
கழுவ ஏன் விருப்பம்?

எருமை மாடு நீயல்ல
எந்தச் சேற்றிலும் விழுந்தெழும்ப
அருமையாக பகுத்து அறியும்
அறிவைப் பெற்ற பாக்கியவான்
பெருமையாக வாழ்வதை விட்டு
பிழையான உறவை நாடி
தெரு நாய் போல் திரிந்து
தேடிப் பெறாதே எயிட்ஸை.

இரா.தவராஜா, மட்டுநகர்.

என் பாதையில் பயணிக்காதே

நான் பயணிக்கும்
பாதையில்
நீயும் பயணிப்பதாக
கேள்விப்பட்டேன்
அழகே
இது உண்மையா...?
••
எனக்குத் தெரியாமல்
என் பயணம் தொடருவது
உனக்குப் புரியவில்லையா?
அழகே
என் பாதையில்
நீ பயணிக்காதே!
••
உனக்கு முன்
வேறொருவன்
என் பாதையில்
பயணித்து,
என் பாதையை
பள்ளமாக்கி, மேடாக்கி
நொருங்கவைத்து
மண்ணாக்கி விட்டான்.
••
புனர் நிர்மாணம்
செய்ய முடியாமல்
நானுள்ளேன்.
அழகே
நீ என் பாதையில் பயணிக்காதே!

கவிப்பிரியன் எ.கே.பௌகர்.
சின்னப்பாலமுனை -02.

பேனா நண்பர்கள்



பெயர்: கே. ஜெகன்
வயது: --
முகவரி:
P.O. BOX NO-10474
AL-JUBAIL - 31961
SAUDIARABIA.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி. பார்த்தல்.

பெயர்:
கே.சுகன்யா
வயது: 19
முகவரி:
நானாட்டான்,
மன்னார்.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

பெயர்:
எம்.ரஹூமான்
வயது: 26
முகவரி:
78, பிரதான வீதி,
புத்தளை. 91100
பொழுது போக்கு:
நாவல்,
பேனா நட்பு.

நினைத்து, நினைத்து சிரிக்க

ஓர் சர்தார்ஜி தனக்குக் குழந்தை பிறந்திருக்குன்னு தெரிஞ்சதும் தன்னோட அப்பாவையும், தாத்தாவையும் கூட்டிட்டு ஆஸ்பத்திரிக்குப் போனான். அறை வாசல்ல "அப்பா மட்டுமே உள்ளே செல்லலாம்" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே சர்தார்ஜி தன்னோட அப்பாகிட்ட திரும்பி, "அப்பா! எனக்கு அனுமதியில்லை. நீங்கள்தான் போகலாம்"னு சொன்னார். சர்தார்ஜியின் தாத்தா "ம்ஹூம்... நான் போகக்கூடாது. என்னுடைய அப்பாதான் போக வேண்டும். ஆனால், அவர் இறந்து விட்டார். அதனால் யாருமே போக முடியாது. வாருங்கள் திரும்பிப் போகலாம்" னு சொல்லி மூன்று எதார்த்தங்களும் திரும்பி போய்ட்டாங்க.

தீயணைப்பு நிலையத்துக்கு ஒரு போன் வந்தது. "சார்... இங்கே பயங்கர மாக தீப்பிடித்து விட்டது. நான் இங்கே வீடு கட்டி குடிவந்து ஆறுமாதம்தான் ஆகிறது. நான் கட்டாந்தரையாக கிடந்த என்னுடைய நிலத்தை ஆட்களை வைத்து பதப்படுத்தி..." என்று சொன்ன பெண் குரலை குறுக்கிட்டு தீயணைப்பு வீரர்.

"மேடம்! எங்கே தீப்பிடித்தது? முதலில் உங்கள் அட்ரஸை சொல்லுங்க?" என்று பதட்டமாகக் கத்தினார்.

ஆனா, மறுமுனையில் இருந்த அம்மாவோ "பதப்படுத்திய பிறகு புச்செடிகள் காய்கறி கீரை வகைகளை இப்போதுதான் விதைத்து உரம் போட்டு வளர்க்கத் தொடங்கியிருக்கிறேன்." என்று சொல்ல,

தீயணைப்பு வீரர் பொறுமையிழந்து, "மேடம்! முதலில் அட்ரஸை சொல்லுங்க" என்று கத்தினதும், அந்தம்மா, "என் வீட்டில் தீப்பிடிக்கவில்லை. பக்கத்து வீட்டில்தான் தீப்பிடித்து எரிகிறது. ஆனால், நீங்கள் வந்து தண்ணீரை அடிக்கும் போது என் தோட்டம் பாழாகாதபடி கவனமாக என் தோட்டத்தில் நீரைப் பீய்ச்சி அடிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்பதை சொல்வதற்காகத்தான் நான் முதலிலேயே உங்களுக்கு ஃபோன் செய்தேன்" என்ற பின்னே அட்ரஸ் சொன்னாங்க.

ஒரு இளைஞன் தங்கியிருந்த அறையைச் சுத்தம் செய்ய வேலைக்காரி வந்து, "சார்...உங்கேளோட புக்ஸ் உங்களோட டேப்ரிக்கார்டர் உங்களோட வாட்ச் எல்லாத்தையும் எடுத்துக்குங்க. நான் செல்பை சுத்தம் செய்யணும்" என்று அவன் கிட்ட சொன்னா.

அதுக்கு அவன் பொறுப்போட "அம்மா! உன்னுடையது என்னுடையது என்று பிரித்துப் பேசாதே. நம்முடையது என்று பொதுவாக சொல்லப் பழகிக் கொள்" என்று அறிவுரை சொன்னான்.

அன்று சாயங்காலம் அவனோட முதலாளியும் அவன் கல்யாணம் பண்ண இருந்த முதலாளியோட மகளும் அவனுடைய அறைக்கு வந்தாங்க. டீ கொண்டு வரச்சொல்லி வேலைக்காரியை விரட்டினான். போனவ ரொம்ப நேரம் கழிச்சுத்தான் திரும்பி வந்தா.

"டீ போட்டுக் கொண்டுவர ஏன் இவ்வளவு நேரம்? என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கோபத்தோடு கேட்க

அதுக்கு அவ "நம்முடைய படுக்கையறையை சுத்தம் செய்து கொண்டிருந்தேன்" என்றார்.

கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக ஈழத்துப் படைப்பாளிகள் இருவரின் கவிதைகள் இங்கே மீள்பிரசுரமாகின்றன.

பயணம்

இன்னும் தான் தெரியும் அக்காட்சி
என் மனதில்.

குத்துக்காலிட்டசையாது நிற்கும்
கொக்கும் நாரைகளும்
தூரத் தெரியும்
கோரைப் புல் வெளியிடையே
ஓடும் வாகனத்தில்
இருக்கும் போதெல்லாம்
இன்னும்தான் தெரியும் அக்காட்சி
என் மனதில்.

உதிர்ந்த காலங்களின் வழியே
கண்ணீரின் மீதே
கரைந்து போன என் பால்யமும்
சிறு மகிழ்வும்,
இந்தப் பெரு வெளியிலும்
கொஞ்சமாய்த்
தன்னை இழந்திருக்குமோ?

ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்தோடி
மேடும் பள்ளமுமாயான
பெரு மணல் திட்டுகளில் புரண்டு,
உடலெங்கும் மண் அப்பி
எழுந்து வர எண்ணிய
பயணங்களெல்லாம்
முடிந்துதான் போயிற்று.

இப்போதெல்லாம்
அசையும் வாகனத்தில்
அசையாப் பிண்டமென
ஒர் அமர்வும்
நகர்வது தெரியாமல் ஒரு நகர்வும்
இல்லையென்று போனால்...
உச்சி வெயிலுக்குத்
தகித்து
தங்கப் புள்ளிகளாய்க் கொதிக்கும்
நீர்ப் பரப்பைப்
பார்க்கும் சில
சமயங்களில் மட்டும்
முற்றுப் பெறா கவிதையொன்று
வந்து வந்து
நெருடி விட்டுப் போகும்.

வேறு என்ன?
எல்லாம் முடிந்துதான் போயிற்று
மூச்சிரைக்க முச்சிரைக்க
'ஸ்டியரிங்'கைத் திருப்புமென்
தந்தையின் தோளைத் தொட்டபடி
நின்று கொண்டு
நானே
பஸ்ஸை நகர்த்துவதாய்
எண்ணிக் களிப்புறும்
என் பயணமெல்லாம்
முடிந்துதான் போயிற்று.

இனியென்ன?

இப்போதென் மகளும்
இன்னுமிரு வருடங்களின் பின்
மகனும்
யன்னல் கம்பிகளைப் பிடித்தபடி
நின்று
அசையாதிருக்கும் கொக்கும் மர
ங்களும்
ஓடுவதாய்
காட்டிக் காட்டி களிப்புறுவதில்
எனை இழக்க முனைவேன்.

இருந்தும்
இன்னும் தான் தெரியும் அக்காட்சி
என் மனதில்
"முச்சிரைக்க, முச்சிரைக்க
ஸ்டியரிங்கைத் திருப்புமென்
தந்தையின்"

ஒரு சின்னப் பிரார்த்தனை இறைவா
எப்பொழுதெல்லாம் நான்
அப்புல் வெளியினூடு
பயணிக்கின்றேனோ
அப்பொழுதெல்லாம்
ஒரு கொக்காவது, நாரையாவது
மிஞ்சிப் போனால்
பஸ் சத்தத்திற்கு தலை நிமிர்த்தும்.
ஓர் எருமையாவது
தோற்றம் தரட்டும்.
அவ்வளவே.

திருக்கோவில் கவியுவன்

நன்றி- 'திசை'

சிறப்புக் கவிதை

சங்கம் புழைக்கும் மாயாகோர்வ்ஸ்கிக்கும்... சங்கம் புழை!

உன் நெஞ்சை முட்கள் கிழித்த கதையறிவேன்
"குளிர்ந்து போன என் நிராசை நித்தமும்
மூடுபனியாக உன் வீதியிற் படரும்"
என்றபடி துயரில் நீ செத்துப் போவாய்
உயிர் தின்றது உன் காதல்.

"நொருங்கியது காதற் படகு
வாழ்வும் நானும் பிரிந்தனம்...."
ஓ! மாயா கோவ்ஸ்கி
துயரிழந்தாய்!
குண்டுகளால் அதை வெல்லப் பார்த்தாய்.

காதலின் வசீகரம்
கடுமை தாக்க
நானும் உம் போல் மனமிழந்த கவிஞன்தான்.
இந்த வண்ணமெல்லாம்
நமக்கேன் நிகழ்கிறது?
மெல்லியதங் கொண்டிருந்தோம் என்பதாலா?

முதிரா இளைஞர் செயலென்று
உம்மையெல்லாம்
எள்ளுவார் அணி சேரேன்,
என்றாலும்
உமது வழி தொடரேன்
செய்வதற்கு இன்னும்
பணிகள் மிக உளதே!
செயலற்று வாழ்வில் ஒதுங்க முடியாது
பிறத்தியானெல்லாம்
உள் நுழையுங் காலம்!

முள்முடி குத்தும்
சிலுவை உறுத்தும்தான்
என்றாலும்
சாவுவரை வாழ்வேன்!
சாவுக்கு அப்பாலும்
என் செயலிற் கவியில்
உயிர்த்தெழுவேன்,
உயிர்த்தே எழுவேன்!.

சங்கம்புழை- காதலினால் தற்கொலை செய்த மலையாளக் கவிஞன்.
மாயகோவ்ஸ்கி- காதலினால் தற்கொலை செய்த ருஷ்யக் கவிஞன்.

அ. யேசுராசா.

நன்றி- 'அலை'

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

பிரிவதற்கு முன் யோசியுங்கள்

உங்கள் இரு வருக்குமான பிரச்சனைகளுக்கு விவாகரத்து ஒன்றுதான் தீர்வு என்ற முடிவுக்கு வந்து விட்டீர்களா? அப்படியானால் விவாகரத்துக்குப் பிறகு அமையப்போகும் வாழ்க்கைக்கேற்ப உங்களைத் தயார்படுத்திக் கொண்டு விட்டீர்களா? இதோ சில அறிவுரைகள்...

விவாகரத்தினால் ஏற்படும் நன்மை, தீமைகளை நன்றாக யோசித்து முடிவெடுங்கள்.

விவாகரத்துக்குப் பிறகு உங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்று முடிவெடுங்கள்.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அவர்களது எதிர்காலம் பற்றியும், விவாகரத்துக்குப் பிறகு அவர்கள் உங்கள் இருவரில் யாருடைய பொறுப்பில் வளரப் போகிறார்கள் என்றும் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை தோல்வியடைய நீங்கள் மட்டுமே காரணம் என்ற குற்ற உணர்வை வளர்த்துக் கொள்ளாதீர்கள். அதேபோல் கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொள்வதையும் தவிர்த்து விடுங்கள்.

விவாகரத்துக்குப் பிறகு குழந்தைகளைத் தாய் வளர்த்தால் தந்தையைப் பற்றியோ, தந்தை வளர்த்தால் தாயைப் பற்றியோ தவறான எண்ணங்களை ஏற்படுத்தாமல் வளர்க்கப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருமணத்தால் தடைப்பட்ட உங்களது இலட்சியங்களை விவாகரத்துக்குப் பிறகு நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

விவாகரத்தைப் பற்றிப் பேசி முடிவெடுக்கும் போது உங்கள் இருவரையும் தவிர, வேறு மூன்றாம் நபர்கள் யாரையும் தலையிட அனுமதிக்காதீர்கள்.

விவாகரத்துக்குப் பிறகு உங்களால் கணவன்- மனைவியாக வாழ முடியாமல் போகலாம். ஆனால், நல்ல நண்பர்களாக இருக்கலாம்.

விவாகரத்து மூலம் ஏதோ உங்கள் வாழ்க்கையே முடிவுக்கு வந்து விட்டதாக நினைத்துத் தன்னிரக்கத்தை வளர்த்துக் கொள்ளாதீர்கள். தன்னம்பிக்கையுடனும், தைரியத்துடனும் நாளைய தினத்தை சந்திக்கத் தயாராகுங்கள்.

விமர்சனங்களைக் கண்டு கொள்ளாத, பொருட்படுத்தாத மனப்பக்குவத்தை முதலில் வளர்த்துக் கொள்ளுங்கள். விவாகரத்துக்குப் பிறகு ஏராளமான விமர்சனங்கள் உங்களை ஊசியாய் குத்தும். அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாமல் போய் விடும்.

செல்வாஸின்

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டைமில் ஒட்டி அனுப்பினால் போதுமானது
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Ad

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

உண்மை– நேர்மை– வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 10- 08-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ் வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

மா. மனோகரி
21/2, 1ம் குறிச்சி, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

"சுதா! பணத்தைப் பத்தி கவலைப்படாதே... நிறையவே கொடுத்திருக்கார் என் கணவர்... உனக்கு ப்ளேன் டிக்கெட் வேஸ்ட் ஆறதேன்னு நான் மறு கல்யாணம் பண்ணிக்க முடியாது!" அனிதா சொல்ல.

"நான் அப்படிச் சொல்லலைடியம்மா!" என்றாள் சுதா.

"அவகிட்ட யாரும் பேசாதீங்கோ!" கமலம்.

"ஏன் இந்தவீட்டில யாரும் என் மனசைப் புரிஞ்சுக்க மாட்டேங்கறா!" அனிதா கேட்க.

"உன் மனசு உனக்கே புரியறதான்னு எங்களுக்குச் சந்தேகம்" என்றார் மகாதேவன்.

"அனி... சும்மா சும்மா ஏதாவது பேசிண்டிருக்காதே! வா! சீதா எங்கே?" கமலம்.

"சீதா உன் கூட வரலையா?- அனிதா."

"இல்லையே... எங்ககூடவும் வரலையே! எங்கயாவது போறதா சொன்னானா?" என்ற கேட்டாள் கமலம்.

"சொல்லலையே!"

"பின்னே எங்க போனான்?"

அனிதாவுக்குச் சற்றுக் கலக்கம் ஏற்பட்டது. ஒரு வேளை எக்குத்தப்பாக ஏதாவது விபரீத முடிவுக்குச் சீதா வந்திருப்பானோ...? சேச்சே... அப்படி இருக்காது.

மது, அனிதாவை அவள் அறையில் விட்டு விட்டு "நீ இப்ப ஓகே- தானே? நான் ஒரு இன்டர்வியூவுக்குப் போகணும்...போயிட்டு மத்தியானம் வந்துர்றேன்" என்று முதுகில் தட்டிவிட்டுப் போனாள்.

"எனக்கு வைரவனைச் சந்திச்சாகணும் மது... எந்த ஊர்ல இருந்தாலும் சரி!"

"நான் விசாரிக்கிறேன்" என்று சென்ற மது, மத்தியானம் வரவில்லை. சீதாவும் வரவில்லை. அனிதாவுக்குப் பயம் அதிகமாயிற்று. "சீதா எங்கே போனான்?"

ராஜாராமன், சீதாவின் ஆபிஸுக்குப் போன் பண்ணி மல்லிகாவை விசாரித்தார். அவள், "ஆபிஸ் வரவில்லை" என்று சொன்னாள்.

"கல்யாணம் இல்லைன்னப்புறம் நான் நேரா பாங்க் வந்துட்டேன். சீதா என் கூட வரலை! அவன் இன்னிக்கு ஆபிஸ் லீவு... பதினஞ்சு நாள் லீவு போட்டிருக்கான்..." என்றாள் மல்லிகா.

சாயங்காலம் வரை சீதா வராத போது, எல்லோருக்கும் கவலை பரவியது. ஏதாவது போன் வருமா எனக் காத்திருந்தார்கள்.

"எங்கே போவான்? போறதுக்கு ரெண்டு மூணு இடம் தானே இருக்கு?" என்ற கமலம், "ஜிம்பு, எங்கடா சீதா?" என்றாள்.

"விஸ்வநாதன் வீட்டுலகூட சீதா இல்லை! சில சமயம் கித்தார் கத்துக்கப் போவான் அங்க... அங்கேயும் காணோம்...வேற எங்கே போனான்?" என்று அனைவரும் அடிக்கடி அனிதாவைப் பார்க்க, அனிதாவுக்குக் குற்ற உணர்வு மனதில் குறுகுறுத்தது.

"சே சீதா, அப்படியா செய்வான்?"

"அவன் மனசு எப்படிப்பட்டதுனு என்ன தெரியும் உனக்கு?"

"பிச்சைக்காரன் பாத்திரத்தில தங்கச் சங்கிலியைப் போட்டபோதே தெரிஞ்சு போச்சு... சீதா மனசு உடைஞ்சு பேதலிச்சுப் போச்சுன்னு! அவனைத் தனியா விட்டிருக்கக் கூடாது...!" சுகந்தி சொன்னாள்.

"எல்லாம் இவளால.... இந்தக் கடன் காரியால வந்தவினை! இவ எப்ப பிறந்தாளோ அப்பவே இந்த வீட்டில..." என்று ஆரம்பித்த மகாதேவனை... கமலம், "சும்மாருங்கோ" என்று அதட்டினாள்.

அனிதாவுக்கு அந்த கணம்தான் வாழ்க்கையின் மிகத்தாழ்வான, மிகுந்த பயமளித்த கணமாக இருந்தது. "சீதா என்ன செய்தாலும், செய்து கொண்டாலும் அதற்கு நேரடியான காரணம் நான் தான். நான் எப்போதாவது அவனிடம் சொன்னேனா.."உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்" என்று....? இவர்களாகத்தான் அவசர அவசரமாக ஏற்பாடு செய்தார்கள்... ஒருவேளை சம்மதம் என்று எப்போதாவது சொன்னேனா?" அனிதாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

ராத்திரி பன்னிரண்டு மணியாகியும் சீதா வரவில்லை. சுகுவார் தெரு மேன்ஷனில் சீதாவின் அறை பூட்டி இருப்பதாக ஜிம்பு வந்து சொன்னான்.

"போலீஸுக்கு போன் போட்டுச் சொல்லிட வேண்டியதான். சீதா போட்டோ ஏதாவது இருக்கா?" ஜிம்பு கேட்டான்.

நவீன எழத்துலக வேந்தன் சுஜாதா

"எதுக்குடா?"

"எதுக்கா? டெலிவிஷன்ல காட்ட!"

அப்போது டெலிபோன் மணி ஒலிக்க... அதை எடுக்க எல்லலோரும் தயங்கினார்கள். அகாலமான அதன் நடுராத்திரித் துல்லிய ஒலியில் ஒரு கெட்ட செய்தி....ஒரு எச்சரிக்கை- இருந்ததை நரம்புகளில் உணர முடிந்தது.

"யாராவது போனை எடுங்களேன்."

அனிதாதான் எடுத்தாள், எதிர்முனையில் "நாங்க போலீஸ் கமிஷனர் ஆபிஸ்லருந்து பேசறோம்... மிஸிஸ் அனிதா இருக்காங்களா?" என்ற குரல்.

"அனிதாதான் பேசறேன்!"

"நீங்க உடனே எக்மோர் கமிஷனர் ஆபிஸுக்கு வர்றீங்களா...."

"என்ன விஷயம்....சீதாராமன்...."

"நீங்க வாங்களேன், விஷயம் தெரியும்!"

எதிர்முனையில் போன் வைக்கப்பட அனிதாவும் போனை வைத்தபோது அனைவரும் அவளை ஆவலுடன் பார்த்தனர்.

"ஜிம்பு....உடனே ஒரு ஆட்டோ கொண்டு வா!

போலீஸ் கமிஷனர் ஆபிஸுக்கு என்னை வரச்சொல்லியிருக்கா!"

"அடராமா! கிருஷ்ணா! என்ன சோதனை இது....சீதாவோட பாடியை அங்க வெச்சிருக்காளாமா...."

கமலம் அலற.

"அதெல்லாம் ஒண்ணும் சொல்லலை...உடனே வான்னு சொல்லிருக்கா!" என்றாள் அனிதா.

"மாப்பிள்ளை... கூட நீங்களும் போங்கோ! டெட் பாடியைப் பார்த்து ஜிம்பு பயந்துக்கப் போறான்" என்ற மகாதேவன் சொல்ல... ஜிம்பு பாய்ந்து ஆட்டோ பிடித்து வர ஓடினான்.

இருட்டில் அந்தக் கட்டடத்தின் வடிவங்கள் சரியாகப் புலப்படவில்லை. ஒரு சில விளக்குகள் மட்டும் எரிந்து கொண்டிருக்க, பக்கவாட்டிலிருந்த ஒரு கமான் வளைவின் அருகில் வெளிச்சம் அதிகமாக இருந்து, கூட்டமும் சேர்ந்திருந்தது.

அனிதா, ஜிம்பு, ராஜாராமன் மூவரும் அங்கே செல்ல, "வாங்கம்மா... உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம்! கான்ஸ்டபிள்... இவங்களை அழைச்சுட்டுப் போங்க...." என்றார் ஒரு இன்ஸ்பெக்டர்.

கடப்பைக் கல் பதித்த மௌனமான வராந்தாவில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நடந்தார்கள். "கடவுளே... செய்தி அப்படி இருக்கக்கூடாது.... இது அநியாயம்! என் அறியாத ஒரு செய்கைக்காக இத்தனை பெரிய விளைவு கூடாது..." அனிதா மனதுக்குள் புலம்பினாள்.

"உட்காருங்க..."என்று ஒரு நாற்காலியைக் காட்டினார்."இவங்கதான்...." என்றபடி அருகே மேஜையிலிருந்த சாவியை எடுத்து, எதிரே பூட்டியிருந்த கதவைத் திறந்தார்.

"உள்ளே போங்க...!"அனிதாவிடம் சொல்லிவிட்டு, ராஜாராமன், ஜிம்பு இருவரையும் பார்த்து, "நீங்க இங்கேயே இருங்க- அவங்க மட்டும்தான் போகலாம்!" என்றார்.

அனிதா அந்த அறையின் மெல்லிய இருட்டை நோக்கி நடந்தாள். "இதுதான் அவள் வாழ்க்கையில் கடைசி நடை, கடைசிப் பிரயத்தனம்" என்பது போல... இந்த நடையின் முடிவில் கிடைக்கப் போகும் செய்திதான் அவள் வாழ்வின் இறுதி ஆச்சரியம்..... இனிமேல் எல்லாமே வெட்ட வெளி.... என்பது போல நடந்தாள்.

[அனிதா வருவாள்...]

சக்தி யென்ற மதுவையுண் போமடா!
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே,
ஒத்தி யல்வதோர் பாட்டும் குழல்களும்
ஊர்வி யக்கக் களித்துநின் றாடுவோம்.

சுப்பிரமணிய பாரதியார்-

பாப்பா மூரசு சிறுகதை

சிஷ்யன் செய்த சாதனை



'காலம் பொன் போன்றது' என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப் பீர்கள். அதாவது, மிகவும் விலை மதிப்பான தங்கத்தைப் போன்றது காலம் ஆகும் என்பது இதன் விளக்கம்.

அத்தகைய பொன்னான காலத்தை எப்படி எப்படியோ வீண டித்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படித்தான் பதினான்கு ஆண்டு காலத்தை வீணடித்தான் அபு என்ற இளைஞன்.

சீவூர் என்ற நாட்டைச் சேர்ந்த இளைஞன் தான் அபு.

அவன் குருகுலத்தில் கல்வி கற் றுக் கொண்டிருக்கும் போதே, கடவு ளிடம் தவமிருந்து அரிய பல சக்தி களைப் பெற வேண்டும் என்ற ஆசை வந்தது. குரு மவ்னாவிடம் அந்த விருப்பத்தைச் சொல்ல, அவரும் அனுமதி கொடுத்தார்.

அபு ஆள் நடமாட்டமில்லாத காட் டுப் பகுதிக்குச் சென்று தவத்தை மேற்கொண்டான்.

தொடர்ந்து பதினான்கு ஆண்டு கள் கடுந்தவமிருந்தான்.

ஒரு நாள் கடவுள் அவன் முன் தோன்றி, "பக்தா! உன் கடும் தவத்தை மெச்சினேன். உனக்கு என்ன வேண் டுமோ கேள்?" என்று கேட்டார்.

"கடவுளே! எனக்கு நீரின் மேல் நடக்க வேண்டும் என்று சிறுவயதிலி ருந்தே ஆசை. அந்தச் சக்தியை மட் டும் தாங்கள் எனக்குக் கொடுத்தால் போதும்," என்றான் அபு.

"அப்படியே தந்தேன். இனி நீ நீரில் நடப்பாய்!" என்று கூறிவிட்டு மறைந்தார் கடவுள்.

அபு எழுந்தான். அவனுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. உடனே நீரின் மேல் நடந்து பார்த்து விட வேண்டும் என்ற ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அருகிலேயே ஒரு ஆழமான ஏரி இருந்தது. அதில் நிறைய நீர் இருந்தது. அபு துள்ளிக் குதித்துக் கொண்டே ஏரிக்குப் போனான்.

கடவுளை மனதிற்குள் நினைத்த படியே நீரில் காலை எடுத்து வைத் தான்.

ஆச்சரியம்!

அவன் கால் நீருனுள் போக வில்லை. தரையின் மேல் நிற்பது போன்று நீரின் மேற்பரப்பில் நின்றது.

அபு இரண்டாவது காலையும் எடுத்து நீரில் வைத்தான்.

முழ்கவில்லை. அப்படியே நடந் தான்.

அவனால் மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

நேரே குரு மவ்னாவிடம் ஓடி வந்தான்.

அவனை வரவேற்ற மவ்னா, "கடவுளிடம் என்ன வரம் பெற்றாய்?" என்று கேட்டார்.

"குருவே! நீரின் மீது நடக்கின்ற அபார சக்தியைக் கேட்டு பெற் றிருக்கிறேன். அதைப் பரீட்சித்தும் பார்த்து விட்டேன்." என்றான்.

அதைக் கேட்டதும் மவ்னாவின் முகம் சுருங்கியது.

"நீரின் மேல் நடக்கும் சக்தியைப் பெற்றாயா? அதனால் உனக்கு என்ன பலன்?"

"என்ன குருவே அப்படிக் கேட்டு விட்டீர்கள். நீரின் மேல் இந்த உலகில் யாரால் நடக்க முடியும்? நான் ஒரு வன் அதைச் சாதனையாக நிகழ்த்திக் காட்ட முடியும். நீரின் மேல் நடந்து சென்று மறுகரையை எளிதாக அடைய முடியும்!"

மவ்னா அவனை வைத்த கண் எடுக்காமல் பார்த்து

"பதினான்கு வருடத்தை நீ வீண டித்திருக்கிறாய்!" என்றார்.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட அபு, "என்ன சொல்கிறீர்கள் குருவே? பதி னான்கு ஆண்டுகளை நான் வீண டித்து விட்டேனா? எப்படி?" என்று படபடப்புடன் கேட்டான்.

"நீ செய்திருப்பது ஒரு சாத னையா?"

"நிச்சயமாக!"

"நீ ஒரு நாணயம் கொடுத்தால், உன்னைச் சொகுசாகப் படகில் ஏற் றிச் சென்று மறுகரைக்குக் கொண்டு போய் சேர்ப்பானே படகுக்காரன். இதற்குப் பதினான்கு ஆண்டுகளை வீணாக்குவானேன்..." என்றார்.

அபுவுக்கு அப்போதுதான், தான் தவறு செய்துவிட்டது புரிந்தது.

மௌனமாகத் தலை குனிந்தான்.

உங்களுக்குக் கிடைத்திருக்கும் நேரத்தை எப்பொழுதுமே விரயம் செய்யாதீர்கள். நல்ல சந்தர்ப்பங் களை உபயோகமாகப் பயன்படுத்துங் கள்! அப்போது நீங்கள் உயர்ந்த நிலைக்குப் போய்விடுவீர்கள்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.08.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **456**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 453

பரிசுக்குரியவர்:

எம்.எச்.எ.ப். ஷர்மிளா,
குருகொட, அக்குரணை.

பாராட்டுக்குரியவர்கள்:

அகல்யா இரவீந்திரன் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழு.-04.	**விமல்ராஜ்** மத்திய வீதி, பெரிய நீலாவணை-01., கல்முனை.
எல். பாரத் பலாங்கொடை த.ம.வி., பலாங்கொடை.	**எஸ். சப்னி ஹசன்** கிழக்கு வீதி, அக்கரைப்பற்று-01.
எம்.ஹாசிக் இலாஹி ஹமிட் அல் ஹுசேனி தே. பாடசாலை,கொழு.-12.	**எம்.எச்.எம்.சப்வான்** அல்.அதன் ம. வி., பதுளை.
சுவஸ்திகா ரெங்கராஜ் பிரதான வீதி, கலஹா.	**அ.மொறினஸ்** பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
தங்கவேல் புகலேந்திரன் அவரவத்தை எஸ்டேட், சாமிமலை.	**எம்.அவ்ஷாப்** கம்பொல ஸாஹிரா கல்லூரி, கம்பொல.

விடுகதைகளும் விடைகளும்

1. ஆளில்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது அது என்ன?
2. பறந்தோடுவது போல் பாய்ந்தோடும் செங்காளை தண்ணீருக்கு உயிரைக் கொடுக்கும் அது என்ன?
3. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை, அது என்ன?
4. நூல் நூற்கும், ராட்டை அல்ல அது என்ன?
5. கால் இல்லாதவன் தள்ளாடியபடியே பயணம் செய்வான் அவன் யார்?
6. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டித் தொங்குது அது என்ன?
7. ஆற்றில் விழுவான், ஆனால் நனையமாட்டான், அவன் யார்?
8. ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு ஆழாக்கு தண்ணீர் அது என்ன?

விடைகள்

1. நிழல்
2. நீர்
3. முழுசிரி
4. சிலந்தி
5. குடை
6. சுரைக்காய்
7. நிழல்- மழை
8. உப்பு

அதிசய உலகம்

படத்தில் இருக்கும் பூவின் பெயர் ஆர்ம் லில்லி. ஆர்கிட் வகை பூக்கள் குடும்பத்தைச் சேர்ந்தது. இந்த பூவினுள் ஒளிந்து கிடக்கும் தவளை யாரின் பெயர் 'ஆர்ம் லில்லி', 'ப்ராக்'. இவர் எப்பொழுதும் இந்தப் பூக்களின் உள்ளே அடக்கமாக அசையாமல் அமர்ந்து கொண்டு தனது 'பிங்க்' நிறக் கால்களை உடம்பிற்கும் கீழ் மறைத்துக் கொண்டு அமர்ந்திருப்பார். பூச்சி, சிலந்திகள் பூவினருகில் வந்தவுடன் அப்படியே உஷாராகி, தனது வாயினால் அவைகளை 'லபக்' என்று பிடித்து விடுவார். நீரிலும், நிலத்திலும் வாழும் பிராணியான இது, சாதாரணமான தவளைகளை விட அளவில் சிறியதாக இருக்கும். அதாவது 2.5 செ.மீ., நீளமுடைய இந்தத் தவளையார் 45 செ.மீ., உயரத்திற்குத் தாவிக் குதிப்பார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

ஐரோப்பாவில் 'சிகப்புகால் பேட்ரிட்ஜ்' பறவை இனம் வசிக்கிறது. பெண் பறவைகள் இரண்டு கூடுகளில் முட்டையிடும். ஒரு கூட்டில் பெண் பறவையும், மறு கூட்டில் ஆண் பறவையும் அமர்ந்து அடை காக்கும். பெண் பறவை ஒரே சமயத்தில் 15 முதல் 28 முட்டைகள் இடும். எல்லா முட்டைகளும் குஞ்சு பொரிப்பதில்லை. முக்கால்வாசி முட்டைகளை இதன் எதிரிகள் வந்து தின்று விடும். இப் பறவைகள் முட்டைகளுக்குப் போதுமான பாதுகாப்பு தராததால் இந்த நிலை. 'பேட்ரிட்ஜ் பேர்ட்!' உனக்கு ஒரு சின்ன அட்வைஸ்... ஆண், பெண் இருவரும் சேர்ந்து வேலையைப் பகிர்ந்து கொள்வது சரிதான். அப்படியே முட்டைகளையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். சரியா?

இந்த வாரப் புதிர்

இங்கு கொடுக்கப்பட்டுள்ள புள்ளி களைக் கையை எடுக்காது 6 நேர் கோடு களால் இணைக்க வேண்டும். ஒரு புள்ளியை ஒரு தடவைக்கு மேல் கடக்கக்கூடாது. சென்றபாதை வழியே மீண்டும் திரும்பக் கூடாது.



சிரிப்புத்தோடன்

சென்றவாரப் புதிருக்கான விடை:



இலட்சியவாதி

விவசாயத் தொழில் போகத்துக்குப் போகம் ஒரே மாதிரியாகவே விளைச்சலைக் கொடுப்பதில்லை. ஒரு போகத்துக்கு கதிர் நிறைய நெல் மணிகள் வந்து பொலிந்தால் இன்னொரு போகத்துக்கு விளைச்சல் சோர்ந்துதான் இருக்கும். பள்ளத்திலிருந்து மேட்டிலேறி மேட்டிலிருந்து பள்ளத்திலிறங்கும் பாதை மாதிரித்தான் ஏற்ற இறக்கம் உழுதுண்டு வாழும் இந்தத் தொழிலிலும் இருக்கு.

இந்தப் போகம் ஐந்து ஏக்கரில் நெல் விதைத்து ஒரு குறுணியும் சண் முகத்துக்கு விளைச்சல் வரவில்லை. அதனாலே ஏமாற்றமடைந்தார்.

"என்ரை நகையும் போச்சு. எல்லாம் போச்சு. வயல் விதைக்கிற தெண்டு சொல்லி வீட்டில கிடக்கிற குண்டுமணியையும் விடாம வழிச்சுத் துடைச்சுக் கொண்டு போயிட்டியள். எல்லாத்தையும் அந்த மண்ணை நம்பிப் போட்டுப் பரிநாசமாக்கிப் போட்டியள்..."

அன்று காலையில் நித்திரை விட்டெழுந்ததும் பாயில் இருந்து கொண்டு இப்படி அரற்றினாள் அவருடைய மனைவி கமலம்.

"உப்பிடியேன் சொல்லுறாய்... ஞாயமே இது? மண்ணைத் திட்டாத... இந்த முறையில்லாட்டி அடுத்த முறையெண்டாலும் கட்டாயம் விளையும்..." அவர் விசுவாசித்தார்.

"உது ஒரு கதையெண்டு எப்பவும் சொல்லிக் கொண்டிருக்கிறியள்... பிள்ளை மாலதிக்கு மளமளவெண்டு வயசுபோய்க் கொண்டிருக்கு... அது எப்பனும் தெரியுதே உங்களுக்கு... சனம் இடம் பெயர்ந்து இங்கின வந்திருந்தாப் பிறகு உப்பிடி நிலங்களையெல்லாம் வீடு கட்டக் கேட்கிறதுகளுக்குக் குடுத்துக் காசாக்கிக் கொண்டிருக்குதுகள். நீங்கள் இதையெல்லாம் கட்டிப் பிடிச்சுக்கொண்டு ஏன் வைச்சுக்கொண்டிருக்கிறியள். அவையள் மாதிரி நீங்களும் வித்துப் போட்டு இங்க வீட்டில ஆக வேண்டிய அலுவல்களைப் பாக்கலாந்தானே?"

மனைவி இப்படிச் சொல்லவும் அவர் எரிச்சலடைந்தார். "என்ன சொல்லுகிறாய் நீ? கமத்தை விட்டால் எனக்கென்ன வேலை தெரியும்? அரு மந்த வயல் காணியளை வித்துப் போட்டு, இந்தத் தொழிலை விட்டிட்டுப் போய் பலசரக்குக் கடையில பொட்டலம் மடிக்கிற வேலை செய்யச் சொல்லுறியோ?"

"அப்படியேன் நீங்க போக வேணும்? இழவு பிடிச்ச உந்த ஒரு வேலையுமே இனி வேணாம். பாங்கில காசைப் போட்டா வட்டி விழும். மாசா மாசம் அந்த வட்டிக்காசையெடுத்து ராசா மாதிரி கதிரையில இருந்து காலை ஆட்டிக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம்" அதுவே அவளுக்கு இப்போது விருப்பம். எனவே அவருக்கும் ஆலோசனை சொன்னாள்.

"வாயை மூடு கமலம். இந்த விஷயத்தில நீ சொல்லுறதை நான் கேட்கத் தயாரில்லை... ஆர் இதுக்கெண்டு கச்சை கட்டிக்கொண்டு வந்து நிண்டாலும் நான் காணியளை விக்க மாட்டேன். நான் சாகுமட்டும் உதுகள் நடவாது கண்டியோ..." உறைப்பாகச் சொல்லிவிட்டு இருந்து விட்டார். என்றாலும் அவரது மனதுக்குள் பூகம்பம் வெடித்துக் கொண்டிருந்தது. 'பூப்பெய்திய பூவொன்றை வீட்டில் வைத்துக் கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறாய்...' என்ற அவருடைய இயலாத் தன்மையை மனச் சாட்சியும் படம் பிடித்துக் காட்டி, நெஞ்சை வருத்தியது.

மகளுடைய தாமரை முகத்தில் இதையொட்டிய வேதனை மறைந்து சிடப்பதையும் அவர் கண்டு கொள்ளாமல் இல்லை.அதனாலே இவற்றுக்கெல்லாமாக ஒரு நல்ல வழியை எங்கும் அவர் தேடிக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் மாலையில் இந்து இளைஞர் சங்கத்தாலே சமய கலாசார நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென அமைந்திருந்த மண்டபத்துக்குப் போய் அங்கே வருகின்ற சிறுவர்களுக்கு யோகாசன அப்பியாசங்களை இலவசமாகச் சொல்லிக் கொடுத்து வருவது அவரது பொழுது போக்கு. என்றும் போல் அன்றும் அந்த நற்காரியத்தைச் செய்துவிட்டு வரும் வழியில் வாசிகசாலைக்குள் புகுந்து பத்திரிகைகளின் பக்கங்களைப் புரட்டினார்.

தேவை... என்று போடப்பட்டிருந்த விளம்பரப் பகுதியிலே அவரது பார்வை நிலைத்தது. மாற்று சிறுநீரக சிகிச்சைக்காக சிறுநீரகம் கொடுத்து உதவக் கூடிய மனிதாபிமானிகளின் உதவியை நாடுகின்ற நோயாளி ஒருவர் தனது இரத்த இனத்தையும் தெரிவித்துத் தகுந்த சன்மானம் கொடுப்பதாகவும் தொலைபேசி எண்ணுடன் அந்த விளம்பரத்தில் அறிவித்திருந்தார்.

அதைப் பார்த்ததும் அப்படியே பத்திரிகையை ஒழுங்குபட நிரைப்படுத்தி வைத்துவிட்டு அவர் கடை வீதியில் உள்ள புத்தகக் கடைக்குப் போனார். அங்கே அதே பத்திரிகையை காசைக் கொடுத்து வாங்கினார். பின்பு வீட்டுக்குச் சென்று இரவுச் சாப்பாடு சாப்பிடும் நேரம் வரை மட்டும் அந்த விளம்பரத்திலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். கனநேரமாக அதையே ஆற அமர யோசித்துக் கொண்டிருந்து விட்டு, ஒருவாறாக தீர்க்கமான அந்த முடிவை அவர் மனதில் எடுத்தார்.

"கமலம்! நான் கொழும்புக் கொருக்கால் போய் வர வேணும்..."

"கொழும்பில உங்களுக்கு என்ன வேலையிருக்கு? அங்க போய் என்ன செய்யப் போறியள்?" கமலம் விளக்கம் கேட்டாள்.

"சம்மந்த அலுவலாய்ப் போறன்... நல்ல ஒரு இடம் இருக்கு... அவையளை வெளியால கொஞ்சம் விசாரிச்சுப் பார்ப்பமெண்டு பார்க்கிறன். சரி வந்துதெண்டால் மாலதிக்குச் செய்யலாம் கண்டியோ."

கமலத்துக்கு இந்தச் செய்தி நல்ல மகிழ்ச்சிதான். அங்கே கதைப் புத்தகமும் கையுமாக இருந்த மாலதிக்கும் கல்யாணம் என்ற அந்த அறிவிப்பு புல்லாங்குழலில் கேட்ட இனிய நாதமாக இருந்தது. என்றாலும் கமலம் சும்மா இருக்காது. அவரிடம் கேள்விக் கணை தொடுத்தாள்.

"கலியாணம் எண்டு வெளிக்கிட்டிட்டியள். அதை நடத்துறதுக்கு நகை நட்டுக்கள், தொகையள் எண்டெல்லாம் குடுக்கிறதுக்கு வைச்சிருக்கிறியளே?" அவள் அப்படிக் கேட்டதுக் கெல்லாம் உரிய காரணம் இருந்தது. பின்னே என்ன? இங்கே வீட்டுச் செலவுக்குக் கூடத் திண்டாட்டம். அப்படியெல்லாம் கிடக்க இந்தப் பெரிய காரியம் எப்படி ஆகும்? அதை நினைத்தே ஐமிச்சப்பட்டாள்.

"எனக்குத் தெரியும். எப்பவும் நான் எதைச் சொன்னாலும் நீ ஒரு நோவா நொட்டைதான் சொல்லிக் கொண்டிருப்பாய். இப்ப நான் போறது காசையும் தேடிக்கொண்டு. எல்லா அலுவல்களையும் முடிச்சிட்டு வரத்தான். விளங்குதே..."

கதையை அத்தோடு அவர் நிறுத்தினார். அவளும் சும்மா கண்டபடி கதைக்காது வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கொண்டாள்.

இவரைப் பார்த்தால் நாற்பத்தைந்து வயதென்று யாருமே சொல்ல மாட்டார்கள். யோகாசனப் பயிற்சிகள் அந்தளவுக்கு அவரது வயதின் அரைவாசியைக் குறைத்து இளமை அழகை வாரிக் கொடுத்திருந்தது. ஒரு நோயும் இன்றி வைரம் பாய்ந்த தேகக்கட்டுடனும் மலர்ந்த முகத்துடனும் நின்ற இவரைச் சிறுநீரக நோயாளி நிமிர்ந்து பார்த்தார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்குச் சம்மதம் என்றவரின் கைக்கு உடற் பரிசோதனைகள் முடிந்ததும் பண நோட்டுக்கள் கட்டுக் கணக்கில் கொடுக்கப்பட்டன. தனது ஒரு பக்க சிறுநீரகத்தை வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை மூலமாக அளித்து விட்டு, மூன்று மாதம் கழிந்து அந்தத் துயரத்தையெல்லாம் தூசிபோல் உதறிவிட்டு வீட்டுக்கு அவர் வந்து சேர்ந்தார்.

பெண்களுக்கு பணம், நகை, காணி, வீடு இருந்தால்தான் திருமண வாழ்க்கை என்ற ஊழ், தமிழ்ச் சமூகத்தில் இன்றும் இருந்து வருகிறது. எனவே முதலில் நகைகளை வாங்கி அவர் மகளைச் சோடித்தார். பிறகு மீதியை வங்கியில் போட்டார்.

"இந்தளவுக்கெல்லாம் செய்ய ஏதுங்கோ காசு? ம்ம்ம்..." மலைத்துப் போய் நின்றாள் கமலம்.

"எல்லாம் வர வேண்டிய காலத்தில் வரும். போக வேண்டிய நேரம் போக வேண்டியது போயிடும்"

அவருடைய கதையின் தத்துவப் பொருளைக் கமலத்தால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இப்படியே சில நாட்கள் நகர்ந்தன. கையில் அவரிடம் இருப்பு இருந்ததால் மகளுக்கு நல்ல இடத்துச் சம்மந்தம் ஒன்று தேடி வந்தது. அது முற்றாகி விட, தடல் புடலாக மகளுக்குக் கல்யாணத்தை அவர் நடத்தி முடித்தார். தான் செய்ய வேண்டிய ஒரு பெரிய கடமையை நிறைவேற்றினார்.

இப்போதெல்லாம் மொத்தமான மட்டை போட்ட அந்தப் புத்தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்த

நீ.பி. அருளானந்தம், கல்கிசை

வாறே அவர் பொழுது போகிறது. அது பகவத் கீதை என்ற புத்தகம். கடமையைச் செய் என்ற உயரிய தத்துவத்தை பகவத் கீதை கூறுகிறது. தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்து அவளுக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொடுத்ததில் பெரியதொரு கடமை நிறைவேறி விட்டதாக அவர் நினைக்கிறார்.

அன்று இரவு தொலைக்காட்சியில் இந்த மாரியிலே நல்ல மழை பெய்யும் என்ற செய்தியைக் கேட்டு அவருடைய உள்ளம் உவகையடைந்தது. மாலில் அடுக்கியிருந்த விதை நெல் மூடைகளைப் பார்த்தார். 'இந்தப் போகமாவது நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டும்' என்று கடவுளை நினைத்துக் கை கூப்பினார்.

நம்பிக்கைதான் விவசாயத் தொழில். மண்ணை நம்பித்தான் அவருடைய வாழ்வு இருக்கிறது. தன்னுடைய காணியை விற்கவோ, இருக்கின்ற வீட்டை விட்டு எங்கேயும் வெளிக்கிட்டுப் போகவோ என்றும் இடமளிப்பதில்லை. என்ற இந்த லட்சியத்தை மனதிலே வேரூன்ற வைத்துக் கொண்டுதான் அவர் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

எதை இழந்தாலும் தனக்கும் மற்றவர்க்கும் சோறு போடும் அந்த வயற்காணிகளை அவர் விற்க விரும்பவில்லை. தொடர்ந்து அந்த வயற் காணியையே நம்பிப் பயிர் செய்து வருகிறார். இப்படி இலட்சியமுடைய வறிய விவசாயியான அவரை யார் தான் கண்டுகொண்டு பெருமைப் படுத்தப் போகின்றார்கள்?

இவைகளையெல்லாம் அவர் எதிர்பார்த்து வாழவில்லை. தான் செய்கின்ற அந்த உழவுத் தொழிலிலே ஒரு ஆத்ம திருப்தி அவருக்கு இருக்கிறது. 'மன நிம்மதியாக வாழ்நாளைக் கழித்திட அது போதும்' என்பதே அவரது எண்ணம்.

திரைராகம்

அ.சுஹாசினி, பண்டாரவளை

அந்தக் கடிதத்தைப் படித்ததில் இருந்து அமுதாவிற்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. எல்லா ஆண்களுக்கும் மத்தியில் பிரஷாத் விதிவிலக்கு என்றிருந்தவளுக்கு, இப்போது பிரஷாத்தும் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டையாகவே' எடுத்துக் காட்டியது அந்தக் கடிதம்! அடுத்து அமுதாவிற்கு என்ன செய்வது என்று புரியவில்லை. காரணம், பிரஷாத்தை அவள் காதலித்துப் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கைப்பிடித்தவள். அதனால் பெற்றோரில் இருந்து சொந்த பந்தங்கள் வரை அனைவரும் அமுதாவின் உறவை அறுத்துக் கொண்டனர். தனிமரமான அவளைத் தாங்கியவன்தான் இந்த பிரஷாத். அதனால் அமுதாவிற்கு உலகம், உறவு, குழந்தை எல்லாமே பிரஷாத்தான். இப்படியே இரண்டு வருடமாக அவனுடன் சந்தோஷமாக வாழ்ந்த அவளை அந்தக் கடிதம் அளவுக்கதிகமாகவே நிலைகுலைய வைத்துவிட்டது. பிரஷாத்தின் பாக்கெட்டில் இருந்து எடுத்த அந்தக் கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்தாள்.

அன்புள்ள பிரஷாத்,

ஏன் போன வாரம் வீட்டிற்கு வரவில்லை? உன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த எனக்கு ஏமாற்றம்தான் மிச்சம். எங்கேயும் வெளியூர் போனாயா? எங்கு போனாலும், என்ன செய்தாலும் என்னிடம் சொல்லாமல் செய்ய மாட்டியே... அது சரி பிரஷாத்! ஒரு முக்கியமான விஷயம் உன்னிடம் சொல்லியிருந்தேன், நல்ல முடிவோடு வீட்டிற்கு வா.

இப்படிக்கு,
உன்னை எதிர்பார்த்துக்
கொண்டிருக்கும்,
சுதா.

கடிதத்தைப் படித்துவிட்டுக் கண்ணீருடன் சோபாவில் சாய்ந்து பழைய நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தவளை "காலிங்பெல்"சுயநினைவிற்கு வரவழைத்தது. கதவைத் திறந்தவளுக்கு முன்னால் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன் நின்றிருந்தான். அவளைக் கண்டதின் நண்பன். அவனிடம் எனக்காக வாடகைக்கு வீடு பார்க்கச் சொல்லியிருந்தேன். அது விஷயமாகப் பேசலாம் என்று... பரவாயில்லை. அவனை ஆபிஸில் சந்திக்கிறேன்." என்று கூறி, விடைபெற்றுச் சொன்றான் சுதாகர். அவன் சென்ற திக்கை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த அமுதாவிற்கு மனதிலிருந்த பாரம் குறைந்தது.

அவளுக்கே அவளைப் பற்றி நினைக்கையில் வெட்கமாயிருந்தது. 'சுதாவைப் போய் பொம்பளைன்னு நினைச்சு என்னுடைய பிரஷாத்தை ஒரு கணம் தப்பா நினைச்சுட்டேன்' என்று வேதனைப்பட்டாள். அதற்குப் பரிகாரமாக அன்று மதிய உணவைப் பிரஷாத்திற்குப் பிடித்தவாறு சமைக்கத் தொடங்கினாள். அதே நேரம் ஒபீஸில்,

"என்னடா பிரபு! என்னுடைய வீட்டிற்குப் போனாயே, என்ன நடந்தது? சொல்லேன்டா சீக்கிரம்."

வுடன் முகமலர்ச்சியுடன்,

"பிரஷாத் வீட்டில் இருக்கிறாரா?" என்றான். அமுதாவும் "அவர் ஒபீஸிற்குப் போயிருக்கிறார். நீங்கள் யார்? என்ன விஷயம்?" என்று ஒரே மூச்சில் கேட்டு முடித்தாள். அதற்கு வந்தவன் "என் பேரு சுதாகர், சுதான்னு கூப்பிடுவாங்க, பிரஷாத்

"அடேய்! பிரஷாத் என்னைப் பற்றி என்ன நினைத்தாய்? நீ சொன்னதைவிட ஒரு படி மேலாகவே அசத்திட்டேன். உன் மனைவி நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டாள்"

"அப்பாடா, ரொம்ப நன்றிடா பிரபு, நேற்று என் 'கேர்ல் பிரன்ட்' சுதா எனக்கு எழுதிய கடிதத்தை அமுதா பார்த்துவிட்டாள். இன்றே சுதாவிடம் சென்று சொல்லணும்டா வீட்டுக்கு கடிதம் எழுதாதே என்று. நல்லவேளை தப்பித்து விட்டேன்" என்றவாறு வீட்டிற்கு வீரநடை போட்டான் பிரஷாத்.

ஒரு கைதியின் கிளி

13

"என்னுடன் பேசும் போது அவளை உன் ஆள் பலமுறை அடித்தான்..."

"நிஜமாகவா? என்னைப் போலீஸ் அடித்ததை விட அதிகமாகவா அடித்தான்?"

"என் மகள் மீது கை வைத்ததற்கு நீ எப்படியெல்லாம் பதில் சொல்லப் போகிறாய் தெரியுமா?"- அவர் குரல் உறுமியது. "என் மகளுக்கு ஏ.ஸி. இல்லாமல் தூக்கம் வராது. எங்கே அடைத்து வைத்திருக்கிறாய்?"

"உங்களுக்கு எட்டாத இடத்தில், அவளைத் தேடி நீங்களோ, போலீஸோ, பிரைவேட் ஏஜென்ஸியோ ஓரடி எடுத்து வைத்தாலும், அவளுக்குத்தான் நஷ்டம்..."

"நீ சொன்னபடிதான் உன்னை வெளியே கொண்டு வந்தாயிற்றே! இன்னும் என்ன? என் மகளை நான் உடனே பார்க்க வேண்டும்..."

"நான்கு வருடங்கள்! நீண்ட வருடங்கள் நரகமான நான்கு முழு வருடங்களுக்கு மேல் நான் சிறையில் கிடந்த போது என் அம்மாவும் இப்படித்தான் துடித்திருப்பாள், இல்லை? நான்கு மணி நேரம் கூட ஆகவில்லை அமிதா என்னிடம் வந்து, அதற்குள் இப்படித் தவித்துப் போகிறீர்களே!"

"சி.எம். பிரச்சனை எனக்கும் உனக்கும்தான். இதில் குறுக்கில் என் மகளை ஏன் இழுக்கிறாய்?"

"நமக்குள் இன்னும் பிரச்சனை முடியவில்லையே, முடியும் வரை அவள் என் பாதுகாப்பில்தான் இருப்பாள்...."

"வாட் டூ யு மீன்?"

"இன்னும் எழுபத்திரண்டு மணி நேரத்திற்கு நான் உங்கள் நிழலில் தான் இருக்கப் போகிறேன். நீங்கள் எங்கே போனாலும் நானும் ஒட்டிக் கொண்டு அங்கே வருவேன்."

"என்ன உளறுகிறாய்?"

"உங்களுக்கு வேறு வழி இல்லை.... சுப்ரீம் கோர்ட் வரை நீங்கள் எனக்காகச் சாட்சி சொல்ல வேண்டி வரும்."

"நீ என்னென்னவோ பேத்துகிறாய்! எனக்கு உடனே அபிதாவைப் பார்க்க வேண்டும்..."

"வாய்ப்பு இல்லை! அவளுடன் பேசலாம். அதுவும் என் அனுமதி இருந்தால்.... எனக்கு பசிக்கிறது. காலையில் சாப்பிட்ட டிபன் எல்லாம் போலீஸிடம் வாங்கிய அடியில் கரைந்து விட்டது. ஒரு ஹோட்டலுக்கு வண்டியை விடுங்கள்..."

பரமேஷ்வர் பொறுமை இழந்தார். அவனைப் பார்த்து கையை ஓங்கினார்.

"உன் லிமிட்டைத் தாண்டுகிறாய்... என் சக்தி என்ன என்று மறுபடி பார்க்க ஆசையா? சுட்டுப் பொசுக்கி விடுவேன், ராஸ்க்கல்!"

"என் உயிர் போய் விட்டால் உங்கள் மகள் இருக்கும் இடத்தை அப்புறம் யார் சொல்வார்கள், வக்கீல் சார்?" சந்திரமோகன் சிரித்தான். "ஏதாவது உடுப்பி ஹோட்டலுக்கு வண்டியை விடுங்கள்..."

"என் ஆட்கள் உன் கண்ணில் ஊசி ஏற்றி உண்மையை வரவழைக்க முடியும். ராஸ்க்கல்...."

"நான்கு வருடங்களில் எத்தனையோ அடிகள், உதைகள்.... என் உடல் மரத்து விட்டது பரமேஷ் சார்."

சந்திரமோகன் சுயாதீனமாக கை நீட்டி அவருடைய ஸெல் ஃபோனை எடுத்தான். எண்களைத் தட்டினான்.

"ஹாய் அபி! உன் அப்பாவுடன் பேசுகிறாயா?"

பரமேஷ்வர் பரபரப்பாக ஃபோனை வாங்கிக் கொண்டார்.

"அபிதா...டார்லிங்....எப்படிடா இருக்கிறாய்?"

"நீங்கள் சந்திரமோகன் சொல்வதைக் கேட்கும் வரை எனக்கு எந்த ஆபத்தும் இல்லையப்பா... ப்ளீஸ் டாடி. அதை மறக்காதீர்கள்....."

"உன்னை மறுபடி அடித்தார்களாம்மா?"

"இதுவரை இல்லை, டாடி..."

"கவலைப்படாதேம்மா... உன்னை ராணுவத்தை வைத்தாவது நான் மீட்டு விடுவேன், டார்லிங்..."

சந்திரமோகன் வாய் விட்டுச் சிரித்தான்.

எதிர்முனை தொடர்பு அறுந்து விட்டது போலும்.

பரமேஷ்வர் ஆத்திரத்துடன் ஃபோனை அணைத்தார்.

"எந்த ஹோட்டலில் கொட்டிக் கொள்ள வேண்டும்?" என்றார்.

சந்திரமோகன் சிரிப்பை அடக்க முடியாமல் "வசந்தபவன்" என்றான்.

கார் நகர்ந்தது.

★★★

ஹோட்டலில் பரமேஷ்வரின் ஃபோன் ஒலித்தது.

மசால தோசையைக் கடித்துக் கொண்டிருந்த சந்திரமோகன் "எடுங்கள், பேசுங்கள்" என்று சைகை செய்தான். அவருடைய ஸெல் ஃபோனைக் காட்டி.

"மிஸ்டர் பரமேஷ்வர்?" என்றது அஸ்வினின் குரல்.

"யெஸ்..."

"அப்பா உங்கள் மீது ரொம்ப கோபமாகியிருக்கிறார். உங்களை ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னார். வரவில்லை. அவரைத் தாக்கிய சந்திர மோகனை ஜாமீனில் வேறு எடுத்திருக்கிறீர்கள்."

பரமேஷ்வருக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

"எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கிறது" என்று மென்று விழுங்கிச் சொன்னார்.

"என்ன காரணமாய் இருந்தாலும் இன்னும் அரை மணி நேரத்திற்குள் அப்பாவை வந்து பார்க்காவிட்டால், எங்களுக்கும், எங்கள் கம்பெனிகளுக்கும் வேறு நல்ல அட்வகேட் பார்த்துக் கொள்ள வேண்டி வரும் என்று அப்பா சொன்னார். வீட்டிற்கு வாருங்கள்."

தொடர்பு அறுந்தது.

"யார்?" என்றான், சந்திரமோகன், பரமேஷ்வரின் முகத்தில் கிளர்ந்த பதட்டம் பார்த்து.

"கிருஷ்ணதாஸின் மகன் அஸ்வின், என் மீது அவர்கள் வெகு கோபமாயிருக்கிறார்கள்."

"என்னாலா?"

"வேறு யாரால்?"

"கூடாக சர்க்கரை கம்மியாக ஒரு காஃபி ஒன்று" சப்ளையரிடம் ஆர்டர் செய்து விட்டு சந்திரமோகன் அவர் பக்கம் திரும்பினான். "எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கிறது என்று நீங்கள் புத்திசாலித்தனமாக பதில் சொன்னீர்கள்."

"இன்னும் அரை மணி நேரத்திற்குள் கிருஷ்ணதாஸைப் பார்க்க நான் போய்ச் சேராவிட்டால் என் வேலை பறி போய் விடும்."

"பார்க்கப் போகக் கூடாது என்று யார் சொன்னது? போய்ப் பாருங்கள்."

"உன்னை வெளியே கொண்டு வந்ததற்காக என் முகத்திலேயே அவர் காறித் துப்புவதற்கா?"

"பொய்யை உண்மையாக்கவும், உண்மையைப் பொய்யாக்கவும் உங்களுக்கு சொல்லியா தர வேண்டும்? இருந்தாலும் என் கருத்துக்களை நான் சொல்கிறேன். உதவுமா என்று பாருங்கள்."

சந்திரமோகன் காஃபியை உறிஞ்சிக் கொண்டே தன் திட்டத்தை விவரித்தான்.

●●●

கேட்டில் இருந்த வாட்ச்மேன் பரமேஷ்வரின் காரைப் பார்த்ததும், பரபரப்பாக கேட்டைத் திறந்து விட்டான்.

போர்ட்டிக் கோவில் நிறுத்தியதும் சாவியை ஒரு வேலைக்காரன் வாங்கிக் கொண்டான்.

கிருஷ்ணதாஸின் பர்சனல் செக்ரட்டரி புன்னகைத்தான். "சார் ரூமில் காத்திருக்கிறார்" என்றான்.

பரமேஷ்வர் படிகளில் ஏறி கிருஷ்ணதாஸின் பிரத்தியேக அறைக் கதவைத் தட்டிவிட்டு நுழைந்தார்.

எழுதுவது

சுபா

பெரிய மேஜைக்குப் பின்னே சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணதாஸின் முகத்தில் மூன்று இடங்களில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது.

கிருஷ்ணதாஸின் கண்கள் பரமேஷ்வரைப் பார்த்து கனல் கக்கின. எதிர் நாற்காலியைக் காட்டினார், கிருஷ்ணதாஸ்.

பரமேஷ்வர் அமர்ந்தார்.

கிருஷ்ணதாஸின் பக்கத்தில் அவர் மகன் அஸ்வின் இன்னொரு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

"உங்கள் கோபம் நியாயமானதுதான்" என்றார், பரமேஷ்வர். "ஆனால் நான் செய்ததற்கு முக்கியமான காரணம் இருக்கிறது."

அவருடைய சட்டைப் பாக்கெட்டில் செல்போன் இயக்கப்பட்டு முகம் திருப்பி வைக்கப்பட்டிருந்தது.

(கைதியின் கதை தொடரும்)

ஆறுமனமே ஆறு!

உயிர்கொல்லி எயிட்ஸ்-04

சித்திராவிடமிருந்து பரிசோதனை அறிக்கையை வாங்கிப் பார்த்தேன்.

"எச்.ஐ.வி. பொஸிற்றிவ்" என் வாய் மெல்ல முணுமுணுத்தது.

இதைக் கேட்டு என்முன்னே இருந்த சுகந்தன் தீடீரென எழுந்து தன் தலைமீது கைகளால் அடித்து, "நான் பாவி! நான் பாவி! சித்திரா என்னை மன்னிச்சிடு! என்னை நோயாளியாக்கினதோட உன்னையும் நோயாளி ஆக்கிப்போட்டனே! சித்திரா... சித்திரா..." என்று மனைவியைக் கட்டிப் பிடித்துக் கதறியழத் தொடங்கினான். கணவனும் மனைவியும் கட்டிப் பிடித்தழுத காட்சியைப் பார்த்து நானும் கண் கலங்கிவிட்டேன். நலப்பணியாளரும் அழுதார்.

சுகந்தனும் சித்திராவும் அழுது ஓயும்வரை நான் அடுத்த அறையில் இருந்து என்னைத் தேற்றிக் கொண்டேன்.

மிகவும் இக்கட்டான நிலை. அவர்கள் இருவருக்கும் ஆறுதல் கூறி இயல்பு நிலைக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது.

"சுகந்தன்! சித்திரா! நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இனிமேல் இதனைப் பற்றிக் கவலைப்பட்டுப் பிரயோசனமில்லை. இனிமேல் உங்கள் பிள்ளைகளைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்கள் இந்த விஷயத்தை அறிந்து கொள்ளாமல் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இருவரும் ஒற்றுமையாக, அன்பாக, சந்தோஷமாக இருங்கள். இனிமேல் உங்கள் இருவரின் உறவில் எவ்வித கட்டுப்பாடும் தேவையில்லை. ஆனால், இனிமேல் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அந்தக் குழந்தைக்கும் இந்நோய் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சுகந்தன்! இனிமேல் உங்களால் இந்நோய் வேறொருவருக்கும் பரவாமல் இருந்தால் சரி!" என்று கூறிமுடித்தேன்.

சுகந்தனும் சித்திராவும் விடைபெற்றனர்.

அடுத்த சனிக்கிழமை சுகந்தனுடைய இரு பிள்ளைகளுக்கும் எச்.ஐ.வி. பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்திருந்தேன். நலப்பணியாளர் இருவரையும் அரச மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பரிசோதனை செய்து, அறிக்கையைக் கொண்டு வந்தார். இருவருக்கும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படவில்லை என்று அறிக்கை ஊர்ஜிதப்படுத்தியதில், மனதில் அமைதி, திருப்தி ஏற்பட்டது.

எஸ்.பி.லெம்பட்

எயிட்ஸ் நோய் ஏற்பட்டிருக்கலாம் என நான் கருதியவர்களுக்குப் பரிசோதனைகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

எயிட்ஸ் நோயால் ஏற்படப்போகும் பேராபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒரு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் சுகந்தன், சித்திரா வாழ்ந்த அந்த அகதி முகாமிலும், வேறு மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களிலும் 'எயிட்ஸ்' நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன.

குறிதவறிச் சென்றுகொண்டிருக்கும் ஈழ விடுதலைப் போராட்டத்தால் இடம்பெயர்ந்து இந்தியாவில், அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மீளக்குடியமர இலங்கைக்குத் திரும்பிவரும்போது, எயிட்ஸ் காவிகளாக வரும் சூழல் உருவாகியுள்ளது. உலகமே நடுங்கும் எயிட்ஸுக்கு இலங்கைத் தமிழர்களையும் பலியாக்கிவிட்டுள்ளது இந்தப் பாதை மாறிய போராட்டம்!

(தொடர்ந்து வரும்...)

ஆண்டவன் கட்டளையிட்டால் அரசியலுக்கு வருவேன் – ரஜனிகாந்த்

மலேசியாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் பேசிய ரஜனிகாந்த் "ஆண்டவன் கட்டளையிட்டால் அரசியலுக்கும் வருவேன்" என இரசிகர்களின் பலத்த ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார். கலை நிகழ்ச்சியை ராதிகா சரத்குமார் தொகுத்து வழங்கினார். பின்னர் ரசிகர்களின் கேள்விகளுக்கு ரஜனிகாந்த், கமல்ஹாசன் ஆகியோர் பதிலளித்தனர்.

கலை நிகழ்ச்சியின் போது இரசிகர்களின் கேள்விக்கு ரஜனிகாந்த் அளித்த பதில்கள்:

சினிமாவிலிருந்து அரசியலில் எப்போது குதிப்பீர்கள்?

திரைப்படத்துறையில் வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்துவிட்டேன் என்பதில் மனநிறைவு கொள்கிறேன்.

அடுத்து வேறு துறையில் கால் பதிக்கலாம் என்று நினைக்கிறேன். அது அரசியலாகவும் இருக்கலாம். ஆண்டவன் கட்டளையிட்டால் அரசியலுக்கும் வருவேன்.

சினிமாவில் வில்லனாக அறிமுகமானேன். வில்லனாகவே எனது வாழ்க்கை தொடரும் என நினைத்தேன். ஆனால், ஒரு புள்ளியில் எனது வாழ்க்கை மாறியது. இரசிகர்களிடம் எதிர்பார்ப்பு அதிகரித்துவிட்டதால் வில்லனாகத் தோன்றி நடிப்பதைவிடக் கதாநாயகனாகத் தோன்றுவதுதான் எனக்குச் சிரமமாகத் தோன்றுகிறது.

இரசிகர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்தென்ன?

சினிமாத்துறைக்கு வருவதற்கு முன் பல துன்பங்களை அனுபவித்தேன். இத் துன்பங்களையெல்லாம் கடந்துவர எனக்குத் தியானம்தான் உதவியது.

தியானம் அப்போது எனக்கு எளிதாகத் தோன்றியது.

ஆனால், அதனுள் நுழைந்த பின்னர்தான் சினிமாவைவிடத் தியானம் மிகவும் கடினமானது என அறிந்தேன்.

எந்த சமயத்தினராக இருந்தாலும் தியானம் செய்யுங்கள். குறிப்பாக இளைஞர்கள் இளம் வயதிலேயே தியானத்தில் ஈடுபடுங்கள். முன்று மாதத்தில் உங்கள் வாழ்க்கைப் பயணம் மாறிவிடும்.

சினிமாவிற்கு வராமல் இருந்தால், கண்டக்டராக வாழ்க்கையைத் தொடர்ந்திருப்பேன். பஸ் கண்டக்டராக இருந்திருந்தால் இப்போது இருப்பதைவிட மிகுந்த மகிழ்ச்சியாக இருந்திருப்பேன் என்றார்.

கமல்ஹாசன் பேசியதாவது:-

படத்திற்குப் படம் வித்தியாசமான கோணத்தில் நடிப்பதற்கு எந்தவொரு தந்திரத்தையும் நான் கையாளவில்லை. இரசிகர்களாகிய உங்களது எதிர்பார்ப்பிற்கு ஏற்பவே நாங்கள் நடிக்க முயல்கிறோம். நாங்கள் வெற்றி பெறாது என்று நினைக்கும் படங்களை 100 நாட்களைத் தாண்டி ஓட வைப்பீர்கள். வெற்றிபெறும் என நினைக்கும் படங்களைத் தோல்வியுறச் செய்வீர்கள். உண்மையில் நீங்கள் கையாளும் தந்திரத்தைதான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என கமல்ஹாசன் பேசினார்.

மலையகத் தமிழங்க இந்தியாவப் பகைச்சிக்கிறதுபுத்தி கெட்டதனமில்லீங்களா?



இவரு எந்த ஈழத் தமிழரப்பத்திக் கதைக்கறாரு?

மலையூரான்

Mமா, என்னா வந்துட்டுது நம்ம தலைவங்களுக்கு? கிறுக்குப் பிடிச்சாப்புல புத்தி ஓடுது? ஏதோ, சொதந்தரோங் கிடைச்சாப்போல உற்சாகோ பொத்துக் கிட்டுக் கௌம்பி நாடு நாடாப் பறந்து மொழங்கித் தள்ளுறானுங்க. நாம, தொழி லாளிங்க இங்க கிழிஞ்சுபோய் கெடக்கறோ.

நா இன்னா சொல்லறேன்னா, நம்ம குட்டி அமைச்சரு சந்திர சேகரு, இப்ப என்னாடான்னாக்கா, ஏதோ ஓப்பன் டிக் கெட்டுக் கெடைச்சாப்போல நாடு நாடாப் போயி வீடுதலை மொழக்கம் பொளக்கறாரே, நம்ம மலையகத்துச் சனங்களுக்கு ஏதும் சம்பந்தம் உண்டா இதுல. சம்பந்தம் கெடக்குது வுடுங்க, தொல்லைங்கள வலியப்போயி வாங்கிக் கட்டிக்க வம்பிழுத்து வுட்டுவாரோன்னுல்ல பயமாக் கெடக்கு தூங்க?

அவுஸ்திரேலியாவுக்குப் போயி பொங்கு தமிழ் நிகழ்சியில கலந்துகிட்டது தப்பில்ல, நமக்கும் பெருமைதாங்க, ஆனா அதுல நம்ம தோட்டத் தொழிலாளிங்க பிரச்சினைங் கள அம்போவுன்னு கைவுட்டுப்புட்டு, வெறுமனே வடக்கு கிழக்குத் தமிழங்க வெவகாரத்தை மட்டுமே ஒரத்துப் பேசிப்புட்டு வந்துட்டாரு.

அதுதாம் பரவாயில்லீங்க. நமக்கு இப்ப பீதியக் கௌப்புற விஷியோ என்னான்னா, இவரு ஒலகத் தமிழர் மாநாடுண்ணு சொல் லிக்கினு தமிழ்நாட்டுக்குப் போயி, தமிழ்நாட் டுல வைச்சே தமிழ்நாட்டுத் தலைவங்களுக் கெல்லாம் முதுகெலும்பில்லைன்னு கிறுக்குத் தனமாப் பேசிப்புட்டு வந்துப்புட்டாரே, வௌைவு என்னாகுமுன்னு இத்துனூண்டு தன்னு யோசிச்சாரா?

தமிழ்நாடுன்னா என்ன, அங்க எத் தனை கோடி தமுழங்க இருக்கிறாங்க, அவுங்க அரசியல் என்ன, நாம மலையகத் தமுழங்க எத்தின பேரு, நம்ம சக்தியென்ன, நம்ம அரசியல் என்ன, அவுங்களோட நம்மள ஒப்பிட்டா நாம எம்மாத்திரோ, நம்ம அரசியல அவுங்க அரசியலோட போயி வலிஞ்சு மோத வைக்க வேண்டின அவசியோ என்ன... இதுங்கள சிந்திக்காம ஒரு பொறுப்புள்ள அரசியல் தலைவர் எடுத்த வாக்குக்குப் பேசிப் புடலாமா?

என்னாயிருந்தாலு தமிழ்நாட்டு மக்களா ணைய நாம மதிக்கணுமில்லையா? சரியோ தப்போ அவுங்க தங்க தலைவங்கள, ஆட்சிங்களத் தெரிஞ்சுக்கறாங்க, அவுங்க தலைவிதிய அவுங்களே பாத்துக்கறாங்க, நாம ஏங்க அவுங்க தலைவங்கள அவுங்க மண்ணுக்கே போயி மட்டந்தட்டிப்புட்டு வரணு?

தமிழ்நாட்டுத் தலைவங்களுக்கெல்லா



தமிழ்நாட்டுல வைச்சே தமிழ்நாட்டுத் தலைவங்களுக்கு எல்லாம் முதுகெலும்பில்லை!

முதுகெலும்பு இல்லையெங்கறப்போ, அவுங் களத் தெரிவு செஞ்ச தமிழ்நாட்டுச் சனங் களுக்கு ஒட்டு மொத்தமா புத்தி கெட்டுப் போயிருக்குண்ணுதானே நாம சொல்ல வாறோ?

நாம இந்த இலங்கத் தீவுல கால் வைச்சப்போவே தொத்திக்கின்ன பிரச் சனைங்களொன்னுக்கும் இன்னும் தீர்வு கண்டுக்க வக்கில்லாம இருந்துகினு அடுத்த வங்களப்பத்திக் கொமண்ட்டடிச்சுக்கணுமா?

அவுங்க திருப்பிக் கேட்டாணுங்கன்னா இவரு நாக்கப் புடுக்கிக்குவாரா?

நீரு முதுகொலும்பு தடிச்சவருன்னா, ஒம்ம அமைச்சரா வைச்சுகிட்டே, அப்பக் கொத்மலைத் திட்டமுன்னு ஒம்ம ஜனங் களுக்குப் பாதகமான திட்டமொன்னக் கொணந்து தலையில கட்டுறானுங்களே, எங்கையா போயிடுச்சு ஒம்ம முதுகெலும்பு? நாட்டுல வெலவாசி வீஷம்போல ஏறிக்கிட்டி ருக்கே, ஒம்ம சனங்களுக்க சம்பள ஒயர்வு வாங்கிக் கொடுக்க ஒமக்குத் துப்பிருக்கா? ஒம்ம ஜனங்க இம்புட்டு நாளா நாட்கூலி தானே வாங்கிக்கிட்டிருக்காங்க, அவுங் களுக்கு மாசச் சம்பளோ வாங்கிக் கொடுக்க முடிஞ்சுதா ஒம்மால? இதொண் ணுக்கும் லாயக்கில்ல, நம்ம நாட்டவங் களுக்கு முதுகெலும்பிருக்கான்னு ஜோதிச் சுப் பாக்க வந்திட்டீராக்கமுன்னு கேட்டா னுங்கன்னு வைச்சுக்குங்க. இவரு எங்க போயி முஞ்சிய வைச்சுக்குவாரு?

அதுதானே கலைஞர் கருணாநிதி திருப்பிக் கேட்டாரு, அமா, இவரு எந்த ஈழத் தமிழரப்பத்திக் கதைக்கறாருண்ணு. இந்தக் கேள்வியில இருக்கிற சூட்டப் புரிஞ்சுப்பாரா இவரு? ஒங்க மலையகத் தமிழங்கள வீட்டுப் புட்டா ஈழத் தமிழங்கண்ணு சொல்லுறீங் கன்னு அவரு கேக்கறது புரியுதா இவருக்கு? நம்ம நாட்டுக்க வந்து இவரென்ன கதைக் கிறாருன்னுன்ன வீசனம் அதில தெரியுதில்ல? இது நமக்குத் தேவையாங்க?

ஒருபுறோ ஓப்புனாவே வை.கோ வீஷ யத்தில தமிழ்நாட்டு அரசாங்கத்த இவரு பகைச்சாச்சு. நம்ம மலையகத் தமிழங்க தாயகந் திரும்பிப் போனவங்க ரொம்பப் பேரு அங்க இருக்காங்க. வடக்கு கிழக்கு அக திங்களும் அங்க இருக்காங்க. இவுங்க மேல அவுங்க பழிதீத்தாங்கன்னா இவரால என்ன பண்ண முடியுங்கற ஒணர்ந்தா இப்புடி நடந்துக்கறாரு?

அதுதான் போச்சுன்னா மத்தப்பக்கம் எதிர்த் தரப்பில இருக்கற கலைஞரோட மூக்கையும் போய் ஒரஞ்சீப்புட்டு வாறாரு. தி.மு.கவையும் அ.தி.மு.கவையும் சேர்த்துப் பாத்தா தமிழ் நாட்டில என்பது சதவீதமுன் னாயிடும். அங்கால காங்கிரசு, கமினிஸ் டுங்க யாரும் இவரோட லயினுக்கு ஒத்துவர மாட்டாங்க. இப்புடி மொத்தத்தையும் பகைச் சுக்குன்னு எஞ்சி நிக்கற கொசுறுகளோட மட்டும் சேந்துகினு என்னாத்தக் கிழிக்கப் போறாரு இவரு?

அதுசரி வை.கோவை செறயில தள்ளிப் புட்டாங்கன்னு இம்புட்டு கெம்புறாரே, இவரை சிறையில தள்ளினாங்கல்ல, அப்போ வைக்கோ இவருக்காக ஒரு வார்த்தை தன் னும் சொன்னாரா? அம்புட்டுக் காலம் உள்ள யிருந்தப்போ இப்ப இவரு போயி கூட்டுச் சேந்துக்கினு கோரஸ் பாடுற நெடுமாறனு, ராமதாசு, திருமாவளவனுங்கெல்லாம் இவ ருக்காக ஒரு சின்னப் போராட்டம், பொதுக் கூட்டம், இல்ல ஒரு நாலுவரிப் பத்திரிகை அறிக்கை தன்னும் விட்டானுங்களா? அப்புறோ ஏம்பா இவரு அவுங்களோட மாயணும்?

வை.கோவைக் கைது செய்ததெங்க றது, அவுங்க நாட்டுச் சட்டம், அவுங்க அர சியல், அவுங்க வீவகாரம். நாம மலையகத் தமிழங்க ஏன் அதில போயி தலைய ஒடைச் சுக்குவான்?

வை.கோ. ஈழத் தமிழருக்காகவும் புலி களுக்காகவும் கொரல் கொடுத்தாருன்னா, அதுக்காக நாம இங்க அவருக்கு அனுதா பப் பட்டுக்கலாம். ஆனா அவுங்க நாட்டுக் குப் போயி அவுங்க அரசியலுக்க குதிச்சு அவுங்கள ஏங்க வம்புக்கு இழுக்கணும்?

வில்லங்கத்துக்குப் போயி அவுங்களப் பகைச்சுக்கிட்டு என்னாத்த நாம சம்பாதிச் சுக்கப் போறோ?

இவரு என்ன கூத்தாடினாலும் அவ ரோட சொந்த வீஷயமுன்னு வீட்டுக்கலாம். ஆனா அது திரும்ப மலையகத் தமிழங் களுக்குப் பாதிப்பாயிடுச்சுன்னா யாரு வீலை கொடுக்கறது?

நாம, மலையகத் தமுழங்க இந்தியா வுல இருந்து வந்தவங்க, இந்திய உறவுங்க அதிகமுள்ளவங்க, இந்திய கலாச்சாரப் பீணைப்புக் கொண்டவங்க, இந்திய நட்பு நமக்கு ரெம்ப அவசியமில்லையா? இந்தியா, குறிப்பாத் தமிழ்நாடு நமக்குப் பக்க பலமா இருக்கணுமில்லியா?

நாளைக்கு நமக்குன்னு ஏதும் ஆபத்து வாறப்ப இந்தியா குரல்கொடுக்கத் தக்க மாதிரி நாம நல்ல வீதமா அவுங்களோட உறவு நிலையை வைச்சுக்கணுமில்லையா?

மலையகத் தமிழங்க பத்தி அவுங்க ளுக்கு இருக்கக்கூடின அனுதாபத்தை யுங்கூடச் சீதறடிச்சுப்புடனுமுன்னா இவரு கெம்பிக்கிட்டு நிக்கறாரு? வெறுமனே பிரபலம் தேடிக்கின்னா சரியாயிடுச்சா? எல்லாத் தையும் எதார்த்தமா சிந்திக்கணுமில்ல?

நா எனக்குத் தோணினத ஓப்புனா சொல்லிப்புட்டே. மனசில பட்டத சொல்லிக் கறதே இப்ப வம்பாப் போயிடுது. ஏதோ சரியின்னு பட்டா எடுத்துக்குங்க, இல்ல... ஓரமாக் கசக்கிப் போட்டுப்புட்டு ஒங்களுக்கு ரைட்டுன்னு தோணுறாப்புல நடந்துக்குங்க. யாருக்கு வலியாம்?

சமாதானத்திற்கெதிரான நடவடிக்கை

ஊடறுப்பான்

குருதி வடியும் கொலைக்களமும் குண்டுச் சத்தமும் இனி வேண்டாம்! சமாதானம் மலரட்டும் என்ற எதிர் பார்ப்புக்களோடு காத்திருக்கிறார் கள் மக்கள். ஆனால், துயரமான அல்லது சர்ச்சைக்குரிய செய்தி வந்தால் போதும், பத்திரிகை விலைப் பட நல்ல வாசியெனத் துள்ளிக் குதித்துக் குதூகலித்து நாயாக அலைகிறார்கள் சில ஊடகக்காரர் கள்...!

பருவ மங்கை மீது பாலியல் வல் லுறவு... புதைகுழியிலிருந்து எட்டுப் பேர் சடலமாக மீட்பு... விறகு வெட் டச் சென்ற இளம் பெண்களிருவர் வீடு திரும்பவில்லை...

நீண்ட நாட்களாக இப்படியான செய்திகளை மட்டும் வைத்து எத் தனை நாள் ஓடுவதென்று தவித் துக்கொண்டிருந்த பத்திரிகையொன் றிற்குக் கிடைத்தது துரும்பு. இனி யென்ன யுத்தம் தொடங்கப் போகிற துதானே! செய்திக்கு இனிக் குறை வில்லை என்ற மகிழ்ச்சி ஆரவாரத் தில், முந்திவிட வேண்டுமென்ற அலாதிப் பிரியத்தில் முதற் பக்கத்தில், "அமெரிக்காவிலிருந்து புலிகளைச் சாடுகிறார் ரணில்..." என்று எழுதித் தள்ளிவிட்டார்கள்.

பேச்சுவார்த்தை மேசைக்கு வரப்போகும் பொறுப்பான பதவியி லுள்ள பிரதமர் கடும் விமர்சனம் கிளப்பியிருக்கிறார் என்றவுடன் மக் கள் வேறு திசைகளில் சிந்திக் கத் தலைப்பட்டுவிட்டனர். செய்தி யறிந்து தெருவுக்குத் தெரு கூட் டம்... மக்கள் தமக்குள் விவாதம்! அப் பத்திரிகையின் இணையத்தளத் தில் செய்தியை வாசித்துவிட்டு ஐரோப்பிய வீதிகளிலும் புலம் பெயர்ந்த மக்கள் புதிது புதிதாக ஏதோவெல்லாம் பேசிக்கொண் டார்கள்.

யுத்த சூழ்நிலையோ, சமாதான சூழ்நிலையோ எதுவாயினும் மக்க ளுக்குச் சரியான செய்திகளைக் கொடுக்கவேண்டியது ஊடகங் களின் பொறுப்பு. சரியெது? பிழை யெது? குறித்த இலக்கின் திசை யெது? என்பவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாகப் பத்திரிகைகள் ஆற்றவேண்டிய பங்கு அளப்பரியது. சமூகத்திற்கான தராசாக இருக்க வேண்டிய தார்மீகக் கடமையைச் சில பத்திரிகைகள் மறந்துதான் போய் விட்டன. குறைந்த பட்சம் வெளியிடு கின்ற தகவல்களையாவது சரி பார்த்துப் பிரசுரிக்க வேண்டாமா? சொற்பிழைகள் அல்லது சிறு தகவல் பிழைகள் பத்திரிகைகளில் ஏற்படு வது சாதாரணமானதுதான். ஆனால், செய்தியின் சாராம்சமே தலைகீழாக மாற வேண்டிய அவசரமும், தேவை யும் ஏன் ஏற்படவேண்டும்?

மறுநாள் புலிகள் தொடர்பான கருத்துப்பற்றிய விடயமென்பதால் அவசர அவசரமாக அப் பத்திரிகை திருத்தம் வெளியிட்டுப் பத்திரிகா தர்மத்திற்கு இழைத்த குற்றத்தி லிருந்து பாவ விமோசனம் பெற்றுக் கொண்டது. புலிகள் பல்லுக்குப் பத மானவர்களோ, சொல்லுக்குப் பத மானவர்களோ அல்ல. இடம் வாய்த்த இடத்தில் மட்டும்தான் பத்திரிகை யின் உறுமலும், முறுகலும் சாத்திய மாகும். ஆகவேதான், மறுப்பறிக்கை விட்டுத் தப்பிப் பிழைத்துக்கொண் டார்கள். நல்ல காலம், வேறு எவரு டைய செய்தி விவகாரம் என்றால் மறுப்பேது..? மன்னிப்பேது..? வந்த செய்தி வந்ததுதான்! மக்களும் நம்பியிருக்க வேண்டியதுதான்! சம் பந்தப்பட்டவர்கள் மக்களின் வீடு வீடாகப் போய் கதவைத் தட்டி உண்மை நிலையை எடுத்துச் சொன் னால்தான் உண்டு.

அந்தப் பத்திரிகைச் செய்தியை நம்பிய மக்கள் இன்னமும் அதி லிருந்து விடுபடவில்லை. செய்தியை நம்புவதா? மறுப்புச் செய்தியை நம்பு வதா? என்ற சங்கடத்தில் இன்ன மும்தான் மக்கள் ஆழ்ந்திருக்கிறார் கள். இச் செய்தியை மேற்கோள் காட்டி தமிழ்நாட்டிலிருந்து வெளி வரும் தினமணியின் இணையத்தளத் தில் ராஜீவ் காந்தி கொலை தொடர் பாக ரணில் அமெரிக்காவில் கருத் துத் தெரிவித்திருந்ததாகச் செய்தி வந்திருந்தது. ஆனால், தினமணி மறுப்புச் செய்தி எதனையும் வெளி யிடவில்லை.

பொறுப்பற்ற பத்திரிகையின் தக வலை நம்பி மக்கள் உதடு திறந்து கருத்துச் சொல்ல முற்பட்டதுதான் கவலைக்குரிய விடயம். இனி இப் பத்திரிகைகளை நம்பி யார்தான் வாய் திறப்பார்கள்? பத்திரிகைச் செய்தி களை நம்பித்தான் மக்கள் கருத்துப் பரிமாறவும், தீர்மானங்களை எடுக்க வும் வேண்டிய தேவை உள்ளது. இதனைப் புரிந்துகொண்டு எழுத முற்படுவார்களா?

பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு சமூகநோக்கு இருக்க வேண்டும். வியாபாரம் என்பது பிழையானது அல்ல. ஆனால், பத்திரிகையை வைத்து வியாபாரம் செய்ய முற்படு வது ஒரு சமூகத்தை அதலபாதாளத் திற்கு இட்டுச் செல்லவே வழி வகுக்கும்.

வியாபாரப் பத்திரிகையாளர் கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருப்பார்கள்!

பாராளுமன்றத்தில் அடிதடி

மலையூரான்

'வற்' வரியை அமுல் செய்வது மீதான சட்ட மூலம் விவாதிக்கப்பட்ட போது பாராளுமன்றம் யுத்த கள மாக மாறியது. குடிபோதையில் சண்டியர்கள் சிலர் கடைத் தெரு வில் சண்டை பிடிக்கும்போது பயன் படுத்தும் வார்த்தைப் பிரயோகங் கள் சபைக்குள் தாராளமாக அள்ளி வீசப்பட்டன.

பாராளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட வந்திருந்த பாடசாலை மாணவர்கள் உடனடியாக அங்கி ருந்து வெளியேற்றப்பட்டார்கள். நாட்டை ஆட்சி செய்யும் உயர் பிரதிநிதிகள் நிருவாக வழிமுறை கள்பற்றி ஆராயும் சபையில் கை, கால்களை நீட்டி மோதிக்கொண் டார்கள்.

பாடசாலை மாணவர்களை அழைத்து வந்திருந்த ஒரு ஆசிரி யர் சொன்னார். "சில திரைப்படங் களை வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று தனியாக ஒதுக்குவதைப் போல பாராளுமன்றத்தையும் இனி மேல் சிறுவர்கள் பார்க்கக் கூடாத இடமாகப் பிரகடனம் செய்ய வேண்டியதுதான்."

சில எம்.பி.க்கள் பயன்படுத்திய வார்த்தைகள் அவர்களது தரத் திற்கு மட்டுமன்றி அவர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றத் திற்கு அனுப்பிய மக்களுக்கும் சேர்த்து வெட்கக் கேடான விஷயம்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் பிரபலமான கடுவெல 'வசந்த' சொத்தி உபாலி, கோனவல சுனில், பெத்தகானே சஞ்சீவ போன்ற அமரர்களுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத 'தாதாக்கள்' எமது பாராளுமன்றத்தில் இருக்கிறார் கள் என்பதைக் கடந்த வாரச் சம்பவம் நிரூபித்துள்ளது. அதை விட யாரை யாரும் குறை சொல்ல முடியாதபடி இரண்டு பிரதான கட்சிகளின் உறுப்பினர களும் தமது பங்குக்குத் தூசணம் பேசினார்கள். மரியாதையான அர சியல்வாதிகளாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஜே. வி. பி உறுப் பினர்கள், அனைவரையும் விஞ்சும் படி நடந்து கொண்டார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் காலங்களில் முச்சக்கு முந்நூறு தடவை கூறிக்கொண் டிருந்த "புதிய அரசியல் கலா சாரம்" பாராளுமன்றத்திலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்போர்ட்ஸ்

முரளிக்கு எதிராக விசாரணை

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாடுகளை விமர்சிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தமைக்காக இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சபையின் உள்ளக விசாரணைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

தனியார் தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றின் போது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கடந்தகால நடவடிக்கைகளை முரளிதரன் விமர்சித்ததுடன், அந்த நிகழ்ச்சியின் போது இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க, கிரிக்கெட் அதிகாரிகள் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை ,ஆமோதித்தும் பேசினார்.

இந்தச் செயல் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிமுறைகளை மீறும் செயலெனக் குறிப்பிட்டிருக்கும் சபை, முரளிதரனுக்கு எதிராக உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளது.அவசியம் ஏற்பட்டால் விசாரணை அறிக்கை வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

சுசந்திகாவுக்கு பதக்கம் இல்லை!

மான்செஸ்டரில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தடகளப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் எவரும் பதக்கங்கள் எதனையும் வென்றெடுக்கத் தவறியுள்ளனர்.

இலங்கையின் நம்பிக்கைக்குரிய ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க, கலந்து கொண்ட 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்திற்கே தெரிவானார். சுசந்திகா 100மீற்றர் தூரத்தை 11.08 விநாடி களில் ஓடி முடித்தார். இந்தப் போட்டியில் பஹாமாஸ் வீராங்கனை டெஃபி பேர்கஸன் 10.91 விநாடிகளில் ஓடி முடித்துத் தங்கப் பதக்கத்தை வென்றார். ஜமேக்கா வீராங்கனை வெரோனிகா கெம்பல் (11.00) இரண்டாவது இடத்தையும், பஹாமாஸைச் சேர்ந்த செவனிடா பயின்ஸ் (11.07) மூன்றாவது இடத்தையும் வென்றனர்.

இலங்கையணியின் ஏனைய வீர, வீராங்கனைகளில் எவரும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.. ●

★ பாராளுமன்ற அடிதடி எப்படி?

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

தமிழ்நாட்டுச் சட்டசபையில் அடிதடிகளைக் கேள்விப்படும் பொழுது, நாம் கொஞ்சம் நாகரிகமானவர்கள் என்ற பெருமை முன்பிருந்தது. பிறகு யோசித்துப் பார்த்ததில், கருத்து வேற்றுமை கொண்டவனைப் பட் பட்டென்று மண்டையில் போட்டு அழித்து முடித்துவிடுவதைவிட, தாமரைக்கனி வகையறாக்கள் போல வேட்டியை இழுத்து முதுகைத் தட்டி விசாரிப்பது மேலானது என்று தோன்றியது. உண்மையைச் சொன்னால் என்ன? எதிர்க் கருத்துக்களுக்காக உடல் மிச்சமில்லாமல் அழிந்து போவதைவிட சட்டசபையில் கதிரை மேசைகளை உடைத்து ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டார்களானால் எவ்வளவோ நல்லதே என்று ஏங்க ஆரம்பித்து விட்டது மனது. இப்போது இது பூர்த்தியாகிவிட்டது. வெளியே மண்டையில் போடுதல் எப்போது நிற்கும்?

★ கடைசியாக என்ன படம் பார்த்தீர்கள்?

ஐ.அஸ்மி அஹமட், திக்குவல்லை.

'ஏய் நீ ரொம்ப அழகாயிருக்கே!' காதல் தோல்விக்கு, பழிவாங்குவதோ, தன்னைத் தானே அழித்துக்கொள்வதோ சரியானதல்ல. பிரதிபலனை உத்தேசிக்காத அன்புதான் காதல் என்கிறார் வஸந்த். ஆனால்,காதலர்கள் என்ன விதப்பட்டும் இணைந்தேயாக வேண்டும் என்ற தமிழ்ச் சினிமா விதியை மீற முடியவில்லை அவருக்கும்.

★ சமாதானத்தை ஏற்படுத்துவது அவ்வளவு கஷ்டமா?

ஏ.எம்.நளீம், வாழைச்சேனை-05.

போரை விடச் சமாதானத்திற்கான பாதை மிகக் கடுமையானது. தனது சமாதானப் போக்கிற்காகத் தன் நாட்டவராலேயே கொல்லப்பட்டவர் இஸ்ரேலியப் பிரதமர் இட்ஷாக் ரொபின். 1993 செப்ரம்பர் 13, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் முன்னிலையில் பாலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் கைகளைச் சமாதானத்திற்காகக் குலுக்கிக்கொண்டிருந்தார் ரொபின். நிர்ப்பந்தம் காரணமாகவே அங்கு வந்துவிட்டது போலவும், முகத்தைக் கடுகடுவென வைத்துக் கொண்டு அரபாத்தைப் பார்ப்பதையே தவிர்த்து வேண்டா வெறுப்பாக அவர் நின்றதைத் தொலைக்காட்சிக் கமெராக்கள் உலகெங்கும் காண்பித்தன.

"அரபாத்தோடு கைகுலுக்குவது எப்படியிருந்தது?" என்று பத்திரிகையாளர்கள் பின்னர் கேட்டதற்கு ரொபின் சொன்னார், "மிகமிகக் கஷ்டமாயிருந்தது. ஆம், வலிக்கிறது. ஆனாலும், பரவாயில்லை. போரைவிடச் சமாதானத்திற்கே அதிக ஆற்றலும், முயற்சியும் தேவை".

★ ஒரே வரியில் உங்கள் இலட்சியம் என்று எதைச் சொல்வீர்கள்?

ஆர்.நித்தியானந்தன், நாவலப்பிட்டி.

மனிதனாக இருக்க முயற்சித்தபடி இருப்பதைத்தான்!

★ உண்மைக்கும், நேர்மைக்கும், ஒழுக்கத்திற்கும் இப்போதும் மதிப்பிருக்கிறதா?

அ.அச்சுதன், சேனையூர்.

மதிப்பிருக்கிறது. அதைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதுதான் அதைக் கடைப்பிடிப்பவர்கள் குறையக் காரணம்.

★ போர்களில் ஈடுபடும் மனிதர்கள் கொலைகளைக் குற்றமாகக் கருதுவதில்லையே, ஏன்?

பாத்திமா றிஸ்னா பாறூக், புதிய காத்தான்குடி-03.

பெரும் பாலும் இனம், தேசியம் ஆகியவற்றிற்குத் தரப்படும் மறுவிளக்கங்களால், எதிராளிகள் மனிதர்கள் அல்ல, விலங்குகள் என்று நியாயப் படுத்தப்பட்டுவிடுகிறது. எனவே கொலைகளைக் குற்றமாய்க் கருதுவோருக்கும் இந்தக் கொலைகள் குற்றவுணர்ச்சியை ஏற்படுத்துவதில்லை.

★ அன்பின் சிந்தியா! அழகு நிலைய வாசலில் எழுதப்பட்டிருந்த வாசகத்தைப் போல சுவாரசியமாக வேறு ஏதும் எடுத்துவிட முடியுமா?

பி.ஆர்.அசோக்குமார், டிக்கோயா.

இதோ மதுபானக்கடையில் இருந்த ஒரு வாசகம்:

"மறப்பதற்காகக் குடிப்பவர்கள், தயவு செய்து குடிப்பதற்கு முன்னே பணம் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்".

உள்ளத்தை உலுக்கும் உடலசைவுகள்...

ஒரு காலத்தில் நீர் பாய்ந்ததற்கான அடையாளங்களை மட்டும் காட்டியபடி காய்ந்து கிடந்தது ஆறு.

பிளந்த மரத்தில் தெரியும் வரிகளெனப் படம் வரைந்து கிடந்த நிலம் பார்க்க அழகாயிருந்தது.

எப்போதோ பாய்ந்த ஈரலிப்பின் அடையாளங்களென இரு கரையிலும் செடி கொடிகள் பச்சையாக மண்டியிருந்தன. நடுவே விரித்துக் காயப்போட்டிருக்கும் வெள்ளைச் சேலையென வெண்மணற்பரப்பு ஆங்காங்கே காற்றினால் எழுதப்பட்ட கவிதைகளைக் கொண்டிருந்தது.

ஆற்றிற்குக் குறுக்கே விழுந்து கிடந்த பெரு மரமொன்றில் வாதுலனும், சிந்துவும் அமர்ந்திருந்தனர்.

வாதுலன் அடிமரத்திலும், அவனிடமிருந்து இரண்டு பாகம் தள்ளி நுனிமரப் பகுதியில் சிந்துவும் அமர்ந்திருக்க, இருவரிடையேும் மௌனம் அமர்ந்திருந்தது.

சிந்து கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

மேலாடையின்றியிருந்த அவன் திரண்ட தோளே அவளை முதலில் ஆச்சரியப்படுத்தியது. முறுக்கேறியிருந்த தசைகளும், குற்றிக்குக் கீழும் நீண்ட அந்தக் கரமும், அதனூடே தெரிந்த குறுகிய இடையும் அவளுள் கிளர்ச்சியை ஏற்படுத்தின.

தூரத்தே எங்கோ நிலைகுத்தியிருந்த அவன் பார்வையைத் திருப்பும் நோக்கில் தன் கால்களை மெல்ல அசைத்தாள் சிந்து.

கொலுசுகள் சிணுங்கின.

அவன் பார்வை திரும்பவில்லை. திரும்ப முடியாதபடி அவன் நினைவு பல்வேறு எண்ணச் சுழலுக்குள் அகப்பட்டுக் கிடப்பதை அவள் அறிவாள்.

கறுப்பும், சிவப்பும் கலந்த அவன் மேனி நிலவொளியில் பளபளத்து மின்னுவதைக் கண்டாள். அதனுள்ளே இருந்த அவன் மனம் படும் அவஸ்தைகளையும் உணர்ந்தாள்.

மெல்ல எழுந்து நடந்து அவனருகில் வந்தமர்ந்தாள்.

அவள் தனக்கு அருகில் வந்து உட்கார்ந்துவிட்டதை அறிந்தான் வாதுலன். தொடர்ந்து அவள் கரமொன்று எழுந்து அவன் தோளைத் தொடவே, சிலிர்ப்புற்று உடலை அசைத்தான்.

அதே சமயம் அவளுடலும் பக்கவாட்டில் அவனை நெருங்கிப் படவே, நிலைகுலைந்து நகர எத்தனித்தான்.

ஆனால், அவளது வலதுகை அவன் தோளில் தவழ்ந்து கழுத்தைச் சுற்றி அவனை அசையவொட்டாமல் தடுத்தது.

மலர் மாலையொன்று கழுத்தைச் சுற்றி வளைப்பது போன்ற உணர்ச்சியைப் பெற்ற வாதுலன், "வேண்டாம் சிந்து" என்றான் தழுதழுத்த குரலில்.

அப்போதும் அவன் முகத்தைத் திருப்பாதிருந்தான்.

சிறிது பக்கவாட்டில் திரும்பிப் பார்த்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்குமோ தெரியாது. பக்கப் பகுதியில் திரும்பாமலே அந்த வார்த்தைகளை மெல்லச் சொன்னபோதும், அவள் அழகுகளின் அசைவுகளை அவன் உணரவே செய்தான். அவள் கன்னம் தன் கன்னத்துக்கருகில் நெருங்கிவிட்டதை அறிந்தான்.

"எதை வேண்டாமென்கிறீர்கள்?" என்று அவன் காதுக்கருகில்

ஒலித்தன இன்பமான சொற்கள்.

"இரவு... தனியே..." என்று குழறினான் வாதுலன்.

"ஆம்! இரவுதான், தனிமைதான்... ஏன் பயமா?" என்று இரகசியமாகக் கேட்டது அவள் குரல்.

அந்த இரகசியம் அவன் சங்கடத்தை அதிகப்படுத்தியது. அசையாதிருந்தபடியே தத்தளித்தான்.

"சிந்து! தவறு நடந்துவிடக் கூடாது" என்று சொன்னான் சங்கடத்துடனேயே.

"என்ன தவறு?" என்றாள், அவன் மேல் தன் உடல் பாரத்தை முழுவதுமாகச் சாயவிட்டபடி,

"தனிமையில்... இருக்கிறோம்... என்னாவது..."

அவள் அவன் காதுக்கருகில் நகைத்தாள்.

அவன் பேச முடியாமல் திகைத்து, தடுமாறியது, உளறியது எல்லாமே அவளுக்கு இன்பமாயிருந்தது. மீண்டும் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று உணர்ச்சிகள் விளைவித்த குழப்பத்தோடு கேட்டான் வாதுலன். அவன் பார்வை ஆற்று மணலையே வெறித்தபடி இருந்தது. திரும்பினால் விபரீதம் நிகழ்ந்துவிடும் என்று பயந்து, மிகச் சிரமப்பட்டு இறுக்கமாக இருப்பவன் போல் காணப்பட்டான்.

"ஏதோ ஆண்களைப் பலமானவர்களாகவும், பெண்களைப் பலவீனர்களாகவும் வைத்துக் கதையளந்து கொண்டிருப்பவர்களை நினைத்துச் சிரித்தேன்..." என்றாள். அவள் உதடுகள் வாதுலனின் காது மடல்களில் உராய்ந்து கூச்சத்தை ஏற்படுத்தின.

உடல் சிலிர்த்தது. எனினும், அசைய முடியாமல் தடுமாறினான். உடலைக் கொஞ்சம் அசைத்தாலும், அவனது இடப்புறத் தோளில் அழுந்தியிருந்த அவளது அழகுத் திண்மைகள் உராய்ந்து இருவர் உடலும் பற்றிக் கொள்ளும் என்ற பயத்திலிருந்தான். பேசாமலிருப்பது கூட, மனதை, அந்த ஸ்பரிசத்திலிருந்து கிளைக்கும் கற்பனைகளுக்குள் தறிகெட்டுப் பாய வைத்துவிடும் என்று பயந்து, "பலத்திற்கு என்ன?" என்றான் மிகவும் நைந்த குரலில்.

"அதுதான் தெரிகிறதே, சொந்தக் கண்களைத் திருப்பவே பலத்தைக் காணோம்..." என்று அவள் குரலே நகைத்தது.

அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை வாதுலனுக்கு. அதுவரை மணலைப் பார்த்திருந்த கண்கள் சரேலென அவளை நோக்கித் திரும்பின.

திரும்பிய வேகத்தில் சரிந்த அவள் உடலும், அவன் மேனியில் உராய்ந்த அவள் அழகுகளும் அவனைத் திகைக்க வைத்தன என்றால், அடுத்து அவளது செய்கையில் பெரும் விபரீதமே நிகழ்ந்தது.

பார்வைகளின் கலப்பில் மின்னல் உண்டாகியிருக்க வேண்டும். இருவர் உடலும் இடியினால் அதிர்ந்தது போல் ஒருகணம் நடுங்கின.

கள்ளச் சிரிப்பை ஒளித்து வைத்திருந்த அவள் கண்களினால் வாதுலன் தடுமாறி நின்ற கணத்தில் அவன் வலது கன்னத்தில் தன் உதடுகளை அழுத்தமாகப் பதித்தாள் சிந்து. அதே அவசரத்துடன் மரத்திலிருந்து மணலில் குதித்தாள்.

இவ்வளவு தூரம் உணர்ச்சிகளின் திடீர்த் திரும்பல்களை வாதுலன் எதிர்பார்க்கவில்லை.

குதித்தபோது குலுங்கிய அவள் அழகுகளால் அவன் நிலைகுலைந்து போனான்.

கண்களை அவள் மேனியிலிருந்து மீட்க முடியாமல் திண்டாடினான்.

அவள் அசைந்தால் அசைபவை அவள் கூந்தலும், ஆடைகளும், ஆபரணங்களும் மட்டுமல்ல; அவள் கழுத்துக்குக் கீழே திரட்சி பெற்றிருந்த அழகுகளும்தான் என்பது அவனைப் பாடாய்ப் படுத்தியது.

இனிய அசைவுகளின் தொகுப்புத்தான் பெண்ணுரு என்று தோன்றியது அவனுக்கு.

உள்ளத்தை உலுக்கும் அசைவுகள்!

கரிய பட்டுத் துணியின் பளபளப்பும் மென்மையுமாக அசையும் கூந்தல், காதுக்கினிய ஒலியெழுப்பியபடி அசையும் ஆபரணங்கள், கவிதையாக அசையும் இரு தனங்கள்...

வாதுலனுக்கு ஜெயங்கொண்டாரின் பெண்கள் நினைவுக்கு வந்தனர்.

அளகபாரம் மிசை அசைய
மேகலைகள் அவிழ
ஆபரணவகை எல்லாம் இளக
மாமுலைகள் இணை அறாமல்
வரும் இயல்நலீர்
கடைகள் திறமினோ.

(கலிங்கத்துப்பரணி: 53)

சிந்தியா பதில்கள்

★ தாம் ஆட்சிக்கு வந்தால் நாட்டைச் சுபீட்சமாக்கிவிடுவோம் என்று வருகிறவர்கள், ஆட்சிக்கு வந்ததும் மக்கள் படும் கஷ்டங்களுக்கெல்லாம் முன்னைய ஆட்சியைத்தான் காரணம் சொல்கிறார்களே தவிர, மக்களின் கஷ்டங்கள் நீங்க எந்த வழியும் சொல்கிறார்களில்லையே?

எஸ்.சுஜி, குடாப்பாடு.

1983 ல் திருமதி மரகதம் சந்திரசேகர் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவராக இருந்த போது, திருச்செந்தூரில் நடைபெற்ற தேர்தலில் எம்.ஜி.ஆரின் அ.இ.அ.தி.மு.க.வும், காங்கிரஸும் மோதின. காங்கிரஸ் தோற்றது. அ.தி.மு. வேட்பாளர் வெற்றி பெற்றார். அப்போது, மறைந்த குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி.அண்ணாமலை அவர்கள், காங்கிரஸ் தலைவர் மரகதம் சந்திரசேகர் கடவுளோடு பேசுவது போல ஒரு நையாண்டி எழுதினார். அது உங்கள் கேள்விக்கும் பொருந்துவதோடு, மனித மனம் செயற்படும் விதம் பற்றியும் அலசுவதால் இங்கு தருகிறேன்.

ம.சந்திரசேகர் கேட்கிறார்: "கடவுளே! நாம் செய்த தவறென்ன?"

"பிரசாரம் சரியில்லை"

"அதெப்படி சாமி சொல்கிறீர்கள்? இவ்வளவு உற்சாகமாக நாங்கள் இதற்கு முன் பிரசாரம் செய்ததே கிடையாதே! எம்.ஜி.ஆரின் முகமூடியைக் கிழிகிழியென்று கிழித்துவிட்டோமே?"

"எப்படி?"

"அவர் அரிசிப் பஞ்சத்திற்கும் விலையுயர்ந்ததற்கும் நாங்கள்தான் காரணம் என்றார்".

"நீங்கள் அரிசி கொடுத்தீர்களா?"

"பஞ்சத்திற்குக் காரணம் அவர் தான் என்று புள்ளிவிபரங்களைப் பிட்டுப் பிட்டு வைத்து நிரூபித்தோம்".

"அப்புறம்...?"

"பிள்ளைகளுக்கு மதிய உணவு போடுவதைப் பற்றிப் பீற்றிக்கொண்டார் அவர்".

"நீங்களும் போடுவதாகச் சொன்னீர்களா?"

"மதிய உணவுத் திட்டத்தால்தான் இந்தத் தட்டுப்பாடு என்பதைப் புள்ளி விபரங்களைக் கொண்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தோம். அடுத்து, மத்திய அரசு, தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்று பழி சுமத்தினார்".

"புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னீர்களா?"

மத்திய அரசு ஒருபோதும் ஆதரவு தர மறுத்ததில்லை என்று புள்ளி விபரங்களைக் கொண்டு நிரூபித்தோம். அவர் தேர்தல் சமயத்தில் திருச்செந்தூர் தொகுதியில் அரிசித் தட்டுபாடு ஏற்படாதபடி சூழ்ச்சி செய்தார். மின்சாரம் தடையின்றிக் கிடைக்கும்படி சதி செய்தார்".

"நீங்கள் அதைப் பாராட்டினீர்களா?"

"அரசாங்க அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று கடுமையாக எதிர்த்தோம்".

"கடைசியில் மக்கள் என்ன செய்தார்கள்?"

"அ.தி.மு.கவிற்கு ஓட்டுப் போட்டு விட்டார்கள். எப்படி என்று தான் ஆச்சரியமாக இருக்கிறது"

"எனக்கு ஆச்சரியமாக இல்லை" என்று சொல்லிக் கடவுள் சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

இராட்சதனின் சாபவிமோசனம்

கோவிந்த ஐயர் என்ற அந்தணரிடம் இந்திரனின் விமானத்தைத் தருவிக்க உதவும் மந்திரத்தைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தன் அவ்வனத்திலிருந்த ஆலமர நிழலில் படுத்திருந்து ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் முன் பயங்கரமான இராட்சதன் தோன்றி அவரை அச்சுறுத்த முயன்றான். ஆனால் அந்த இராட்சதனைக் கண்டு மன்னர் அச்சம் கொள்ளவில்லை. "யார் நீ?" என்று சற்று அதட்டலுடன் கேட்டார்.

தன்னைக் கண்டு பயந்து மருண்டோடிய மானிடர்களையே அதுவரை கண்டு வந்த அந்தக் கோரவுருக்கொண்ட இராட்சதன், விக்கிரமாதித்தனின் அச்சமற்ற துணிவைக் கண்டு ஆச்சரியப்பட்டான். "சாதாரண மனிதனான நீ என்னைப் பார்த்து அச்சங் கொள்ளாமல் அதட்டுகிறாயா?" என்று கடும் சினங் கொண்டவனாகக் கர்ஜித்தான்.

தாகம், தூக்கம் எதுவுமே இல்லாத பிரம்ம இராட்சதனாக அலையும் படி சாபமிட்டார். "அன்றிலிருந்து இன்று வரை நான் இராட்சதனாக மாறி மேலும் கொடுமைகளைச் செய்து வந்தேன். அம் முனீஸ்வரரின் தாள் வணங்கி எனக்கு சாபவிமோசனம் அளிக்க வேண்டும் என்று கேட்டேன். எப்போது ஒரு மனிதன் உன்னைக் கண்டு அச்சம் கொள்ளாமல் நிற்கிறானோ அன்றுதான் உன் பழைய மானிட உருவம் வந்து சேரும் என்று முனீஸ்வரன் சொன்னார். இப்போது உங்களால் எனக்குப் பாவ விமோசனம் கிடைத்துள்ளது" என்று தனது கதையைக் கூறினான்.

அவனிடம் விவரங்களைக் கேட்டறிந்து கொண்ட மன்னர் விக்கிரமாதித்தன், தன்னைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தினார். தன் சாபவிமோசனத்துக்குக் காரணமாயிருந்தவர் மாமன்னர் விக்கிரமாதித்தன் என்பதை அறிந்த அந்த மனிதன் மேலும் மகிழ்ச்சி அடைந்து தனது நன்றியறிதலைக் கூறினான்.

மன்னர் விக்கிரமாதித்தன் அவனை வாழ்த்தி, "உனக்கு என்ன உதவி வேண்டும்" என்று வினவினார். அவன் சற்றுத் தயங்கியவாறு, "மாமன்னரே, எனக்குத் தங்களால் தரக்கூடியது ஒன்றுண்டு. ஆனால் அதனைக் கோர எனக்குத் தயக்கமாக இருக்கிறது" என்றான்.

"பயப்படாமல் எது வேண்டுமோ கேள். கேட்டதை மறுப்பின்றி உனக்குத் தருவேன்" என்று மன்னர் உறுதி அளித்தும், அந்த மனிதன், "தேவரீர் ஓர் அந்தணரை முதலையிடமிருந்து காப்பாற்றியதைத் தொலைவிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தேன். காப்பாற்றப்பட்டதும் அந்த அந்தணர் தங்களுடைய காதுக்குள் ஒரு மந்திரத்தை ஓதினார். அத்தகைய மந்திரம் அதிக சக்தி வாய்ந்த ஒன்றாகவே இருக்கும் என்று நிச்சயம் நம்புகிறேன். தங்களுக்கு ஆட்சேபம் இல்லை எனில் அந்த மந்திரத்தை எனக்குச் சொல்லித் தாருங்கள். ஏற்கனவே எல்லாம் அறிந்த அறிவாளி என்று மமதையில் நான் பல கொடுமைகளைச் செய்திருந்தாலும், எனக்குக் கிடைத்த சாபத்தினால் என் மமதை எல்லாம் அழிந்து போய் விட்டது. ஆகவே இனிமேல் எத்தகைய ஆற்றல் பெற்றாலும் அவற்றை நன்மையான காரியங்களைச் செய்யவே பயன்படுத்துவேன். எனவே எனக்கு அம் மந்திரத்தைச் சொல்லித் தாருங்கள்." என்று வினயமாகக் கேட்டுக் கொண்டான்.

புன்னகை புரிந்த மன்னர் அந்த மனிதனுடைய காதுக்குள் தனக்கு கோவிந்த ஐயரால் ஓதப்பட்ட மந்திரத்தை உபதேசித்தார். அத்துடன், "இம் மந்திரத்தை முறைப்படி ஓதினால் தேவேந்திரனின் வானரதம் உன் முன் தோன்றும். அதில் ஏறி எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். ஆனால், தப்பாக சுயநல மேலீட்டால் விமானத்தைப் பயன்படுத்தினால், அதனால் விபரீதமான விளைவுகளே ஏற்படும்." என்றும் கூறினார்.

அந்த மனிதன் மென்மேலும் பெரு மகிழ்வடைந்து நன்றி கூறி மன்னரை மீண்டும் தாள் பணிந்து வணங்கி விட்டு, மன்னர் உபதேசித்த மந்திரத்தை மூன்று முறை உச்சாடனம் செய்தான். அப்போது வான மண்டலத்திலிருந்து புஷ்பக விமானம் வந்து அவ்விடத்தில் இறங்கியது. மன்னரிடம் விடை பெற்றுக் கொண்டு அந்த மனிதன் விமானத்தில் ஏறி அமர்ந்ததும் விமானம் வானில் எழுந்து ஓர் அன்னப்பட்சி போல் மிதந்து மறைந்தது.

பதினைந்தாம் படியில் காவலுக்கு நின்ற சஞ்சீவி வல்லிப் பதுமை போஜ மன்னரிடம் கதையைக் கூறி முடித்த போது இரவு நெடுநேரமாகிவிட்டது. களைப்படைந்த போஜமன்னரைப் பார்த்து பதுமை "மன்னரே, தன்னை அணுகிய எவர் எதைக் கேட்டாலும் தந்து விடும் பரோபகார சிந்தையுடன் உஜ்ஜயினி மாகாளி பட்டணத்திலிருந்து நீதி வழுவாது அரசு புரிந்த மாமன்னரான விக்கிரமாதித்தனைப் போன்ற நற்குணங்களும் சீரிய பண்புகளும் வேறு எவருக்கும் அமைவது முடியாத காரியம். விக்கிரமாதித்த மன்னரிடமிருந்த அரிய குணங்களில் சிறிதளவேனும் உம்மிடம் இருக்குமானால் மேற்கொண்டும் உமது முயற்சியில் ஈடுபடலாம்" என்று கூறியது.

அதற்கு மேல் அந்தப் படியில் நிற்பதில் பயன் எதுவுமில்லை என்றுணர்ந்த போஜ மன்னர் படிகளிலிருந்து கீழே இறங்கித் தனது அரண்மனையை நோக்கி நடந்தார். அவருடைய உள்ளத்தில் பெரும் துன்ப இழைகள் நிழலாடின. விக்கிரமாதித்த மன்னர் அமர்ந்து பரிபாலனம் செய்த தெய்வீக அரியணையில் அமர்ந்து ஒரு நாளாவது அரச கடமைகளைச் செய்வதற்காக அதுவரை கொண்டிருந்த தனது ஆசை நிராசையாகி விடுமோ என்று விசனப்பட்ட வண்ணம் தூங்கி விட்டார்.

(மன்னன் வருவான்...)

மன்னாதி மன்னன் 115

இராட்சதனுடைய கூற்றைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தனுக்கும் கடும் கோபம் உண்டானது. தனது இடையில் உறையுள் ளிருந்த வாளை உருவி எடுத்தார். அந்த நொடிப்பொழுதில் வான் முட்டத் தன் உருவை வளர்த்திருந்த இராட்சதனை அங்கு காண முடியவில்லை. சாதாரண மனிதன் ஒருவன் தன் இரு கால்களையும் கட்டி அணைத்தபடி தரையில் கிடப்பதை உணர்ந்தார்.

அந்த மனிதர் "உங்களை நான் அறிய மாட்டேன். ஆனால், தாங்கள்தான் என் சாப விமோசனத்துக்குத் துணை புரிந்துள்ளீர்கள். ஆகவே நீங்கள் என் இறைவனுக்கு நிகரானவர். என்னை மன்னித்தருள வேண்டும்." என்று கூறினான். மன்னர் கைலாகு கொடுத்து அந்த மனிதனைத் தூக்கி விட்டு, "உண்மையில் நீ யார்? எதற்காக இராட்சதனாக இதுவரை இருந்தாய்," என்று வினவினார்.

"ஐயா, நான் சகல சாஸ்திரங்களையும் கலைகளையும் கற்றறிந்தவன். ஆனால் அடக்கம் என்பது இல்லாமல் அகம்பாவம் பிடித்து அலைந்தேன். என்னுடைய வித்துவத் தன்மைக்குச் சவாலாக வரும் எவரையும் வாதுக்கு அழைத்து, அவர்கள் தோல்வியுறும் பட்சத்தில் அவர்களை அடிமைகளாக்கி அடக்கி வந்தேன். அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்தேன். என்றாவது ஒரு நாள் எனக்கும் கேடு வரும் என்ற உணர்வே இல்லாமல் வாழ்ந்து வந்தேன். எனது மமதையினால் "ஆண்டவனே இல்லை" என்று நிரூபிக்கவும் முனைந்தேன். இந்தக் காலத்தில்தான் முனீஸ்வரர் ஒருவரைக் கீழ்த்தரமாக வைதேன். கோபம் கொண்ட முனிவர் என்னைச் சபித்தார். ஆயிரம் வருடங்களுக்கு பசி,

காதில பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர வேறொன்று
மில்லை -காதில பூ கந்தசாமி-

எல்லாம் சரிபாருங்கோ, எங்கட புஷ்ஷையா ரணிலண்ணைக்கு என்ன சொன்னவரெண்ட விஷயம்தான் இப்ப எல்லாருக்கும் ஒரே மூடுமந்திரமாக் கிடக்கு. வெறுமனே, "நீ செய் நான் பாத்துக்கொள்ளுறன்" எண்டு மட்டும் சொன்னதா உந்தப் பேப்பர்களெல்லாம் எழுதுது. அதுக்கு என்ன அர்த்தமெண்டு கேட்டால் "இற் மீன்ஸ் எ லொட்" எண்டு அதுக்கு என் னென்னவோ அர்த்தமிருக்கிறதா பீத்திக் கொள்ளுறார் ரணில்.

ஆனால் உண்மையில நடந்த விஷயம் எனக்கு மட்டும்தான் தெரியும். எனக்கு எப்பிடித் தெரியுமெண்ட கேள்வி ஒரு வீசர்க் கேள்வி கண்டியளோ. கந்தசாமியெண்டால் ஒரு இன்ர நேஷனல் செய்திச் சனல் எண்ட பூராணம் தெரியாதவையின்ர கதை.

அது அங்க புஷ்ஷுக்கு சப்பாத்துத் துடைக்கிறவன் தொடக்கம், தோட்டத்துக்குத் தண்ணியூத்திறவன் வரை எனக்கு நியூஸ் தாற விஷயம் யாருக்கும் தெரியாது. ரணிலோட புஷ் நடத்தின உரையாடலை அப்பிடியே கீழ தாறன், வாசிச்சிட்டு யாரும் தாராளமா கொப்பியடிக்கலாம் ஆனால் நான் சொன்னதாச் சொல்லக் கூடாதெண்டது கொண்டிஷன்.

ரணிலக் கண்ட புஷ் "ஹல்லோ அணில், வெல் கம் ரூ அமெரிக்கா."

ரணில்: ஐயாம், ரணில், நொட் அணில். அணில் மீன்ஸ் சம் அனிமல் லைக் ஸ்குரில்.

புஷ்: ஸ்குரில்...? இட்ஸ் எ பெற்ரர் நேம் றாதர். எனிவே, ஏன் வர லேற்றானது?

ரணில்: வாற வழியில வாகனத்துக்கு புஷ் போயிட்டுது.

புஷ்: நோ, நோ. ஐ ஆம் ஹியர். எங்கயும் போகேல்ல. யு ஆர் லேற், யு கேன் கோ.

ரணில் திரும்பி தன்ர உதவியாளருக்குச் சொல்லுறார்: இந்தா பார், புஷ் சொன்னதக் கேட்டியா? ஐ ஆம் ஹியர் யு கேன் கோ எண்டால் என்ன அர்த்தம்? தான் பக்க பலமா இருக்கிறாராம், என்ர சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கட்டாம். உடன பத்திரிகைக்குச் செய்தி குடு.

பின்னர் புஷ்ஷைப் பாத்து: நோ, மிஸ்டர் புஷ், ஐ மஸ்ற் ரோக் ரு யூ. ஐ ஆம் கமிங் ஒல் த வே புறம் சீறீலங்கா. என்னப் போகச் சொல்லாதேங்கோ. நான் இலங்கையில இருந்து இருபது வருஷத்துக்குப் பிறகு உங்கள வந்து பாக்கிறன்.

புஷ்: ஓ, இருபது வருஷத்துக்கு முந்தி என்னை நீர் பாத்தனீரோ...? எங்க?

ரணில்: ஸொரி, என்ர முன்னாள் தலைவர் ஜே.ஆர், உங்கட முன்னாள் தலைவர் ரீகனைப் பாத்தவர். அதுக்குப்பிறகு இரண்டு தலைகளும் பாக்கிற சந்தர்ப்பம் இதுதான் எண்டு சொல்ல வந்தனான். மிழையா நெச்சிடாதேங்கோ.

புஷ்: ஓகே, இருபது வருஷத்துக்குப் பிறகு வாறபடியால் உமக்கு இருபது நிமிஷம் ரைம் தாறன். உம்மட நாடு என்ன சொன்னீர்..?

ரணில்: சீறீலங்கா. முந்தி சீலோன் எண்டுவினம். இந்தியாவுக்குப் பக்கத்தில .... இந்தா மெப்பில இருக்கு, பாருங்கோ.

புஷ்: எங்க, அந்தப் பூதக்கண்ணாடியத் தாரும், ம்..... யா, தெயாரீஸ் எ தினி ஐலெண்ட். யாரப்பா அந்தக் குக்குட்டித் தீவில குடியிருக்கினம்? பேசாமல் எங்கட இராணுவத் தளத்துக்கு வாடைக்கு விட்டிட்டுப் போறதுதானே?

ரணில்: வி ஆர் தேர் மிஸ்டர் புஷ் வீ சிங்களீஸ், சம் ரமில்ஸ், சம் முஸ்லிம்ஸ், அன்ட் அவர் புரொப்ளமெட்டிக் ரைகேர்ஸ்.

புஷ்: ஜஸ்... சரி, உங்களுக்கு என்ன வேணும்?

ரணில்: சம் பீஸ், மோர் மணி! கொஞ்சம் சமாதானம், நிறையப் பண உதவி.

புஷ்: பீஸ்....? வீ டோன்ட் புரடியூஸ் பீஸ். நாங்கள் சமாதானத்தை இங்க உற்பத்தி செய்யிறதில்லை. பட் மணி... வீ கேன் கொன்ஸிடர். எனிவே வீ எக்ஸ்பெக்ட் மெனி! யு அண்டர்ஸ்ருட்...? பணம் தாறதெண்டால் நாங்கள் நிறைய விஷயங்கள உங்களிட்ட எதிர் பார்க்க வேண்டியிருக்கு. வட் டு யு ஹேவ் ரு கிவ் மி? உங்ககிட்ட என்ன இருக்கு எங்களுக்குத் தர?

ரணில்: நோ புறப்ளம். எங்கட மானம், மரியாதை, இறைமை, கிறைமை, கடல், வானம், பூமி எதெண்டாலும் உங்கட விருப்பப்படி எடுத்துக்கொண்டு எங்களுக்கு காசத் தாங்கோ, நான் நீங்கள் சமாதானத்துக்கு உத்தரவாதம் தந்ததா சொல்லிக் கொள்ளுறன்.

புஷ்: வெரி குட்! அதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு. இப்ப பாரும் மிஸ்டர் அணில், ஸொரி, ரணில்... நீர்தான் பிழைக்கத் தெரிந்த ஆள். இப்ப உடன காசு தாறது கொஞ்சம் புறப்ளம். உம்மட அரசாங்கம் ஸ்ரெடியா இருக்குதோவெண்டு ஒரு ரெண்டு மாசம் பாத்திட்டு தாறன். அதுக்கு முதலில நீர் சொன்னீரே பாரும் கடல், வானம் கீனமெல்லாத்தையும் நம்மட ஆக்கள் பாவிக்கத்தக்க ஒப்பந்தத்தை ஒருக்கால் 'கிளியர் பண்ணி வைச்சிடும். அதவிட வேற என்ன...?

ரணில்: நீங்கள் காசு தாறதாச் சொன்னதே போதும். அங்க நாட்டில அடிக்கிணறுவரை கஜானா வத்திப்போய்க் கிடக்குது. இதுக்கு நடுவில சமாதான ஒப்பந்தம் எக்கணம் குழம்பிப் போனால் என்னெண்டு சமாளிக்கிறதெண்டு நெஞ்சு திக்குத் திக்கெண்டு கொண்டு இருக்குது. வண் மோர் ரீக்குவெஸ்ட் மிஸ்டர் புஷ் இப்போதைக்கு சமாதான ஒப்பந்தத்தக் குழப்பாத மாதிரி ஒரு மிரட்டலை மட்டும் காட்டிக்கொண்டு வந்தியளெண்டால் நான் மெல்லச் சமாளிச்சுக் கொண்டு போயிடுவன்.

புஷ்: டோன்ட் வொரி எபௌட் மிரட்டல். தற் இஸ் போர்ன் வித் அவர் பீளட். நீர் சொன்னாலும் சொல்லாட்டிலும் உலகம் முழுவதையும் நாங்கள் மிரட்டிக்கொண்டுதான் இருக்கிறம். ஆனால் பாரும் இந்த பின் லாடன் எண்ட ஒரு பொடிப் பயல், என்னையும் போட்டு மிரட்டியடிச்சபடி இருக்கிறானே.

ரணில்: ஓமோம். ஐ ஆம் வெரி ஸொரி மிஸ்டர் புஷ். உங்கட நாட்டுக்கு நடுவில இருந்த வேர்ஸ்ட் ட்ரேட் சென்டரெண்ட ரெண்டு தூண்களக் காணேல்லையாம். என்ர நாட்டிலயும் உதப்போல ரெண்டக் கட்டி வைச்சிட்டு இப்ப எந்தப் பறவை வந்து இடிக்கப் போகுதோவெண்டு நெஞ்சியாக் கிடக்கு.

புஷ்: அதுதான் வானத்த என்னட்டத் தந்திட்டீரே மேன், டோன்ட் வொரி. ஐ திங் யுவர் ரைம் இஸ் அப்.

ரணில்: நோ நோ, நான் இன்னும் கனநாள் பதவியில இருப்பன், நேரம் இருக்கு.

புஷ்: இப்ப என்னோட பேசிறதுக்குத் தந்த நேரம் முடிஞ்சிட்டு மேன். 20 மினிட்ஸ் பாஸ்ட். ஸோ, குட் பாய்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

இந்தவாரம் உங்கள் பலன்

04.08.2002 தொடங்கி 10.08.2002வரை

சோதிட மாமணி தில்லை

கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், செவ்வாய், வியாழன், சிங்கம் - புதன், கன்னி - வெள்ளி, விருட்சிகம் - கேது, இடபம்- சனி, இராகு,
சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் கால்) காரியானுகூலம். தொழில் விருத்தி. அன்னியர் உதவி. கௌரவம் உண்டாகும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக்குறை நீங்கி மகிழ்ச்சி ஏற்படும். தொழில் விடயங்கள் சீராகும். பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல: 2.

மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் விருத்தி, பணவரவு, மறைமுக எதிர்ப்பு நீங்கல். வெளியிடப் பிரயாணம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லைகள் நீங்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் கூடிய இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 4.

கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) எதிர் பார்த்த கருமங்களில் தடை, மனச்சலக்கம், தொழில் கஷ்டம் உண்டு. வார இறுதியில் இவைகளில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு இதுவரை இருந்து வந்த கல்வி மந்தம் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம். வீண் சிரமங்கள். பணவரவு குன்றும். வீண் பிரயாசை. பெரியோர் தருணத்தில் உதவி. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 3.

கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிறப்பு. பணவரவு. கருமங்களில் வெற்றி. பெரியோர் உதவி உண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் மறைமுக எதிர்ப்பை எதிர் கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் நன்மை. இனசன மகிழ்ச்சி. பணக் கஷ்டம். வெளியிட வாழ்க்கை. அன்னியர் உதவி ஏற்படும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கஷ்டம் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 7.

விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் உயர்ச்சி. குடும்ப மகிழ்ச்சி. இனசன நன்மை. கௌரவம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 7.

தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) மனக்குறை நீங்கும். தொழிலில் உயர்ச்சி நிலை தோன்றும். பணவரவு, கௌரவம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தர்கள் தமது மேலதிகாரிகளால் பாதிப்புறுவர். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் எதிலும் விழிப்புடன் செயற்படுவது நன்மை தரும்.

அதிஸ்ட நாள்:செவ்வாய்.
அதிஸ்ட இல.: 5.

மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழிலில் உயர்வும், பணவரவும் ஏற்படும். பெரியோர் உதவி கிடைக்கும். வார இறுதியில் எதிர்பாரா செலவுக்கு இடமுண்டு. உத்தியோகத்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மறைமுக எதிர்ப்புகள், தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். வார இறுதியில் சில நன்மைகள் ஏற்படும். உத்தியோகத்தில் புதிய முன்னேற்றங்களுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 6.

மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழிலில் சிறு பிரச்சனைகள் தோன்றும். பணக்கஷ்டம் ஏற்படும். பெரியோர்கள் உதவுவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லைகளால் மனக்கசப்புக்கு இடமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

ஜீவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னீதும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

அருள் ஜூவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை
எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

நவீனம்

1வது பிறந்தநாள் வாழ்த்து 05.08.2002

ஊரிக்காடு, வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வசந்தகுமார் -பபி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸவித்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை 05.08.2002 அன்று கனடா, மொன்றியலில் உள்ள

வசந்தகுமார் ஸவித்தன் (Shavithan)

தனது வீட்டில் மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரது அன்பு அப்பா, அம்மா, வல்வெட்டித்துறை அப்பப்பா, கண்டி அன்பு பூட்டி அம்மா, சுவிஸ் அம்மம்மா, மொன்றியல் அருமை அப்பப்பா குடும்பம், வசந்தி மாமி குடும்பம், மைனா மாமி குடும்பம், ஜயந்தி மாமி குடும்பம், பாரிஸ் வசந்தன் மாமா, லண்டன் ரவி மாமா, மாமி, பிரபு மாமா, ஆட்டி மாமா, சுவிஸ் மம்மி அம்மா, பெரியம்மா, பெரியப்பா, பிரித்தி அக்கா, நிகா அக்கா, கண்டி மணி அம்மம்மா குடும்பம், கண்ணா அம்மம்மா குடும்பம், ஆனந்தராஜா அம்மப்பா குடும்பம், சிவஞானம் அம்மப்பா குடும்பம், கொழும்பு (பக் சென்ரர்) கிருஷ்ணராஜா அம்மப்பா, அருண் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர் யாவரும் ஸவிக் குட்டியை, "வல்வெட்டித்துறை சந்நிதி முருகன் அருள் பெற்று ஆரோக்கியமாக, பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்"

தகவல்: அம்மம்மா (சிவஜோதி), சுவிற்சர்லாந்து.

↑ உலகில் உள்ள மிகச்சிறந்த துறைமுகங்களில் சிங்கப்பூர் துறைமுகமும் ஒன்று. தென் கிழக்காசியாவில் முதல்தர துறைமுகமாக இது விளங்குகிறது. சிங்கப்பூரின் அமைவிடம் சர்வதேச கடற்போக்குவரத்தின் மையத் தளத்தில் இருப்பதும் அதி நவீன வசதிகளைக் கொண்டிருப்பதும் சிங்கப்பூர் துறைமுகத்தின் வளர்ச்சியில் சாதகமான அம்சங்கள். சிறிய இடத்தில் கூடுதல் அளவிலான கொள்கலன்களை வைக்கவும், விரைவாக ஏற்றியிறக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இங்கு தாராள வசதி உண்டு. தினசரி ஆயிரக்கணக்கான கொள்கலன்கள் இங்கு ஏற்றியிறக்கப்படுகின்றன. அடிக்கடி வேலை நிறுத்தங்களோ, ஊழல் மோசடிகளோ இல்லாதிருப்பதால் அந்த நாட்டின் பிரதான வருவாய் மார்க்கமாக துறைமுக சேவை விளங்குகிறது.

↓ உலகிலேயே அதிக அளவு திருமணம் நடைபெறும் நாடு அன்டிகுவா. இங்கு ஆண்டுதோறும் ஆயிரத்திற்கு 21 என்ற வீதத்தில் திருமணங்கள் நடைபெறுகின்றன. இரண்டாவது இடத்தில் 19.7 சதவீதத்தைப் பெற்று பெர்முடாவும், 15.7 சதவீதத்துடன் மூன்றாவது இடத்தில் பாபடோசும் இருக்கின்றன. ஜிப்ரோல்டர் என்றொரு குட்டித் தீவு இருக்கிறது. இங்கு திருமண வீதம் 26.7 எனப் பதிவாகியுள்ளது. இது சுதந்திர நாடு அல்ல என்பதால் உத்தியோக பூர்வ புள்ளி விபரங்களில் இதனைச் சேரப்பதில்லை. விவாகரத்து செய்து கொள்வதில் முன்னணி வகிப்பவர்கள் மாலைதீவு வாசிகள். அங்கே திருமணம்

1வது பிறந்தநாள் வாழ்த்து

"இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்" - சங்கீதம் 127:4

சுவிற்சர்லாந்து ஆரிச்சில் வசிக்கும் சேகரன்-சசிரேகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சலோம் அபிஷேக் தனது முதலாவது பிறந்த தினத்தை 07.08.2002 அன்று சுவிற்சர்லாந்தில் ஒன்ன தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரது அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணா, அக்கா, மச்சான், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சனா போதகர்கள், விக

சலோம் அபிஷேக் 07.08.2002

வாசிகள் அனைவரும், சலோம் அபிஷேக்கை இயேசு கிரிஸ்துவின் கிருபையால் உள்ளத் ஞானத்தையும் அறிவையும் நிறைவான ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்கவென ஆசீர்வதித்து வாழ்த்துகிறார்.

"நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீ பெரிய காரியங்களைச் செய்வாய்" சாமுவேல் 26-25

தகவல்: எஸ். பாலகிருஷ்ணன், வந்தனை.

விவாகம்

↑ முடிக்கும் ஆயிரம் பேரில் 11 பேர் ஒரு மாதத்திற்குள்ளாகவே பிரிந்து விடுகிறார்களாம். ஒரு காலத்தில் உலகில் அதிகூடிய திருமண வீதத்தைக் கொண்டிருந்த கியூபா இன்று விவாகரத்து வீதத்தில் முன்னணியில் இருக்கிறது.

வேகம்

→ சக்திவாய்ந்த றொக்கட்டுக்களைக் காவிக் கொண்டு உலகிலேயே மிக வேகமாகப் பறக்கக் கூடிய விமானம் இதுதான் X-15 ரகத்திலான இந்த விமானம் படிப்படியாக நவீன மயப்படுத்தப்பட்டு இன்று X-15A$_2$ என்று அழைக்கப்படும் இது, வேகமாக பறக்கக் கூடியது மாத்திரமன்றி உலகில் மிக உயரத்தில் பறக்கக் கூடியது என்ற சாதனைக்கும் சொந்தமானது. அமெரிக்க விமானப்படையிடம் மாத்திரமே இருக்கும் இந்த விமானத்தில் ஜோசப் ஏ.வோல்கர் என்ற விமானி 1963ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் திகதி 354200 அடி (108 கி.மீ) உயரத்தில் பறந்து சாதனை படைத்தார்.

2வது பிறந்தநாள் வாழ்த்து 05.08.2002

ஹொலண்ட், டென்ஹாக்கில் வசிக்கும் Sunil-Anna தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுமல் கிறிஸ் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 05.08.2002 அன்று ஹொலண்டில் தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரது அன்பு டடா, மம்மா, சகோதர சகோதரி (பிரியங்கா, மனோஜ், சம்பத்) குடும்பம், சிநேகிதர்

செல்வன் சுமல் கிறிஸ் (Sumal Chris)

(சாந்தி, ராஜா, நெவில்) குடும்பம், இலங்கையில் வசிக்கும் சுமித் பெரியப்பா குடும்பம், அப்பம்மா (Magirat nona) மற்றும் அப்பம்மாமார், அம்மம்மாமார், மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா (விஜியா, மைக்கல், மேரி, திரேசா) குடும்பங்கள், மெக்டலின், செல்வராஜ், சிறிமத் அங்கிள் (இத்தாலி), ஜிச்சி, ஜிச்சர்ட் அங்கிள் (பாரிஸ்), அமல் அண்ணன் (லண்டன்) மற்றும் சிநேகிதர், உறவினர் அனைவரும் சுமல் கிறிஸ்லை இறைவன் ஆசி பெற்று நோய், நொடி இன்றிப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்: Srimat uncle, Amindika aunty, என்டெறுமுல்லை.